www.padippakam.com

மே, ஜூன் '92 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை: ரூ.2.50

# புதிய கலாச்சாரம்

## நக்சல்பாரி

ஆதிக்க வர்க்கத்தையும் அரசாங்கத்தையும் அலற வைக்கும் இந்த 'மந்திரச் சொல்லின்' பொருள் என்ன? இமயத்தின் அடிவாரத்தில் 25 ஆண்டுகளுக்கு முன் வெடித்தெழுந்த விவசாயிகள் எழுச்சியை விளக்கும் கட்டுரை.



படிப்பகம்

www.padippakam.com




வளைகுடாப் போரில் இறங்கி ஈராக்கை ரணகளமாக்கிய அமெரிக்கா, அப்போரினால் ஏற்பட்ட செலவை ஈடு கட்ட அமெரிக்க மக்கள் மீது வரிச்சுமையை ஏற்றி கொள்ளையடிக்கிறது. இப்போர் வரியையும் அமெரிக்காவின் ஐ.நா. சபையையும் எதிர்த்து ஒரு நூதன போராட்டத்தை லின்னி கேந்தர் என்ற அமெரிக்கப் பெண் மணி மேற்கொண்டார். கடந்த ஏப்ரல் 12-ந் தேதியன்று ஐ.நா. மன்ற கட்டிட வளாகத்திற்குள் தடையை மீறி காரில் வந்த இவர் உடல் முழுவதும் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு தீக்குளிக்கப் போவதாகக் கூறி காரினுள் உட்கார்ந்துக் கொண்டார். காரினுள் வெடி குண்டுகள் நிரப்பப்பட்டுள்ளதாக ஒரு அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. உள்ளே இருப்பதைப் பார்க்கமுடியாதபடி காரினுள் திரைச் சீலை போட்டு மூடப்பட்டிருந்தது. பீதியடைந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அக்காரைச் சுற்றி ஆம்புலன்ஸ், தீயணைப்பு வண்டிகளை நிறுத்தியும், ஐ.நா. சபை அலுவலகத்திலிருந்து அனைவரையும் வெளியேற்றியும், கேந்தரின் தந்தை மூலம் நைச்சியமாகப் பேசியும் போராட்டத்தைக் கைவிடுமாறு கெஞ்சினர். மூன்று நாட்களுக்கு ஐ.நா. மன்ற செயல்பாட்டை முடக்கி, தனது போராட்டத்தை உலகறியச் செய்த பின்னரே கேந்தர் போராட்டத்தை முடித்துக் கொண்டார். அமெரிக்க சாவு வியாபாரிகளுக்குப் புரியும் மொழியில்தான் கேந்தர் இச் சாகசப் போராட்டத்தை நடத்தியுள்ளார்.

### மாணவர் தேர்வுக்கும் போலீசே கண்காணிப்பாளர்!

அரியானா மாநிலத்திலுள்ள தயானந்தர் பல்கலைக் கழகத்தில் அண்மையில் ஆண்டு இறுதித் தேர்வு நடைபெற்றபோது அப்பகுதி முழுவதும் 144 தடை உத்திரவு போடப்பட்டது. துப்பாக்கி ஏந்திய போலீசார் பல்கலைக் கழகத்தில் குவிக்கப்பட்டனர். மாணவர்கள் காப்பியடித்து தேர்வு எழுதுவதைத் தடுக்கத்தான் இந்த ஏற்பாடு! இதோடு காப்பியடித்து தேர்வு எழுதும் போது பிடிபட்டால் 6 மாதம் சிறைத் தண்டனை உண்டு என்றும் அச்சுறுத்தப்பட்டது. இதை எதிர்த்து மாணவர்கள் திரண்டெழுந்து போராடிய பிறகும் அரசு அசைந்து கொடுக்கவில்லை. பின்னர் கறுப்பு பட்டை அணிந்து கொண்டு மாணவர்கள் தேர்வு எழுதினர். வேடிக்கை என்னவென்றால், பெருமளவில் போலீசார் குவிக்கப்பட்ட போதிலும் பல போலீசார் லஞ்சம் வாங்கிக் கொண்டு மாணவர்களை காப்பியடித்து எழுத அனுமதித்து, பின்னர் இந்த தேர்வுகளே ரத்து செய்யப்பட்டன.

மனப்பாட கல்வி முறையை மாற்றியமைக்காதவரை இத்தகைய கூத்துக்கள் தொடரத்தான் செய்யும்.

### குடும்பக் கட்டுப்பாட்டுக்கும் யாகம் உண்டா?

கேரளாவிலுள்ள எர்ணாகுளத்தில் கடந்த மே 2 ந் தேதி முதலாக ஒருவார காலத்துக்கு குழந்தைப் பேறுக்கான யாகம் எனப்படும் 'புத்ர காமேஷ்டி யாகம்' 75 லட்ச ரூபாய் செலவில் பிரபல பெண் சாமியான ஆனந்தமாயி தலைமையில் நடைபெற்றுள்ளது. இராமாயண கட்டுக் கதையில் வரும் அயோத்தி மன்னன் தசரதன் பிள்ளைவரம் வேண்டி இப்படியொரு யாகம் நடத்தினானாம். அதே போல யாகம் நடத்துவதன் மூலம் இதில் பங்கேற்கும் 4000 பிள்ளையில்லா தம்பதிகளுக்கு குழந்தை பிறக்குமாம். இந்த மூடத்தனத்தை எதிர்த்து பகுத்தறிவாளர்களும், முற்போக்கு சிந்தனையாளர்களும் கடுமையாகப் போராடியபோதிலும், உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்த போதிலும்கூட இந்து தர்மத்தைக் காக்கும் இந்திய அரசு இந்த யாகத்தைத் தடைசெய்யவில்லை. கோடானு கோடி மக்கள் வறட்சியிலும் பட்டினியிலும் பரிதவிக்கும்போது 75 லட்ச ரூபாய் செலவிட்டு யாகம் நடத்துவது வீண்விரயம் மட்டுமல்ல; இந்த யாகத்தின் மூலம் குழந்தை பிறக்கும் என்பதற்கு மருத்துவ ரீதியாக எந்த ஆதாரமும் கிடையாது. மேலும், இந்த யாகத்தின் நோக்கம் ஆண்குழந்தைகளைப் பெறுவதுதான். இது பெண்களை இழிபிறவிகளாக கருதும் ஆணாதிக்க வெறிச் செயலாகும். உலகம் கம்ப்யூட்டர் யுகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் போது, இந்தியா காட்டுமிராண்டி காலத்தை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது.

**அறிவிப்பு**

அன்பார்ந்த வாசகர்களே,

மே-ஜூன் இதழாக வெளி வருகிறது இந்த இதழ். இடமின்மை காரணமாக இவ்விதழில் ''இந்து - இந்தி - இந்தியா'' தொடர் கட்டுரையும், கவிதைகளும் இடம் பெறவில்லை.

சென்ற இதழில் வெளியான ''தஸ்லீமாக்கள் என்பதில் பெருமை கொள்வோம்'' என்ற கட்டுரையில் 'தொடரும்' என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கட்டுரை சென்ற இதழுடனேயே முடிந்துவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

இவண்
ஆசிரியர் குழு

### வயிற்றுக்கு சாராயம் மூளைக்கு எழுத்தறிவு

ஆந்திராவில் செயல்படுத்திவரும் எழுத்தறிவுத் திட்டத்தின்படி, வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் நலகொண்டா மாவட்டத்தை 100% எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக்க ஆட்சியாளர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளனர். இதற்கென ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் ஊக்குனர்களும் கிராமப் புறங்களில் குவிக்கப்பட்டும் கூட விவசாயிகள் யாரும் கல்வி கற்க முன்வருவதில்லை. காரணம், வாட்டியெடுக்கும் வெயிலில் உழைத்துக் களைத்த விவசாயிகள், மாலை நேரங்களில் கள்ளு, சாராயம் குடித்துவிட்டு சுருண்டுவிடுகின்றனர். இலக்கை எப்படியாவது நிறைவேற்றத் துடிக்கும் ஆட்சியாளர்கள், இரவுப் பள்ளிகளுக்கு வரும் விவசாயிகளுக்கு மலிவு விலையில் சாராயம் வழங்கப்படும் என கவர்ச்சித் திட்டத்தை அறிவித்தனர். இந்த திட்டம் அம்பலமாகி கல்வியாளர்கள் கடுமையாக எதிர்க்கத் தொடங்கியதும், சினிமா நடிகர் - நடிகைகளைக் கூட்டி வந்து கலைநிகழ்ச்சி நடத்தி, அதன் மூலம் எழுத்தறிவு திட்டத்தை நிறைவேற்றப் போவதாக இப்போது அறிவித்துள்ளனர். எந்த நடிகர் - நடிகையைக் கூட்டி வந்தால் கூட்டம் சேரும் என்று புரியாமல் அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்களாம்! எப்படியிருக்கிறது காங்கிரசு முட்டாள்களின் எழுத்தறிவுத்திட்டம்?

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 10
● குரல்: 12, 1
● மே, ஜூன் 1992

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டுச் சந்தா: ரூ.30

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US $ 8

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:

சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.

# உரிமை மீறலுக்காக தண்டிக்கப்பட வேண்டியது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலே!

சட்டமன்ற உரிமைப் பிரச்சினையைச் சாக்குவைத்து பத்திரிகையாளர்களைப் பழிவா
வும், தண்டிக்கவும் ஒடுக்கவும் முயன்ற பாசிச ஜெயா கும்பல் ஆப்பசைத்த குரங்காகச் சிக்
கொண்டது. இனி வாலறுபடாமல் தப்பித்தாலே புண்ணியம் என்ற நிலை உருவாகிவிட்ட
இதுவரை இந்த கும்பலைத் தாங்கிப் பிடித்துவந்த "சோ" போன்ற பார்ப்பனப் பத்திரிகையா
களால்கூட நியாயப்படுத்த முடியவில்லை, திசை திருப்பவே முயலுகின்றனர். பாசிச ஜெ
கும்பலோடு முரண்படுபவர்களது கருத்துரிமைக்கு மட்டுமல்ல, உயிருக்கே உத்திரவாதமில்ல
என்பதை இப்பபோதாவது புரிந்துகொண்டுள்ள பத்திரிகையாளர்கள், அதற்குக் கடும் எச்ச
கையும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.

சட்டமன்றத்தில் மிருகபலம் பெற்றுள்ள ஆளும் கூட்டுக் கட்சிகள், தி.மு.க. எம்.எல்.
பரிதி இளம்வழுதியைப் 'பறையன்' என்று ஏசியும், தாக்கியும், வேட்டியை உருவிக் கொண்
உள்ளாடையுடன் வெளியே தூக்கி எறிந்தனர்; இந்தச் சம்பவம் பற்றிய உண்மைச் செய்திக
எழுதியதற்காக 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' நிருபர் கே.பி.சுனில், கோவை மாலை முரசு ஆசி
யர் சுந்தர், முரசொலி ஆசிரியர் செல்வம் ஆகியோர் மீது சட்டமன்ற உரிமை மீறல் குற்றஞ்சா
டி, கூண்டிலேற்றித் தண்டிப்பதாக முடிவு செய்து, அதற்கு அவர்கள் மறுத்த போது பிடிவார
டும் பிறப்பித்தனர். இம் [illegible] வழக்குகளிலுமே பாசிச ஜெயா கும்பல் கூறும் குற்றச்சாட்
ளும் வாதங்களும் வழ[illegible]களை விசாரித்த முறைகளும் எவ்விதத்திலும் நியாயமான
கிடையாது. எனவே[illegible] சட்டமன்றத்துக்குள்ள "வானளாவிய அதிகார"த்தைக் காட்டி உ
நீதி மன்றத் தீர்ப்புகளுக்கு[illegible] கட்டுப்பட மறுக்கிறது.

நீதிமன்றமும் சட்ட மன்றமும் தனித்தனி சுயாதிகாரம் படைத்தவை; ஒன்றுக்கு மற்றொன்
கட்டுப்படத் தேவை இல்லை என்று பாசிச ஜெயா கும்பல் சட்டவாதம் பேசுகிறது. ஆனா
எந்த வழக்கிலும் அடிப்படை ஆதாரம் இருக்கிறதா, விதி முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன
என்பதை விசாரிக்கவும், விவரங்களைக் கோரிப்பெறவும் அடிப்படை உரிமைகள் சம்பந்த
பட்ட வழக்குகளில் தலையிடவும் நீதி மன்றத்துக்கு உரிமை உண்டு. ஆனால் நீதித்துறையை
போல சட்டமன்ற, நாடாளுமன்ற உரிமைகள், அதிகாரங்கள் வரையறுக்கப்படவில்லை. இதை
தான் "வானளாவிய அதிகாரம்" என்கிறார்கள். "எம்.எல்.ஏ, எம்.பி.-க்கள் மக்களின் பிரதிநி
கள். ஆகவே, அவர்கள் பங்கேற்கும் சட்டமன்றங்களும், நாடாளுமன்றங்களும் மக்கள
அதிகாரம் - உரிமைகளைக் குறிக்கின்றன. இந்த வகையில் சட்டமன்றங்கள், நாடாளுமன்
அதிகாரம் - உரிமை நீதிமன்றங்களுக்கு மேலானவை" என்று பாசிச ஜெயா கும்பல் இப்போ
வாதிடுகிறது. இந்திரா 1975-76 அவசரகால பிரகடன பாசிச ஆட்சிக்கு இழுத்துச் சென்ற
முதல் எம்.ஜி.ஆரின் வக்கிரக் காட்டாட்சி உட்பட இதே வாதத்தை முன்வைத்தே நடத்தப்ப
டன. மக்களின் பெயரால் தமது சுயநலனுக்காக, ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கா
இது பயன்படுத்தப்படுகிறது.

லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றங்கள் மலிந்த பாசிச ஜெயா கும்ப
ஆட்சி மிகக் குறுகிய காலத்திலேயே அம்பலப்பட்டுப் போய்விட்டது. சட்டபூர்வ எதிர்
தரப்பை ஒடுக்கிய பிறகு, ஜனநாயக - புரட்சிகர சக்திகள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்
விட்ட பிறகு, இப்போது பத்திரிகைகள் மீது பாய்கிறது. நக்கீரன் போன்ற சில ஏடுகள் மீ
ஆளும் கட்சி - போலீசு ரௌடிகளை ஏவித் தாக்குதல் நடத்தும் அதேசமயம் சட்டமன்
உரிமைப் பிரச்சினைகளைக் கிளப்பி வேறு சில ஏடுகளை ஒடுக்க முயலுகிறது. பத்திரிகைகள்
தனக்கு எதிராக ஆபாசமாக, அவதூறாக எழுதுவதாக பாசிச ஜெயா கூச்சல் போடுகிறார்
ஜானகி-ஜெயா நடத்திய சக்களத்திச் சண்டை முதல் ஜெயாவைக் கொல்ல சதி எனும் குற்ற
சாட்டு வரை, ஆபாசம் - அவதூறுகளின் அவதாரமாக விளங்குவது ஜெயலலிதாதான். அவ
ரும் அவரது பினாமிகளும் கோடிகோடியாகக் கொள்ளையடிப்பது பற்றிய குறிப்பான ஆதா
பூர்வமான குற்றச்சாட்டுக்கள் தாம் வைக்கப்படுகின்றன. நீதிமன்றங்களின் மூலம் அவற்றை
மறுத்து நிரூபிக்கமுடியாத பாசிச ஜெயா, வன்முறையை ஏவுவதோடு, சட்டமன்ற உரிமையைக்
கேடாகப் பயன்படுத்துகிறார்.

உண்மையில் உரிமை மீறலுக்காகத் தண்டிக்கப்பட வேண்டிய பல குற்றங்களை பாசிச
ஜெயா கும்பலும் அதன் சகபாடியான காங்கிரசும்தான் செய்துவருகின்றன. ஆதாரமில்லாவிட்
டாலும் சட்டமன்ற உரிமையைப் பயன்படுத்தி, பல கொலை மற்றும் கொலைச் சதிக் குற்றச்சாட்
டுக்களை எதிர்த்தரப்பினர் மீது சுமத்துவதாக பகிரங்கமாகவே அறிவித்து அவதூறு பேசுகிறது
இந்தக் கும்பல். வேட்டி - சேலை அவிழ்ப்பு, செருப்படி, வக்கிர சைகை, வசவு ஆகிய
ஆபாசங்களையும் செய்கிறது. அதே சமயம் இந்த அசிங்கங்கள் மக்களுக்குத் தெரியவும்
கூடாது, சட்டமன்ற ஆவணங்களில் இடம் பெறவும் கூடாது என்பதற்காக சபைக் குறிப்பிலி
ருந்து நீக்கியும் விடுகிறது. அவற்றைப் பிரசுரித்தாலோ, விமர்சித்தாலோ, சபையின் மரியாதைக்
குக் களங்கம் ஏற்படுத்திவிட்டதாகத் தண்டிக்கிறது. பல ஆண்டுகள் சிறையில் தள்ளவேண்டிய
பல கிரிமினல் குற்றங்கள் செய்துவிட்ட சட்டமன்ற சுயாதிகாரம், காப்புரிமை ஆகிய கவசங்க
ளைப் பயன்படுத்திக் கொண்டு தப்பிவிடுகிறது. உதாரணமாக 'பறையன்' என்று ஏசியதற்காக
தீண்டாமை தடுப்பு குற்றத்தின்கீழ் குறைந்தது 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட
வேண்டும். எனவே சபையின் உரிமைகளை வரையறுப்பதையும்கூட ஏற்க முடியாது; மரி
யாதை கெட்ட சமூக விரோதிகள் பங்கேற்கும் இந்த சபைக்கு எந்தவித சிறப்பு உரிமையுமே
கூடாது. ●

படிப்பகம்

www.padippakam.com

## நக்சல்பாரி எழுச்சியின் 25-ம் ஆண்டு:

# வசந்தத்தின் இடிமுழக்கம்!

**மா**ர்ச்-2 1967: காங்கிரசை முறியடித்து வலது, இடது கம்யூனிஸ்டு கட்சிகளின் ஐக்கிய முன்னணி' அரசாங்கம் மேற்கு வங்கத்தில் பதவியேற்றது. உச்சவரம்புக்கு மேற்பட்ட நிலப்பிரபுக்களின் உபரி நிலங்கள் உடனடியாக கூலி, ஏழை விவசாயிகளுக்கு பிரித்து விநியோகிக்கப்படும் என்றும் தடபுடலாய் அறிவித்தார் மார்க்சிஸ்டு 'கட்சியின் நிலம் மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் ஹரே கிருஷ்ண கோனார். நில விநியோகம் வெற்றியடைய வேண்டுமானால் அமைப்பு ரீதியாகத் திரண்ட நிவசாயிகளின் 'முன்முயற்சி' கீழிருந்து கட்டவிழ்த்து விடப்பட வேண்டும் என்று ஒரு பேச்சுக்கு சொல்லிவைத்தார்.

கீழிருந்து கட்டவிழ்த்து கிளம்பும் விவசாயிகளின் 'முன்முயற்சி' தங்களுடைய பதவி நாற்காலியையே பலி கேட்கும் என்று 'மார்க்சிஸ்டு'கள் எதிர்பார்க்கவில்லை. ஆம்! நிலச் சீர்திருத்தம் அறிவிக்கப்பட்டுவிட்டது; ஆனால் உபரி நிலங்களைத்தான் காணோம். நிலங்கள் வழக்கம் போல பினாமி பெயர்களுக்கு மாற்றப்பட்டன; ஆயிரக்கணக்கில் குவிந்தன கோர்ட் தடையுத்தரவுகள்; சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலம் கோர்ட் தடையுத்தரவுகள் மூலமே முடக்கப்பட்டது. நிலப்பிரபுக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே பயிற்றுவிக்கப்பட்ட அதிகாரவர்க்கம் தனது பங்குக்கு முட்டுக்கட்டை போட்டது. அரசியல் நிர்ணயச் சட்டம், கோர்ட், அதிகார வர்க்கம் ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டு பதவியைத் தக்க வைத்துக் கொள்வதா, அல்லது இவற்றை மீறி விவசாயிகளுக்கு நிலத்தைப் பகிர்ந்தளிப்பதா? தங்களது பதவியா, விவசாயிகளுக்கு நிலமா? இரண்டிலொன்று முடிவு செய்ய வேண்டியிருந்தது. மனுக்களை சமர்ப்பித்துவிட்டு விவசாயிகளைப் பொறுமையாக காத்திருக்கச் சொன்னார்கள் மார்க்சிஸ்டுகள்.

மார்ச்-18, 1967: மேற்கு வங்க மாநிலத்தின் வடபகுதியில் சிலிகுரி தாலுகாவில் 'மார்க்சிஸ்டு 'கட்சியின் விவசாயிகள் சங்க மாநாடு நடந்து கொண்டிருந்தது. ''நிலப்பிரபுக்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். பறிமுதலும் விநியோகமும் செய்யும் அதிகாரம் விவசாயிகள் கமிட்டிகளுடையதுதான். இதைச் செய்ய வேண்டுமெனில் நிலப்பிரபுக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க நாம் ஆயுதம் ஏந்த வேண்டும். நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டம் என்பது நிலப்பிரபுக்களை எதிர்ப்பதுடன் முடிந்துவிடாது; அவர்களுக்கு ஆதரவாக வருகின்ற மத்திய, மாநில அரசுகளையும் நாம் எதிர்த்து நின்றாக வேண்டும். எனவே ஒரு நீண்டகாலப் போருக்கு நாம் தயாராக வேண்டும்'' விவசாயிகள் சங்கத்தின் சிலிகுரி தாலுகா செயலர் ஜங்கல் சந்தாலும், மார்க்சிஸ்டு 'கட்சியின் மாவட்டக் கமிட்டி உறுப்பினர் கனு சன்யாலும் பேசிக் கொண்டிருந்தனர்.

இன்னொரு புறம் கட்சி உறுப்பினர்களில் ஒரு பிரிவினரிடம் 'மார்க்சிஸ்டு கட்சியில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசிக் கொண்டிருந்தார் சாரு மஜும்தார்:

''முதலாவதாக, நிலப்பிரபுக்களின் நிலத்தை பலவந்தமாகப் பறித்தெடுப்பதற்குப் பதிலாக இந்தச் சீர்திருத்தம் விவசாயிகளை அதிகாரவர்க்கம் மற்றும் நிலபபிரபுக்களின் காலில் விழவைக்கிறது. இரண்டாவதாக, நிலப்பிரபுக்களின் நிலத்தை பலவந்தமாகப் பறிமுதல் செய்த விவசாயிகளுக்கும், சட்டபூர்வமாகப் பெற்ற விவசாயிகளுக்குமிடையில் இது மோதலையும் முரண்பாட்டையும் தோற்றுவிக்கும். மூன்றாவதாக சட்டபூர்வமாக நிலத்தைப் பெற்ற விவசாயிகள் காலப்போக்கில் மந்தமான, இந்த சமூக அமைப்பு முறையை எதிர்க்காத நடுத்தர விவசாயிகளாக மாறி போர்க் குணத்தை இழக்கின்றனர்; அத்துடன் நிலமற்ற பிற கூலிவிவசாயிகளை இழிவாகவும் பார்க்கத் தொடங்குகின்றனர்''.

'மார்க்சிஸ்டு'களின் நாற்காலிப் புரட்சிக்கு எதிரான கலகக் கொடி நக்சல்பாரியில் உயர்ந்தது ஏதோ தற்செயலாக நடந்துவிட்ட சம்பவமல்ல; மார்க்சிஸ்டு கட்சிக்குள் இருந்த புரட்சிகர முன்னணியாளர்கள் ஆயுதப் போராட்டம், கிராமப்புறங்களில் தளப்பகுதிகளை அமைப்பது ஆகிய கருத்துக்களை 1965 முதலே முழங்கி வந்தனர். இதன் அடிப்படையில் சிறு சிறு இயக்கங்கள் பல கட்டியமைக்கப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த ஜோதிபாசு, ரணதிவே, பிரமோத் தாஸ்குப்தா, சுந்தரய்யா போன்றோர் அவர்களை அவதூறு செய்தனர். சாரு மஜும்தாரைப் பைத்தியக்காரன் என்றும் போலீஸ் உளவாளி என்றும் வசைபாடினர். ஆனால் அவதூறுகளால் தங்கள் வீழ்ச்சியை அவர்கள் தடுக்க முடியவில்லை.

1966 இல் சிலிகுரி பகுதியில் நடந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் 16 நாள் வேலைநிறுத்தம், அடுத்த ஆண்டில் வெடிக்கக் காத்திருந்த நக்சல்பாரி உழவர் எழுச்சியில் முன்னணிப் பாத்திரமாற்ற தொழிலாளர்களைத் தயார் செய்தது.

மேலே செல்வதற்கு முன் நக்சல்பாரிப் பகுதியைப் பற்றி ஒரு சித்திரத்தைத் தெரிந்து கொள்வோம். டார்ஜிலிங் மாவட்டத்தின் முந்நூறு சதுர மைல் பரப்பளவில் அமைந்துள்ள பகுதிகள் நக்சல்பாரி, கரிபாரி, பன்சிதேவா ஆகியவை. நக்சல்பாரி பூகோளரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்த

**கல்கத்தாவில் நக்சல்பாரி புரட்சியாளர்களின் ஊர்வலம்**



படிப்பகம்

www.padippakam.com

பகுதி. மேற்கு வங்காளத்தின் குறுகலான வடமுனையில் மேற்கே நேபாளம், கிழக்கே வங்காள தேசம் (அன்று கிழக்கு பாகிஸ்தான்). இந்த வடமுனையை இணைக்கும் மெல்லிய கழுத்துதான் நக்சல் பாரி. நேபாளத்திற்கும் நக்சல்பாரிக்கும் இடையில் ஓடும் 'மெச்சி' ஆற்றை கோடை காலங்களில் கடப்பது வெகு எளிது. மொத் தத்தில் பூகோளரீதியில் மிகவும் சாதகமான பகுதி. ★ விவசாயிகள் பெரும்பாலும் சந் தால், ராஜ பன்ஷி, ஒரேயான் ஆகிய பழங் குடி இனங்களைச் சேர்ந்தவர்கள். விதை, ஏர், மாடு ஆகிய அனைத்தையும் கொடுத்து விளைச்சலில் பெரும்பங்கை குத் தகையாக் விழுங்கிக் கொண்டிருந்தனர் நிலப்பிரபுக்கள். விவசாயிகளின் நில வெளியேற்றம் என்பது வெகு சகஜம்

மார்க்சிஸ்டுகளின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிலச் சீர்திருத்தம் பற்றிப் பேசத் தொடங்கு முன்னரே குத்தகை விவசாயிகள் ஆங்காங்கே ஏராளமாக வெளியேற்றப்பட் டனர். நக்சல்பாரி கிராமத்திலேயே நடை பெற்ற ஒரு சம்பவம் விவசாயிகளின் கண் ணைத்திறக்க உதவியது. பிகுல் கிஷன் என்ற குத்தகை விவசாயி நிலப்பிரபுவால் வெளியேற்றப்பட்டார். கோர்ட் உத்தரவு பிகுல் கிஷனுக்கு ஆதரவாக இருந்த போதி லும் நிலப்பிரபுவின் ஆட்கள் அவரை அடித்து விரட்டினர். நீதி மன்றமோ, அர சாங்கமோ தங்களைப் பாதுகாக்காது என் பதை இச்சம்பவம் விவசாயிகளுக்கு புரிய வைத்தது.


இன்னொருபுறம் பல்லாயிரக்கணக் கான ஏக்கர் தேயிலைத் தோட்டங்களை வைத்திருந்த முதலாளிகள், தோட்டத் தொழிலாளிகளை தங்களது விளைநிலங்க ளில் குத்தகை விவசாயிகளாகவும் பயன்ப டுத்தினர்.

விவசாய நிலங்களையும் தேயிலைத் தோட் டம் என்று கணக்கு காட்டி உச்சவரம்பிலி ருந்து தப்பித்துக் கொண்டனர். இன்னொரு புறம் தாங்கள் நினைத்த நேரத்திலெல்லாம் தோட்டத் தொழிலாளிகளை வேலைநீக்கம் செய்தனர்

இந்தத் தோட்டத் தொழிலாளர் கள் நக்சல்பாரி விவசாயிகளுடன் சேர்ந்து ஆயுதம் ஏந்தினர்; தோளோடு தோள் நின்ற னர்; தங்கள் கூலிக்கு மட்டும் போராடும் தொழிற்சங்கவாதத்திலிருந்து நக்சல்பாரி உழவர் எழுச்சி அவர்களை விடுவித்தது.

மார்ச்-18 இல் நடந்த மாநாடு விவசா யிகளுக்குப் புத்துணர்வூட்டியது. கடும் உழைப்பினால் உணர்ச்சியற்று இறுகிக்கி டந்த விவசாயிகளின் முகம் நம்பிக்கையு டன் ஒளிர்ந்தது

ஏப்ரல் மாதத்திற்குள் அந்த வட்டாரத்திலிருந்த எல்லா கிராமங்களிலும் விவசாயிகள் கமிட்டி அமைக்கப்பட்டுவிட டது. 15,000 முதல் 20,000 விவசாயிகள்



**கல்கத்தா - 1969 இடைத்தேர்தலைப் புறக்கணிக்கக்கோரும் நக்சல்பாரி சுவர் எழுத்துக்கள்**

தங்களை முழுநேர ஊழியர்களாகப் பதிவு செய்து கொண்டனர். எல்லா கிராமங்களி லும் ஆயுதம் தாங்கிய செங்காவலர் குழுக் கள் அமைக்கப்பட்டன.

உடனே துவங்கின நடவடிக்கைகள். பட்டாக்கள், கடன் பத்திரங்கள் அனைத்தும் எரிக்கப்பட்டன நிலப்பிரபுக்களின் ஆயு தங்களும், துப்பாக்கிகளும் பறிமுதல் செய் யப்பட்டன. கொடும் நிலப்பிரபுக்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. வில் லும் அம்பும், கோடரியும், துப்பாக்கிகளும் ஏந்திய விவசாயிகள் நிர்வாகத்தைத் தங் கள் கையில் எடுத்துக் கொண்டனர். இந்தப் பிராந்தியத்தின் காவல் நிலையங்கள் செய லிழந்தன. விவசாயிகளின் அனுமதியின்றி யாரும் அப்பிராந்தியத்தினுள் நுழையக் கூட முடியாது என்ற நிலைமை மே மாதத் தில் சாதிக்கப்பட்டுவிட்டது.

நிலைமை கட்டுக்கு மீறிச் செல்வதைக் கண்டு அஞ்சிய வருவாய்த்துறை அமைச் சர் ஹரே கிருஷ்ண கோனார் 'அதிருப்தியா ளர்களை' சமாதானப்படுத்த சிலிகுரிக்கு விரைந்தார் ''நக்சல்பாரியில் சட்டவிரோத மான நிலப் பறிமுதல்கள் எல்லாம் உடனே நிறுத்தப்படும் என்றும், கனு சன்யால், ஜங் கல் சந்தால் போன்ற போலீசால் தேடப்ப டும் நபர்கள் சரணடையவும் ஒப்புக் கொண் டுவிட்டதாகவும் \ அறிவித்தார்'' இது. கடைந்தெடுத்த பொய் என்று மறுத்தனர் புரட்சியாளர்கள்.

மே-23, 1967: நக்சல்பாரி விவசாயிக ளுக்கு எதிரான அரசின் போர் தொடங்கி யது. தங்களது தலைவர்களைக் கைது செய்ய முயன்ற போலீஸ் படையை ஆயு தம் தாங்கிய விவசாயிகள் திருப்பித் தாக்கி னர் ஒரு காவலர் கொல்லப்பட்டவுடன் பின்வாங்கிய போலீசு 25-ம் தேதி பெரும்ப டையுடன் வந்து மீண்டும் தாக்கியது. ஆறு பெண்கள், இரு குழந்தைகள் உள்ளிட்ட 9 பேரைக் கொன்றது. விவசாயிகள் பலர் கைது செய்யப்பட்டனர். தலைவர்களைக் காட்டிக் கொடுக்குமாறு போலீசு செய்த சித் திரவதைகளால் இம்மியும் பயனில்லை. ''போலீசை ஏன் தாக்கினீர்கள்?'' என்ற கேள்விக்கு விவசாயிகள் பதிலளித்தார்கள்: ''நாங்கள் சுதந்திரக்காற்றை சுவாசிக்க விரும்பினோம்''

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மார்க் சிஸ்டு' கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் பெரும் கொந்தளிப்பை தோற்றுவித்தது. கட்சித் தலைமை இறந்து போனவர்களுக் காக நீலிக் கண்ணீர் வடித்தது. ஆனால் மார்க்சிஸ்டு கட்சி இரு கூறாகப் பிளவுபடு வதை நீலிக்கண்ணீரால் தடுக்க இயல வில்லை.

''நக்சல்பாரிப் பாதையே விவசாயப் புரட்சியின் பாதை'' ''கொலைகாரன் அஜாய் முகர்ஜியே ராஜினாமா செய்'' என்ற முழக்கங்களால் கல்கத்தா நகரச் சுவர் களை முழங்கவைத்தனர் கல்கத்தாவின் புரட்சிகர மாணவர்கள்.

**வில்லும் அம்பும், கோடரியும், துப்பாக்கிகளும் ஏந்திய விவசா யிகள் நிர்வாகத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டனர். இந்தப் பிராந்தியத்தின் காவல் நிலையங்கள் செயலிழந்தன. விவசாயிகளின் அனுமதியின்றி யாரும் அப்பிராந்தியத்தினுள் நுழையக்கூட முடியாது என்ற நிலைமை மே மாதத்தில் சாதிக் கப்பட்டுவிட்டது.**

படிப்பகம்

www.padippakam.com

# காலத்தைப் பிரதிபலிக்காத 'காலத்தின் கண்ணாடிகள்'

**இந்தியப் புரட்சியின் விடிவெள்ளியாய் மார்க்சிய லெனினியக் கட்சி தோன்றியதை அன்றைய முதலாளித்துவப் பத்திரிகைகள் எப்படி எதிர்கொண்டன தெரியுமா? அவர்களது மடமைக்கும், ஆத்திரத்திற்கும், எச்சரிக்கை உணர்விற்கும் சில உதாரணங்கள்:**

தங்களை நக்சலைட்டுகள் என்று அழைத்துக் கொள்ளும் விரல் விட்டு எண்ணத்தக்க சில சாகசவாதிகளின் தெருச்சண்டைகளால் குடிமக்கள் பலர் கல்கத்தாவில் காயமடைந்துள்ளனர்; சென்னையின் சில பகுதிகளில் அடிமுட்டாள்தனமான 'மாவோயிஸ்டு சுவரொட்டிகள் முளைத்திருக்கின்றன. இவையோ கேரளத்தில் திரு நம்பூதிரிபாடு அவர்களின் கட்சியிலிருந்து வெளியேறியுள்ள சந்தேகத்திற்கிடமான 'புரட்சியாளர்களின்' அபத்தமான சாகசங்களோ, மூன்றாவது கம்யூனிஸ்டு கட்சியொன்றின் தோற்றம் குறித்த கனுசன்யாலின் மே தின அறிவிப்போ அரசியல் முக்கியத்துவமுடைய நிகழ்ச்சிகள் அல்ல; ஆனால் இரு கம்யூனிஸ்டு கட்சிகளும், இந்திய இடதுசாரிகளும் இதை எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளவில்லையெனில், கூடிய விரைவில் இது பெரும் தலைவலியாக மாறும்.

**-பேட்ரியட், ஆங்கில நாளேடு**

நக்சல்பாரியின் 'சிறுபொறி', கல்கத்தா நகரில் சில பஸ்களுக்கும் டிராம்களுக்கும், கேரளத்திலும் ஆந்திரத்திலும் சில கிராமப்புற குடிசைகளுக்கும் வேண்டுமானால் தீ மூட்டலாம். நாடு முழுவதும் 'காட்டுத்தீயை மூட்டுவதற்கான அவர்களது திட்டத்தை பாரதூரமாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

**-ஸ்டேட்ஸ் மேன், ஆங்கில நாளேடு**

மார்க்சிஸ்டு கட்சி தொடர்ந்து உயிர் வாழ விரும்புகிறதா என்பதையும் எப்படி எதிர்த்துப் போராடப் போகிறது என்பதையும் அது முடிவு செய்துகொள்ள வேண்டும்... மார்க்சிஸ்டுகளுக்கு இது ஒரு சோதனை. மே.வங்கத்திலும் பிற இடங்களிலும் அவர்களின் பதவியில் நீடிக்க வேண்டுமானால் சில 'கடுமையான' முடிவுகளை அவர்கள் எடுத்தாக வேண்டும்.

**-டைம்ஸ் ஆப் இந்தியா**

கிராமப்புறங்களில் நக்சல்பாரியை மீண்டும் நிகழ்த்திக் காட்டுவதற்கு அவர்களுக்கு இருக்கும் ஆற்றலை குறைத்து மதிப்பிடக் கூடாது. தான் நினைத்தால் ஒரே நாளில் நக்சலைட்டுகளை மே.வங்கத்தில் ஒடுக்கிவிட முடியும் என்று ஜோதிபாசு பேசியிருப்பது அடிமுட்டாள்தனமானது.

**- இந்தியன் எக்ஸ்பிரஸ்**

பத்திரிகைகளின் ஆலோசனைகளும் அலட்சியங்களும் ஒருபுறமிருக்க நாடு முழுவதும் கிராமப்புறங்களில் என்ன நடந்து கொண்டிருந்தது. இதோ மே.வங்க மாநிலம் பீர்பும் மாவட்டத்திலிருந்து ஒரு செய்தி - மாதிரிக்கு.

கையில் துப்பாக்கிகள், நாட்டுத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் கோடரிகளுடன் சுமார் 300 பேர் மாதவ்பூர் கிராமத்திற்குள் நுழைந்து தாரபாதா என்பவரின் வீட்டைச் சோதனையிட்டனர். தாரபாதா ஒரு கொடூரமான நிலப்பிரபு என்பதுடன் ஒரு டாக்டரும் கூட. 'கொல்... கொல்... தாரபாதாவைக் கொல்' என்று முழங்கிக் கொண்டே நூற்றுக் கணக்கான சந்தால் பழங்குடியினரும் இளைஞர்களும் வீட்டில் புகுந்து தாரபாதாவை இழுத்துக்கொண்டு வந்து மரத்தில் கட்டினர். தாரபாதாவின் உறவினர்கள், ...

நக்சல்பாரியோ தொடர்ந்து தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்து வந்தது. ஜூன் 8 முதல் 10 தேதிகளுக்குள் 80 நிலப் பறிமுதல்கள், 13 நிலப்பிரபுக்களின் வீடுகளில் கொள்ளை, இரண்டு கொலைகள், ஒரு கடத்தல், ஆயுதம் தாங்கிய குழுக்களின் வரிவசூல் நடவடிக்கைகள், விவசாயிகளின் மக்கள் கோர்ட்... - என புள்ளி விவரங்களைக் காட்டி அலறியது போலீசு.

நக்சல்பாரியில் 'தீவிரவாதி'களின் நடவடிக்கை காரணமாக சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாக பாராளுமன்றத்தில் அறிவித்தார் மத்திய உள்துறை அமைச்சர் ஒய்.பி.சவான். (இவ்வறிவிப்பின் மூலம் மார்க்சிஸ்டு கட்சிக்கு உள்ளேயே இருக்கும் தீவிரவாதிகளைத் தனியே பிரித்து அடையாளம் காட்டினார் சவான்). ஹரே கிருஷ்ண கோனார், வலது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த பாசனத்துறை அமைச்சர் விஸ்வநாத் முகர்ஜி மற்றும் சிலர் அடங்கிய அமைச்சர்கள் குழு 'தீவிரவாதி'களை நல்வழிப்படுத்த நக்சல்பாரிக்கு விரைந்தது; சென்ற வேகத்தில் தோல்வி கண்டு திரும்பியது.

ஜூன் இறுதியில்'மார்க்சிஸ்டு கட்சித்தலைமை நக்சல்பாரி புரட்சியாளர்களை வெளிப்படையாகத் தாக்கத் தொடங்கியது. மார்க்சிஸ்டு கட்சியிலிருந்த புரட்சிகர அணிகளும் கல்லூரி மாணவர்களும் ''நக்சல்பாரி விவசாயிகள் போராட்ட ஆதாவுக் குழு'' ஒன்றைக் கட்டி ஜூன் 27-ம் தேதி சட்டசபையின் முன் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். மார்க்சிஸ்டு கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் சுசிதல் ராய் சவுத்ரி உள்ளிட்ட 19 பேர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

''சீறிவரும் இந்தியப் பரட்சிச் சிறுத்தையின் முன் பாதம்'' என்று நக்சல்பாரி எழுச்சியைத் தனது ஜூன் 28-ம் தேதி ஒலிபரப்பில் வருணித்த பீகிங் வானொலி, மார்க்சிஸ்டுகளின் ஐக்கிய முன்னணி சர்க்காரை ''மக்களை ஏய்க்கும் எதிர்ப் புரட்சியாளர்களின் கருவி'' எனச் சாடியது.

ஜூலை 12-ம் தேதி மிருக பலத்துடன் மீண்டும் நக்சல்பாரியின் மீது படையெடுத்தது போலீசு. ஜங்கல் சந்தாலும் முன்னணிப் போராட்டவீரர்கள் பலரும் கைது செய்யப் பட்டனர்.

மார்க்சிஸ்டு கட்சியின் வங்காளி வார இதழான தேஷ்-ஹிதாஷியின் ஆசிரியராக இருந்த சுசிதல்ராய் சவுத்ரி கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு முன்பிருந்தே நக்சல்பாரி எழுச்சியை ஆதரித்து அதில் எழுதி வந்தார். வெளியேற்றப்பட்டபின் பத்திரிகை அலுவலகத்தைக் கைப்பற்ற மார்க்சிஸ்டு குண்டர்கள் முயன்றபோது மோதல் வெடித்தது.

சுசிதல் ராய் சவுத்ரி 'தேசப்ரதி' என்ற வங்காளி நாளேட்டையும், பின்னர் 'லிபரே



## தடா, என்.எஸ்.ஏ தோழர்கள் விடுதலை!

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட தஞ்சை ம.க.இ.க. தோழர்கள் காளியப்பன், அருள், பாலசுப்பிரமணியன், ஆனந்தராஜ் ஆகியோரை சென்னை உயர்நீதி மன்றம் விடுதலை செய்துவிட்டது.

'தடா'வில் கைது செய்யப்பட்ட கடலூர், நெய்வேலி தோழர்கள் அருள்மணி, ரமேஷ், பாலு, கிருஷ்ணா, செந்தில்குமார் ஆகியோரை சிறப்பு நீதிமன்றம் நிபந்தனை ஜாமீனில் விடுவித்துள்ளது.

தாங்கள் விடுதலை செய்யப்பட்டாலும், மக்களின் விடுதலையை சாதிக்கும் வரை அந்தத் தோழர்கள் ஓயமாட்டார்கள். பார்ப்பன ஜெயலலிதா கும்பலின் அடக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் எம்முடன் தோளோடு தோள் நின்ற நண்பர்களுக்கும், முகம் தெரியாத போராட்டக்காரர்களுக்காக முகம் சுளிக்காமல் உதவிய தமிழக மக்களுக்கும், எமது போராட்டத்தைத் தொடர்வதன் மூலம் நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம்.

இவண்
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
தமிழ்நாடு.

படிப்பகம்

www.padippakam.com

வினர்கள் அழுதனர்; சிலர் அந்தக் கூட்டத்தின் தலைவரின் காலில் விழுந்து தாரபாதாவுக்கு உயிர் பிச்சை கேட்டனர். அதற்குள் கிராமமே அங்கு கூடிவிட்டது.

சிறிது நேரம் கழித்து தாரபாதா மக்களுக்கிழைத்த கொடுமைகளை ஒருவர் சுருக்கமாக விளக்கினார். ''இவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?'' ''இவன் மேலும் உயிர் வாழ்ந்து சமூகத்தை சீரழிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா?'' என்று கேள்வி எழுப்பினார்.

பெரும்பாலான மக்கள், குறிப்பாக ஊர்வலமாக வந்த சந்தால் பழங்குடியினர் ''மரணம்... மரணம் தவிர இவனுக்கு வேறு தண்டனை இல்லை'' என்று முழங்கினர். ''சரி. தாரபாதாவுக்கு மரணதண்டனை'' என்று கூறி கூட்டத்தில் இருந்த சந்தால் ஒருவரின் கையில் துப்பாக்கியைக் கொடுத்து சுடச் சொன்னார் கூட்டத்தின் தலைவர். அவரது குறி தப்பிவிடவே இன்னொரு இளைஞனின் கையில் துப்பாக்கியைக் கொடுத்தார். ஒரே குண்டில் தாரப்பாதாவின் மார்பு துளைக்கப்பட்டது.

நிலப் பிரபுக்களைப் போலவே பெரிதும் சோகத்திற்கு ஆளாகியிருப்பவர்கள் கந்து வட்டிக்காரர்கள். வட்டியையும், முதலையும் தள்ளுபடி செய்துவிட்டு அடகு வாங்கிய பொருட்களையெல்லாம் உரியவர்களிடம் உடனே திருப்பித்தரவில்லையென்றால் அவ்வர்கள் சுட்டுத் தள்ளப்படுவார்கள் என்றும் அவர்களது உடல் தெரு நாய்களுக்கு தீனியாக்கப்படும் என்றும் நக்சல்பாரிகள் எச்சரித்துள்ளனர். இதனால் வட்டிக் கடைக்காரர்கள் மத்தியில் பெரும் பீதியும் குழப்பமும் நிலவுகிறது. பலர் கட்டளையை நிறைவேற்றிவிட்டார்கள்.

உகில்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சமந்தா என்ற லேவாதேவிக்காரருக்கு இது போல ஒரு நோட்டீஸ் வந்தது. முதலில் அவர் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அசலையும் வட்டியையும் தள்ளுபடி செய்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் பற்றி அவர் கட்சி பிரதிநிதிகளிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தார். ''கட்டளைகள் நிறைவேற்றப்படவில்லையென்றால் உன் தலை தெருவில் உருளுவதை நாளை காலை உன் உறவினர்களும் நண்பர்களும் காண நேரிடும்'' என்றொரு கடிதம் வந்தது.

தனது எல்லை நெருங்கிவிட்டதென்பது அந்த லேவாதேவிக்காரருக்குப் புரிந்துவிட்டது. ஒரு கணம் தாமதித்தாலும் அபாயம்தான். உடனே அவர் தன் கடைவாயிலில் எழுதித் தொங்கவிட்டார், ''அடகு வைத்தவர்கள் அனைவரும் 72 மணி நேரத்திற்குள் பொருட்களை மீட்டுச் செல்லவும். அவர்கள் அசலையோ வட்டியையோ திருப்ப வேண்டியதில்லை. நான் தொழிலையே கைவிடுவதாக உள்ளேன்''.

ஸ்ரீகாகுளம் பகுதி பற்றி எழுதிய இந்து பத்திரிகை நிருபர் இவ்வாறு குறி
பிட்டார்:

இன்று தலைமறைவாக இருக்கும் நக்
லைட்டு தலைவர்களில் பலர் மூன்றாண்டு
ளுக்கு முன்பு வரை ஆக்கிரமிக்கப்பட்
நிலங்களை பழங்குடியினருக்கு திரும்ப
தரவேண்டும் என்று கோரி வருவாய்
துறை அலுவலகங்களின் முன் உண்ணாவி
ரதம் இருந்து கொண்டிருந்தவர்கள்தான்..
இங்கே நக்சலைட்டு இயக்கத்தின் தோற்
வாய் 1956 இல் தொடங்கப்பட்ட கூலி வி
சாயிகளின் சங்கம்தான்.

ஒரு முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.
தனது பொறுமலை இப்படி வெளியிட்
டார்.

''நக்சலைட்டுகளிடம் உள்ள பெரி
பிரச்சினையும், அவர்களை மக்களிடமி
ருந்து தனிமைப்படுத்த முடியாமல் போவ
தற்கும் காரணம் இதுதான் - கிராமத்து மக்
கள் அனைவராலும் வெறுக்கப்படுகின்ற
மோசமான சுரண்டல்காரனைதான் அவர்
கள் தெரிவு செய்கிறார்கள். அத்தகைய நபர்
ஒழித்துக் கட்டப்பட்டவுடன் கிராமமே நி
மதிப் பெருமூச்சு விடுகிறது. மக்கள் நக்
லைட்டுகளுக்கு மனப்பூர்வமாக நன்றிக்
டன் பட்டவர்களாகி விடுகிறார்கள். போலீ
சும் கட்சித் தலைவர்களும் போகும்போது
அவர்களிடம் 'நக்சலைட்டு தொல்லை'
பற்றி மக்கள் கூறுவதெல்லாம் சும்மா கண்து
டைப்புதான்.

சன்' ஆங்கில இதழையும் தொடங்கினார். இரண்டு இதழ்களும் 'மார்க்சிஸ்டு'களைச் சித்தாந்தரீதியாகத் தோலுரிக்கத் தொடங்கின. சீனத்தின் மக்கள் தினசரியும், பீகிங் வானொலியும் தொடர்ச்சியாக 'மார்க்சிஸ்டு'களின் திருத்தல்வாதத்தை அம்பலப்படுத்தின. வங்காளத்தின் வடமுனையில் பற்றிய தீ நாடெங்கும் 'மார்க்சிஸ்டு' கட்சியைச் சுட்டெரிக்கத் தொடங்கியது.

கட்சிக்குள் வெடிக்கத் தொடங்கிய கலகத்தைக் கண்டு அஞ்சிய 'மார்க்சிஸ்டு' தலைமை ஆகஸ்டு'67 இல் மதுரையில் மத்தியக் கமிட்டியை கூட்டியது. இந்திய அரசு பெரு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அரசு என்றும், ஆனால் முதலாளிவர்க்கம் அந்நிய ஏகபோக மூலதனத்தைச் சார்ந்திருப்பதாகவும், இதை முறியடிக்கவில்லையெனில் நவ காலனியாக நாடு மாறிவிடும் என்றும் கூறி, தனது அரசியல் அலித்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. நக்சல்பாரி எழுச்சியின் ஆதரவாளர்களை குறுங்குழுவாதிகள், வறட்டுவாதிகள், சாகசவாதிகள் என வசைபாடி 'சமாதன மாற்றம்' எனும் குருசேவின் திருத்துல்வாதத்தையே தனது கொள்கையாக முன்வைத்தது.

நெருக்கடியிலிருந்து தப்புவதற்காகக் கூட்டிய மத்தியக் கமிட்டி நெருக்கடியைத் தீவிரமாக்கியது. ''கட்சித் தலைமைக்கெதிராகக் கலகக் கொடி உயர்த்துங்கள்'' என்று அறைகூவல் விட்டார் கட்சியின் உ.பி மாநிலச் செயலர் சிவ் குமார் மிஸ்ரா. பஞ்சாப், ஆந்திரா, கேரளா, பீகார், ஜம்மு காஷ்மீர், தமிழ்நாடு.. என எல்லா மாநிலங்களிலும் புரட்சியாளர்கள் கலகக்கொடி உயர்த்தத் தொடங்கினர்.

ஜூன் மாதத்தில் தோற்றுவிக்கப்பட்ட ''நக்சல்பாரி விவசாயிகள் போராட்ட ஆதரவுக் குழு'' பல்வேறு மாவோயிசக் குழுக்களின் பாலமாகச் செயல்பட்டது. நவம்பர் மாதத்தில் அக்குழு கூட்டிய அனைத்திந்திய மாநாட்டில் ''அனைத்திந்திய புரட்சியாளர் ஒருங்கிணைப்புக் கமிட்டி'' என்றொரு அமைப்பை ஏற்படுத்துவது என முடிவு செய்தது; கீழ்க்கண்ட அறைகூவலையும் விடுத்தது.

''நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் புரட்சிகர விவசாயிகளின் போராட்டங்கள்

**சாரு மஜூம்தார்**



படிப்பகம்

வெடித்தெழுவதை தோழர்கள் அவதானி
திருப்பீர்கள். பாட்டாளி வர்க்கத்தின் மு
னணிப்படை என்ற முறையில் இவற்
வளர்த்தெடுப்பதும், தலைமை தாங்கி வ
நடத்துவதும் நம் கடமை. நாட்டின் ப
வேறு மூலைகளில், தனித்தனியே, மக்க
போராட்டங்களின் பல்வேறு அரங்குகளி
கட்சிக்கு (மார்க்சிஸ்ட்) உள்ளேயும் வெ
யேயும் செயலாற்றி வரும் சக்திகளெல்லா
ஒன்றுபட வேண்டும்; மார்க்சியம் - லெ
னியம் - மா சே துங் சிந்தனையின் ஒளியி
ஒரு புரட்சிகரக் கட்சியைக் கட்டியமைக்
வேண்டும். மதுரையில் வெளிப்பட்ட இ
தியான, தீர்மானகரமான துரோகத்திற்கு
பின் இனியும் தாமதிக்கவியலாது''

நக்சல்பாரி எழுச்சி ஓர் உண்மையான
புரட்சிகரமான கம்யூனிஸ்டு கட்சிக்கு அடி
தளமிட்டது. ஆளும் வர்க்கங்கள் அச்சத்
டனும், வெறுப்புடனும், ஆத்திரத்துடனு
குறிப்பிடும் நக்சல்பாரிகளின் கட்சி- இந்
யப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ
- லெனினிஸ்ட்) - ஏப்ரல் 22, 1969 அன்
பிறப்பெடுத்தது.

தோன்றிய நாள் முதல் சமரச, சீர்
ருத்த, சந்தர்ப்பவாத, பாராளுமன்றவா
சேற்றில் மூழ்கிக்கிடந்த இந்திய 'கம்யூனிஸ்
டு' இயக்கத்திலிருந்து புரட்சியாளர்கள் தீ
மானகரமாக முறித்துக் கொண்டனர். இ
யத்தின் அடிவாரத்தில் ஏதோ ஓர் மூலை
யில் இந்திய விவசாயிகள் சிந்திய ரத்த
தான் இம்மாபெரும் சாதனையின் கிரியா
ஊக்கி என்பதை எண்ணும்போது பெரும
த்தால் நெஞ்சம் நிமிர்கிறது.

www.padippakam.com




மியூசிக் டி.வி:

# இளைய தலைமுறைமீது அமெரிக்காவின் நட்சத்திரப் போர்!

மியூசிக் டி.வி- எம்.டி.வி - இசைக் ாகவே ஒரு திறப்பு (சானல்) - ஸ்டார் ..வி-யின் பல திறப்புக்களில் ஒன்று இந்த ம்.டி.வி. ஒவ்வொரு நாளும், 24 மணி நரமும் இதில் இசை வெள்ளமாய் ஓடுகி து.

மேட்டுக்குடி இளைஞர்கள் கிளப்புக ிலும், டிஸ்கோதேக்களிலும், குடித்துக் காண்டே, ஆடிக்கொண்டே மியூசிக் டி.வி ார்க்கிறார்கள்; பார்த்ததை வீட்டு மாடிக ில் ஒத்திகை பார்க்கிறார்கள்; பிறகு வீதிக ிலும், விருந்துகளிலும் அரங்கேற்றுகிறார் ள். இப்போது தமிழ், இந்தி சினிமாப் ாடல்களுக்கு ஆட்டம் போட்டது நின்று போய்; ஊர்வலங்களில் எம்.டி.வி பாதிப் ில் வரும் ராக் ஆட்டங்கள் பெருகிவிட் ன. இவர்கள்போடும் எச்சில் இலைகளை இனி சினிமாக்கள் எடுத்துக்கொண்டு பிரப மாக்கும்; பிறகு இந்த இசைவெள்ளம் ாராளமாக சமூகம் முழுவதுமாகப் பாயத் தொடங்கிவிடும்.

வேகம்... வேகம்... மிக வேகமாக ம்.டி.வி மோகம் எப்படி வளருகிறது? ல்லாம் கேபிள் டி.வி-யின் வேலைதான். ருநாளைக்கு 250 கேபிள் டி.வி இணைப் க்கள் வீதம் பெரு நகரங்களில் கொடுக்கப் டுகிறது; கிட்டத்தட்ட 4 கோடி ஸ்டார் .வி பார்வையாளர்கள்; அதில் 1 கோடி ம்.டி.வி பார்வையாளர்கள் உருவாகிவிட் ார்கள்.

பரவினால் என்ன? ஏன் பயப்பட வேண்டும்? எத்தனையோ படையெடுப் புக்கள் வரலாற்றில் நடந்திருக்கின்றன - எத் தனையோ அந்நிய கலாச்சாரங்கள் உள்ளே வந்திருக்கின்றன - அவர்கள் நம் நாட்டை கொள்ளை அடித்தார்கள்; சுரண்டினார்கள்; சுட்டெரித்தார்கள்; திரும்பிச்சென்றார்கள் - ஆனால் அவர்கள் விட்டுச் சென்ற கலாச்சா ரத் தடங்களை நம் நாடு ஜீரணித்திருக்கிறது - இப்படிச் சிலர் வாதாடுகிறார்கள்.

தவறு, இது தவறு. எம்.டி.வி-வீடியோ ஒலி-ஒளி (ஆடியோ - விஷுவல்) இணைந்த ஒரு புதிய சாதனம் ஒரு புதிய பரிமாணம். அதன் பாதிப்பு வித்தியாசமா னது; விரிவானது. எம்.டி.வி-ஐரோப்பா, ஜப்பான், பிரேசில், ஆஸ்திரேலியா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகிய ஐந்து கண்டங்களிலும் ஊடுருவியிருக்கிறது. புகுந்த சில மாதங்களிலெல்லாம் இந்திய நகரங்களில் ஏற்பட்ட சில விளைவுகளே பாதிப்புகளின் தன்மையை விளக்கப் போதுமானது.

அமிதாப் தலைமுடி ஓடி ஒளிந்துவிட் டது. பம்பாய் முடிதிருத்தும் நிலைய முதலா ளிகள் எம்.டி.வி-யைப் பார்த்து புதிய பாணிகளைக் கற்றுக் கொள்கிறார்களாம்.

துணி தைப்பவர்கள் திண்றுகிறார்கள். நோ-நீ குழுவினர் அணியும் உடைகளைப் பார்த்து அதே போல 'லேட்டஸ்டாக' தைக் கச் சொல்கிறார்களாம்.

மைக்கல் ஜாக்சனின் வீடியோ ஒன்று எம்.டி.வி-யில் தோன்றியது என்றால் ஒரு புது தலை அலங்காரம், புதிய பாணி உடை சந்தைக்குள் அடுத்த சில மணி நேரங்களில் முளைத்து விடுகிறது. மயிர்தானே, போகி றது; சட்டை, பேண்ட்தானே கொஞ்ச நாள் கிறுக்கு, இருந்துவிட்டுப் போகட்டுமே என்று விட்டுவிடமுடியாது. மயிர், உடை இரண்டிலும் அவர்கள் செய்வது 'கலகம்' என்று அறிவிக்கிறார்கள். அடுத்து அவர் கள் செய்ய நினைக்கிற 'துணிச்சலான கல கம்' வரைமுறையற்ற, நேரம் காலம் இடம் என்ற வரம்புகள் கடந்த பாலியல் உறவுக் கான சுதந்திரம்.

அப்படி என்னதான் எம்.டி.வி-யில் வருகிறது? ஓர் அலசு அலசினால் புரிந்துவி டும்.

- **பிரின்ஸ் குழு:** பிரின்ஸ் மேலும் கீழும் ஆடுகிறான்; அவனோடு அம்மண மாக 'மாடல் அழகிகள் ஆடுகிறார்கள்; வெறி இசை; வெறி ஆட்டம். அவர்கள் அவனை அணைக்கிறார்கள்; அவன் அவர் களை அணைக்கிறான்.
- **மடோனா குழு:** மடோனா ஆடுகி றாள்; அவள் வெறுமனே சைகைகள் மட் டும் காட்டி ஆடுவதில்லை; தரையிலே பாம் புபோல நெளிகிறாள்; உருளுகிறாள்; பூனையோடு புரளுகிறாள்; சிலுவையை அணைத்துக் கொண்டு காமநாட்டியம் ஆடு கிறாள். 'எனது காதலை நியாயப்படுத்து' என்ற ஆட்டத்தில் அவள் ஒரு பாதிரியைக் கெடுப்பதாகவும் காட்டப்படுகிறது.
- **மைக்கேல் ஜாக்சன்:** ஓவென்று இரைச்சலோடு இசை கேட்கும் பையன் மெக்காலே சல்கினை தகப்பன் அதட்டுகி றான். உடனே, பையன் தகப்பனை ஒரு ஆளில்லாத பாலைவனத்தில் தள்ளி தூள் தூளாக வெடித்துச் சிதறடிக்கிறான்.

— இவை ஒரு சில எடுத்துக்காட்டு கள். மைக்கேல் ஜாக்சன், மடோனா, பிரின்ஸ், நிர்வாணா, ஸ்நேப், எம்சி ஹேமர், பவுலா அப்துல், நோ-நீ, கேரின் ஒயிட், ஸ்வீட் சென்சேஷன், டெப்பிள் கிப் ஸன், சமந்தா ஃபாக்ஸ், மரியா கேரே, ஷமீ ரைத்- இப்படியே ஒரு பெரிய பட்டியல் நீளுகிறது. இவர்களது வீடியோக்கள் முழு வதுமாக - ஆபாசமான, அருவெறுப்பான, காட்டுக் கூச்சல், அம்மண ஆட்டங்கள் நிரம்பியவை.

ஜாக்சனின் வீடியோ என்ன பாதிப் பைக் கொடுக்கும் என்று சிந்திக்கலாமா? இசையை அலறவிட்ட காரணத்துக்காக ஒரு தகப்பன் பையனை அதட்டுகிறான். உடனே பையனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடுகிறது. தகப்பனை (திரி புரம் எரித்த சிவனைப்போல) சிதறவைக்கி றான்.

வாலிபப்பருவ இளைஞன் - உலகை அறியத் துடிக்கும் வயது - சுறுசுறுப்பு; ஆராய்ச்சி மனோபாவம்; தடைகளை உடைக்கும் முனைப்பு, வேகம்; சோதனை செய்யும் மனோபாவம்; ஆர்வம் - இந்த வயதில் இயல்பாக அரும்பும் எதிர்ப்பு, கலக மனோபாவத்துக்கு இலக்கு, திசை, நோக்கம், முறை, ஒழுங்கு ஏற்றப்படவேண் டும் - இல்லையானால், அது இலக்கற்ற அம்பாகிவிடும்; வீணான காட்டாறாகிவி டும்.

இந்திய இளைஞன் மனோபாவத்தை அன்றாடம் வரும் செய்தியிலிருந்து பாருங் கள். சினிமா போக காசு கேட்டான் ஒரு

படிப்பகம்

www.padippakam.com

இளைஞன்; தாயோ, பாட்டியோ காசு தர வில்லை; வெறியில் அவன் அவர்களைக் கொலையே செய்துவிடுகிறான். அற்பக் காரணம் - பத்து ரூபாய்க்காக ஒரு கொலை.

மைக்கேல் ஜாக்சனின் வீடியோவில் வரும் பையன் இப்படிப்பட்டவன்தான். இதை கம்ப்யூட்டர் நுணுக்கத்தோடு, உயர்ந்த படப்பிடிப்பில் வீடியோவில் பார்க்கும் இளைஞனின் ஆழ்மனத்தில் 'இப் படிச் செய்; இப்படிச் செய்யலாம்; தவறில் லை' என்ற கட்டளை பதிந்துவிடும்.

ஒரு ஜாக்சன் இப்படி என்றால், மடோனா என்ன விளைவுகளைத் தரு வாள்? 'எனது காதலை நியாயப்படுத்து' எனும் பாடலில் மடோனா, பாதிரியைக் கெடுத்துவிடுகிறாள். பாதிரி என்றால் சாதர ணமாக தூய்மை, புனிதம், ஒழுக்கம் என்ற சித்திரம்தான் மனத்தில் எழும். இந்த உடை தரித்தவர்கள் அனைவருமே புனித ஆத் மாக்கள் என்று நான் வாதாடவில்லை. ஆனால், பாதிரியின் புனிதம் குறித்த மாயையை நீக்குவதற்கு 'விக்கிரம்' வழிமு றையல்ல. மேலும், அதிர்ச்சி மதிப்புக்கா கவே இப்படி ஒரு கதைக்கருவை ஆட்டத் தில் நுழைத்திருக்கிறார்கள்.

பிரின்ஸ் ஆட்டத்தில் அப்படி என்ற விசேஷம்? தமிழ், இந்திப் படங்களில் தணிக்கை செய்யப்பட்ட ஆட்டங்கள் என் றால், பிரின்ஸில் நூற்றுக்கு நூறு 'அசலான' 'தணிக்கை செய்யப்படாத' ஆபாசம்.

இந்த 'செக்ஸ் ஆர்கி' செக்ஸ் போதை என்ன விளைவுகளை ஏற்படுத் தும்? இந்தியக் குடும்பங்களில் நிலப்பிரபுத் துவ ஆண் ஆதிக்கம் ஒழுக்கத்தின் அடிப்ப டையாக இருக்கிறது. ஆண்-பெண் உறவுக ளில் வேண்டுமென்றே ஒரு போலி இடை வெளியை உண்டாக்கியிருக்கிறார்கள். உள்ளே எவ்வளவுக்கெவ்வளவு ஆபாசம் இருந்தாலும் வெளியே தெரியாது. இச்சமூ கத்தில் ஆண்-பெண் பால் வித்தியாசங்கள் அனைத்தையும் வேண்டுமென்றே மூடுமந் திரமாக்குவதால், அதில் வேண்டாத, தேவையில்லாத, அளவுக்கு அதிகமான கவர்ச்சியும், ஈர்ப்பும் உண்டாக்கப்படுகி றது.

இப்படிப்பட்ட இந்திய நிலைமையில் டேவிட் பொவி, டேவிட் மேல்லட் போன் றோரின் வெளிப்படையான செக்ஸ் காட்சி களும் பாடல்களும் ஒழுக்கத்தை உண்டாக் காது. வெறியைத்தான் உண்டாக்கும். ஆண்-பெண் உறவுகளில் ஒழுக்கக் கேட் டையும், அராஜகத்தையும், ஒழுக்கக் கேட்டை ஆதரிக்கும் (அமாரல்) போக்கை யும்தான் உருவாக்கும்.

'சிவப்பு ரோஜா'வைப் பார்த்துவிட்டு பாலியல் கொலைகளைச் செய்த வெறியர்க ளைப் பற்றி செய்தித்தாள்களில் படித் தோம்; இனி, எம்.டி.வி-யைப் பார்த்து விட்டு, கற்பழிப்பு, பாலியல் சித்திரவதை, கொலை செய்தான் என்று கோரமான பட்டி யல்களைச் சந்திக்கப்போகிறோம். அதா வது, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இனி பெருகிவிடும்.

இந்த வீடியோக்கள் ராக் இசைப் பாடல்கள் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் புரிந்து கொள்ளப்படும் நிலைமை வேறு; அங்கு தயாரிக்கப்பட்டு ஒலி-ஒளி பரப்பப்படும் வீடியோ அதே நேரத்தில் இங்கும் காட்டப்படும்; அந்த அமெரிக்க இளைஞர் 'புரிந்துகொண்டோ' அந்தப் பின்னணியில் 'ரசித்துக்கொண் டோ' பார்ப்பதுவேறு; இங்குள்ள இளை ஞன் பார்க்கும் மனநிலை வேறு. அமெரிக் காவிலேயே இது பாலியல் அராஜகத்தை தோற்றுவிக்கும்போது இங்கு எப்படி இருக் கும்?

இதை பழமை எதிர்ப்பு கலக மருந்து என்கிறார்கள் சில விடலைத்தனமான அறி வுஜீவிகள். இந்திய மண்ணில் இப்படி அரா ஜகம் உருவாகும்போது, மாற்றாக ஆர். எஸ்.எஸ்.தான் அரங்கில் வேகமாக வரும். அதை முறியடிக்க வெற்று அராஜகம் மருந் தாக முடியாது. புரட்சிகர, ஜனநாயக சக்தி கள் தயாராக இல்லையானால் இந்தியா பழ மைக்குள் நெட்டித் தள்ளப்படும்.

மியூசிக் டி.வி வெறும் இசை, பாடல் ஆடல் மட்டுமல்ல. அது புது பழக்கம்; புதிய உடை; புதிய தலை அலங்காரம்; புதிய மொழி; சுருக்கமாக, அது புதிய

**மியூசிக் டி.வி வெறும் இசை, பாடல், ஆடல் மட்டுமல்ல. அது புது பழக்கம்; புதிய உடை; புதிய தலை அலங்காரம்; புதிய மொழி; சுருக்கமாக, அது புதிய வாழ்க்கை முறை. அதாவது, அமெரிக்க வாழ்க்கை முறை.**

வாழ்க்கை முறை. அதாவது, அமெரிக்க வாழ்க்கைமுறை. இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் மொழி, கலாச்சாரங் களை அது ஒழித்துவிடும்; நெறிமுறை களை தனக்கேற்ப மாற்றும்; தனது உற்பத் திக்கான உழைப்பைச் செலுத்துபவர்களாக, அதற்கேற்ற அமெரிக்க மாடல்களாக உரு வாக்கும்.

வடிவத்தில் கவர்ந்து இழுத்து பின் கேட்பவர் மனங்களை தங்கள் மாடலில் வார்த்துவிடுகின்றன, இந்த வீடியோக்கள். பாலியல் அராஜகம் மட்டுமல்லாமல், 'போதையே பெருவாழ்வுக்கு வழி' என்ற சைகடலிக் மனபிரமைக் கருத்துக்களையும், 'ஆரியர் அல்லாதவர் உலகில் வாழத் தகுதி அற்றவர்கள்; அமெரிக்காவைக் கெடுத்து எல்லா நோய்களையும் பரப்புகிறவர்கள் நீக்ரோக்கள்' என்ற இனவெறிக் கருத்துக்க ளையும், 'என்றும் பெண் ஆணுக்கு அடி மையே' போன்ற பெண் விடுதலைக்கு எதி ரான கருத்துக்களையும் 'ரோஜாக்களி டையே துப்பாக்கிகள்' (கன்ஸ் இன் ரோஸஸ்) போன்ற குழுக்கள் பரப்புகின் றன.

எம்.டி.வி. இசை இத்தனை வேலைக ளைச் செய்யுமா? இசை இவ்வளவும் செய் யும்; காட்சியோடு சேர்ந்த இசை இதற்கு மேலும் செய்யும். காட்சி - இசை பார்த்த பிறகு நினைவில் உறைந்திருக்கும். ஏக்- தோ-தீன், ஓயே-ஓயே, கட்டடிப்போம் காலேஜுக்கு போன்ற சினிமாப்பாடல்க ளைப்பாடி பெண்களைக் கிண்டல் செய்த தாக நிறைய இளைஞர்கள் அடி-உதை வாங்கித் தின்றதாகப்படிக்கிறோம். அந்த

இளைஞர்கள் மனத்தில் நீங்காது நி பாடல்கள் உணர்ச்சிகளைத் தூண்டிவி போது, அவன் சமூகத்தில் அதைச் செ பார்க்கிறான்; அதேபோலத்தான் எம்.டி கற்றுத்தந்தவை அவன் மனத்தில் வடுவ நின்றுவிடும் - அதை சமூகத்தில் செய டுத்துவான்.

ஆரம்பத்தில் எழுப்பிய கேள்விக் போவோம். எம்.டி.விக்கு ஏன் பயப் வேண்டும்? ஆபாசம், சந்தைக் கலாச்சா வருகிறதே. நிச்சயம் அதற்குப் பயப்ப தான் வேண்டும். ஆனால்-எவ்வ பேரை இது சென்றடையும்? எத்த பேருக்கு மொழி புரியும்? கொஞ்சம் ருக்கு மட்டுமே புரியும் இசைக்கு எல் மக்களும் ஏன் பயப்பட வேண்டும்? எ சிலர் சந்தேகம் எழுப்புகிறார்கள்.

கிராமப்புறங்கள் திவாலாகி மக்கள் ரம் நோக்கி வாழ்க்கைக்காக படையெ கும் காலம் இது. உதிரிப் பாட்டாளிகள மாறும் அவர்களை எம்.டி.வி விட்டுவை காது. தவிர, உள்ளூர் சந்தையில் நி வேண்டுமானால், எம்.டி.வி-யை காப் டித்து மசாலா சரக்குகளை இந்திய சினிம துறை உருவாக்கியே தீரவேண்டும். ஆ மொத்த இந்திய கலாச்சாரமும், மதிப்பீ ளும், வாழ்க்கை முறையும் தலைகீழ மாறும்.

எனவே, கலாச்சாரத்துறையில் அ ரிக்க ஆதிக்கமாக, ஊடுருவலாக, படைெ டுப்பாக எம்.டி.வி-யைப் பார்க்கவே டும். நமது தேசிய இனம், மொழி கலாச் ரம், நம் உரிமை, சொந்த பூமி என் உணர்வு நமக்குண்டு என்றால் எம்.டி.வி யை எதிர்க்கவேண்டும்.

எம்.டி.வி-யை எதிர்ப்பவர்கள் வே இரண்டுபேர் இருக்கிறார்கள். அதில் ஒ வன் சம்பிரதாயமாக எதிர்க்கிறான் உள்ளே அவனுக்கு குதூகலமாக, மகிழ் யாக இருக்கிறது; இன்னொருவன் 'ந பாரம்பரியம் போகிறதே' என்று எதிர்க் றான் - அமெரிக்காவை மாப்பிள்ளையாக் உள்ளூரத் துடிக்கும் 'அவாளை'ப் போன் வன் அவன். இருவருமே எம்.டி.வி-க் எதிரிகள் அல்ல; சீக்கிரமாகவே ஒரு சுப கூர்த்தத்தில் பகிரங்கமாகக் கைகுலுக்கி வி வார்கள்.

ஆங்கிலேயன் மெக்காலே அன் சொன்னான்: 'உடலால், உடையால் இந் யனாகவும், சிந்தனையால் ஆங்கிலேய கவும் இருக்கவேண்டும்.' சிந்தனை மட் மல்ல, நடை உடை பாவனை ஆகி அனைத்திலும் இந்தியனை அமெரிக்கனா உருமாற்ற எம்.டி.வி வந்திருக்கிறது.

எனவே, புஷ்ஷுக்காக இங்கே கலா சார ஒட்டுச் செடிகளை உருவாக்க வந்திரு கும் எம்.டி.வி-க்கு எதிராகப் போர்க்கெ டியை உயர்த்துவோம்!

☆ பஷி

படிப்பகம்

www.padippakam.com

தடைகள் உடைத்து
விலங்குகள் அறுத்து
சுதந்திரமாக
முன்னேறிச் செல்கிறதாம்
இந்திய யானை!

# சரபோஜி... நேருஜி... இந்திராஜி... ராஜீவ்ஜி... ராவ்ஜி... சரபோஜி!

கப்பம் கட்ட வழியில்லாமல்
பிரிட்டிஷாருக்குத் தன்
நாட்டையே தாரைவார்த்தானாம்
தஞ்சை மன்னன் சரபோஜி

அதற்குப் பிறகும்
அவனிடம்
படைகள் இருந்தன
ஆயுதங்கள் இருந்தன
மெய்க்காவலர் இருந்தனர்
மந்திரிப் பிரதானியர் இருந்தனர்
புலவர்கள் இருந்தனர்
தர்பார் மண்டபம் இருந்தது.
சிங்காதனம் இருந்தது
சிவிகை இருந்தது
அந்தப் புரமும் இருந்தது
அதிகாரம்தான் இல்லை.

இருந்த போதிலும்
மேன்மை தங்கிய பிரிட்டிஷ்
மகாராணியார்
அவரை
மன்னர் என்றே அழைத்தார்.

''ஹூம்...
வார்த்தையில் என்ன இருக்கிறது''
நீங்கள் பொருமலாம்
ஆனால்
அதில்தானே எல்லாமும் இருக்கிறது.

ஒன்றல்ல.. இருண்டல்ல...
இருநூறாண்டுகள் போராடியபின்
வெள்ளையன் கேட்டான்.
உங்களுக்கு என்ன வேண்டும்?
சுதந்திரம்

எதிலிருந்து?
எங்கள் பெயரிலிருந்து

அப்படியென்றால்...
எங்கள் பெயரை மாற்றவேண்டும்.

எப்படி?
பறயர்களுக்கு அரிஜன் என்று
நாங்கள் பெயர் மாற்றியது போல...
'சுதந்திர... ஜனநாயக... சோசலிச...
குடியரசு என்று நீங்கள் எங்களை
அழைக்க வேண்டும்'
ஆகட்டும்.

பிறகு, எங்களுக்குத்
தனிக் கொடி வேண்டும்
அதன் வண்ணங்களையும்
நாங்களே தீர்மானிக்கும்
உரிமை வேண்டும்.
தந்தோம்.

உங்களைப்போலவே எங்களுக்கும்
ஒரு
பாராளுமன்றம் வேண்டும்

ஏற்கனவே நாங்கள்
கட்டிவைத்திருக்கறோம்.
எடுத்துக் கொள்ளுங்கள்.

அப்புறம்...
கருணைக்கடலே!
எப்படி ஆள்வது என்பதையும்
எங்களுக்கு நீங்கள்
கற்றுத்தர வேண்டும்.

கற்றுத் தந்தார்கள்,
கற்றுத்தந்து கொண்டேயிருக்கிறார்கள்.

இந்தியக் குடிமகனே!
இதுதான் காந்தி 'வாங்கிய
சுதந்திரம்.

●

விற்பதற்கு சரபோஜியிடம்
தஞ்சை மட்டுமே இருந்தது.
ராவ்ஜியிடம்
'பரந்த பாரதமே' இருக்கிறது.

**புன்னகை, கண்ணீர், வெறுப்பு,**
**சோகம்**
**அனைத்துக்கும் - இனி**
**டாலரே செலாவணி**
**டாலரே தேசியம்**
**டாலரே ஆன்மீகம்**
**கருத்தரிக்கும் பெண்களெல்லாம்**
**இனி**
**டாலர்களைப் பிரசவிக்கட்டும்!**

'47 இல் அந்நியனிடமிருந்து
சுதந்திரம்
'92 இல் அந்நியனுக்கு
சுதந்திரம்

விகுதியில்தான் சிறியதொரு மாற்றம்.
மற்றப்படி
சுதந்திரமென்னவோ சுதந்தரம்தான்.

கல்கத்தா, சென்னைப்பட்டினம், சூரத்
இவையெல்லாம்
கிழக்கிந்தியக் கம்பெனியின்
கப்பல் நிற்பதற்கு
நமது மன்னர் பெருமக்களால்
மனமுவந்து தரப்பட்ட
துண்டு நிலங்கள் - அன்று.

இங்கெல்லாம்
'சுதந்திர' வர்த்தக வலயங்கள்
இன்று.

கிழக்கிந்தியக் கம்பெனியின்
மேஸ்திரிகளும், கங்காணிகளும்
கையில் சாட்டையுடன் நிற்க,
மிளகும், ஏலமும், மஸ்லினும் சுமந்து
கப்பலில் ஏற்றும்
அன்றைய
சென்னைத் துறைமுகத்தின் ஓவியத்தைப்
பார்த்ததில்லையா நீங்கள்?

போகட்டும்.
வாருங்கள் 'சுதந்திர' வர்த்தக்
வலயத்திற்கு.

மாட்சிமை தங்கிய
இந்தியப் பாராளுமன்றத்தின் சுதந்திரமோ
சர்வ வல்லமை பொருந்திய
சட்ட சபையின் சுதந்திரமோ
இங்கே செல்லுபடியாகாது
ஏனென்றால் - இது
'சுதந்திர' வர்த்தக வலயம்

தடைகள் உடைத்து
விலங்குகள் அறுத்து
சுதந்திரமாக
முன்னேறிச் செல்கிறதாம்
இந்திய யானை.

யாருக்கு உடைந்தன தடைகள்?
யாருக்கு வீசுகிறது சுதந்திரக் காற்று?

'துணிச்சலான நடவடிக்கை'
பத்திரிகைகள் பாராட்டுகின்றன.

எது துணிச்சலான நடவடிக்கை?
கடத்தல் காரனைப் போல
கள்ளத்தனமாகத்
தங்கத்தைக் கடத்தி
அடகு வைத்ததா?



படிப்பகம்

www.padippakam.com

இரண்டு கோடித் தொழிலாளர்களின்
எதிர் காலத்தை
இருண்ட காலமாக்கிவிட்டு
பொற்காலம் கதவைத் தட்டுவதாகப்
புளுகுவதா?

எது துணிச்சலான நடவடிக்கை?
கட்டியவளையே பணயம் வைத்து
சூதாடியது
தருமனின் துணிச்சலான நடவடிக்கை!

சொந்த நாட்டைக் கொள்ளையிட்டு
சுவிட்சர்லாந்தில் ஒளித்துவைப்பதும்
துணிச்சலான நடவடிக்கை!

அரை நிர்வாண நடிகை
முழு நிர்வாணத்துக்குத் தயாரானால்
துணிச்சலான நடவடிக்கை!

தாய்நாட்டை ஏலம் கூறும்
தரகு வேலையும்
துணிச்சலான நடவடிக்கை!

●

ஏன் இந்த இழிநிலை
யார் காரணம்?
நீங்கள்தான் காரணமாம்
பிரதமர் சொல்கிறார்.

வாழ்வுக்காக ஏங்கி
மரணத்தைத் தழுவிய உன் தகப்பன்,
மரணத்தை எதிர்நோக்கி
வாழ்க்கையை நகர்த்தும் நீ,
மரணத்துக்கு நாள்குறித்துக் கொண்டே
பிறக்கும் உன் பிள்ளை

நீங்கள்தான் காரணமாம்.
மனிதப் புழுதிகளே கேளுங்கள்!
பாரத ரத்தினங்கள் கூறுகிறார்கள்.

மத்தியப் பிரதேசத்தில்
குரங்கைத் தின்று பசியாறும்
உன் சகோதரனும்


கலகாந்தியில்
புல்லையும், செடியையும்
அரைத்துக் குடிக்கும்
உன் சகோதரியும்தான்
காரணமாம்.

'புழுக்களைப்போல் நெளியும்'
மக்கள் தொகையே - கேள்
தேர்தல் நேரத்தின்
கட்டை விரலே - கேள்

விதைத்து, நீர்பாய்ச்சி, களையெடுத்து
கட்டு சுமந்து, போரடித்துக்
களஞ்சியம் சேர்த்தபின்
வறுமைக் - கோட்டைத்
தலையில் சுமக்கும்
மக்கள் தொகையே - கேள்!

பிரதமர் சொல்கிறார்:
தேசம் நெருக்கடியில் சிக்கிவிட்டதாம்.

யாருடைய தேசம்?




கோகோ கோலா, எம்.எஃப்.ஹுசேன்,
மியூசிக் அகாதமி, நல்லி சில்க்ஸ்,
நட்சத்திர ஓட்டல்காரர்களின் தேசம்,
நரசிம்மராவின் தேசம்
நெருக்கடியில் சிக்கிவிட்டதாம்.

குடிக்கத் தண்ணீரில்லாத
இந்தியனே,
குளிர்பானமின்றித் தவிப்போர்க்குக்
கைகொடு.

இலவச வேட்டி இந்தியனே,
காஞ்சிப் பட்டுக்காரர்களை
கைதூக்கி விடு.

நீ வயிறின்றிப் பிறந்திருந்தால்
தேசம் தலை நிமிர்ந்திருக்குமாம்.
உன் வயிற்றுக்குப் படியளந்தே
அவர்கள் வரிப்பணம் பாழாகிறதாம்.

இனி,
வாயும், வயிறும் இல்லாத
எந்திரங்களே
இந்த தேசத்தின் தொழிலாளர்கள்

குடிக்கத் தண்ணீரில்லாத
இந்தியனே,
குளிர்பானமின்றித்
தவிப்போர்க்குக்
கை கொடு.
இலவச வேட்டி இந்தியனே,
காஞ்சிப் பட்டுக்காரர்களை
கைதூக்கி விடு.

தொழில் நுட்பத்திற்கு சிவப்புக்கம்பளம்.
தொழிலாளிக்குக் கல்தா.

கல்தா அல்ல கைகுலுக்கல்
தங்கக் கைகுலுக்கல்
தங்கத்துடன் கை குலுக்க மறுப்பவர்கள்
மரணத்துடன்
கை குலுக்க வேண்டி வரும்.

முதலாளிகளுக்கு புது வாழ்வு.
தொழிலாளிகளுக்கோ மறுவாழ்வு

தாலியை அறுத்தவனே தரும்
விதவை மறுவாழ்வு

புன்னகை, கண்ணீர், வெறுப்பு, சோகம்
அனைத்துக்கும் - இனி
டாலரே செலாவணி
டாலரே தேசியம்
டாலரே ஆன்மீகம்
கருத்தரிக்கும் பெண்களெல்லாம்
இனி
டாலர்களைப் பிரசவிக்கட்டும்!

●

திருமாலின் நாபிக்கமலத்திலிருந்து
தோன்றிய உயிர்களுக்கு
அல்லது
பழைய ஏற்பாட்டில்
தேவன் உண்டுபண்ணிய
ஜீவன்களுக்கு
அல்லது
இன்னோரன்ன கடவுளர்கள்
காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப
ஆங்காங்கே உண்டுபண்ணிய
உயிர்களுக்கெல்லாம்

டாலர் முத்திரை போடுகிறார்
டங்கல்.

படிப்பகம்

www.padippakam.com

இது புதிய ஏற்பாடு
புத்தம் புதிய ஏற்பாடு
மன்மோகன் சிங்கே
இதன் அப்போஸ்தலர்

பூச்சி அவனுடையது
பூச்சி மருந்தும் அவனுடையது
விதை அவனுடையது
விளைச்சலும் அவனுடையது

விதையை இறக்குமதி செய்யும் தேசம்
விந்துவையும்
இறக்குமதி செய்யலாம்
புத்திர காமேஷ்டி
'நமது' பாரம்பரியம்தானே!
அது பழைய 'ஏற்பாடு'
இது புதிய 'ஏற்பாடு'

●

வரலாறு திரும்புகிறது
வார்த்தைகளில் மட்டுமே மாற்றம்
அடிமைத்தனத்தின் பெயர்
சுதந்திரம்

துரோகியின் பெயர்
துணிச்சல்காரன்

வெளியேற்றத்திற்குப் பெயர்
தங்கக் கைகுலுக்கல்

விபச்சாரத்தின் பெயர்
சுற்றுலா வளர்ச்சி

துணைப் படைத்திட்டத்தின் பெயர்
கூட்டு ராணுவப் பயிற்சி

பிளாசிப் போரில்லை
சிப்பாய்க் கலகமில்லை
கத்தியில்லை ரத்தமுமில்லை
கதை முடிந்துவிட்டது

●

தனது அடிமைத்தனத்தின்
நிபந்தனைகளை
சந்திரமதி அறிந்திருந்தாள்.

ஆனால் - சத்ய மேவ ஜெயதே-
இந்த அரிச்சந்திரர்கள்
நமக்கு
அதையும் மறைத்து விட்டார்களே

யாருககு விற்கப்பட்டோம்
தெரியாது.
எத்தனை டாலருக்கு விற்கப்பட்டோம்
தெரியாது.

இந்த நாட்டின் பெயர் ,
காமாட்டிபுரம்
பான் மசாலா ஒழுகும் வாயுடன்
சாவிக் கொத்தை இடுப்பில் செருகிய
அலிகள்
பாராளுமன்றத்தில் - நமக்குக்
காவல் இருக்கிறார்கள்



காஷ்மீரிகளே, அஸ்ஸாமியர்களே!
'பிரிவினைவாதிகளே'!
பிரிக்காதீர்கள்.

தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்தை
வில்லாமல் விரியாமல்
வாக்குத் தவறாமல்
வெள்ளைத் துரைமார்களிடம் ஒப்படைக்க

அரிச்சந்திரர்கள்
கங்காணிகள்
காங்கிரஸ்காரர்கள
வாய்ப்பு கேட்கிறார்கள்

நரசிம்மரால் அவர்களே,
இதோ
இருபத்தியோராம் நூற்றாண்டு
என் கண்முன்னே விரிகிறது.
அமெரிக்க கான்சல் அலுவலகத்தின்
நெடிய மதில்களுக்கு வெளியே
சொர்க்கத்திற்கு நுழைவுச்சீட்டு தேடி
திட்டிக்கதவு திறக்கப்படுவதற்காகக்
காத்து நிற்கிறார்கள்
உங்கள் இந்தியர்கள்.

வயலை இழந்து, வாழ்க்கை இழந்து
கெட்டுப் பட்டணம் சேர்ந்து...
மீண்டும் கெட்டுச் சீரழிய
வந்திறங்குகிறார்கள்

**எங்கள் பெற்றோர்களுக்குக்**
**கனவாவது எஞ்சியிருந்தது**
**நாங்கள் அதையும் இழந்தோம்**
**கண்ணெதிரில் வறட்சி**
**தொடுவானத்தில் கானல்**
**நீருமில்லை.**

எங்கள் இந்தியர்கள்.

மூடிய ஆலைகளின் முன்னே
கண்களில் கோபமும்
கால்களில் இயலாமையுமாகத்
தள்ளாடுகிறார்கள்
எங்கள் இந்தியர்கள்.

தங்களுக்கு என்ன நேர்கிறது
என்றே தெரியாத
இந்த லோகிதாசர்களின்
மவுனத்தின் அவலம்
உங்கள் நெஞ்சைப் பிசையவில்லையா?

தங்களைத் திருடியவர்களிடமே
தானம் கேட்க நீளும்
அவர்களது அப்பாவித்தனமான கரங்கள்
உங்கள் மவுனத்தின் செவுளில்
அறையவில்லையா?

எங்கள் பெற்றோர்களுக்குக்
கனவாவது எஞ்சியிருந்தது
நாங்கள் அதையும் இழந்தோம்
கண்ணெதிரில் வறட்சி
தொடுவானத்தில் கானல் நீருமில்லை.

இல்லை.
நீங்கள்
உணர்வுகளை உதிர்த்த மிருகங்கள்

நயவஞ்சகர்களே,
உங்கள் நீலிக்கண்ணீர் கூட
வற்றி விட்டது.

தாகத்தால் துவளும்
நாக்குகளைப் பார்த்தபடியே
உங்களால்
கோகோ கோலா அருந்தமுடியும்.

எச்சில் இலைக்குப் போராடும்
சிறுவர்களைப் பார்த்தபடியே
உங்களால்
நெய்யில் வறுத்த இறைச்சியை
விழுங்க முடியும்.

மனித ரத்தம் உறைந்த
கத்திகளால்
பழத்துண்டுகளைச் சுவைக்கமுடியும்.

டாலரே உங்கள் தேவன்

பங்கு மார்க்கெட்டின் இரைச்சலே
உங்கள் சங்கீதம்
'ரகசியமே உங்கள் கற்பு
அடிமைத்தனமே உங்கள் ஆன்மா
தூக்குமரமே உங்கள் மனசாட்சி.

கல்லறையில் களியாடும்
காபாலிகர்களே!
உங்கள் இறுதித் தீர்ப்பின் நாளை
துரிதப்படுத்துகிறீர்கள்.

எனினும்,
உங்களிடம் நாங்கள்
குரூரமாக நடந்து கொள்ளமாட்டோம்
நீங்கள் எமக்களித்த வாழ்க்கையைவிட.

☆ மருதையன்

படிப்பகம்

www.padippakam.com

# ஆபாசத்துக்கு இன்னொரு பெயர் இந்து மதம்



இந்துமதச் சடங்குகள் ஒவ்வொன்றுக்கும் விளக்கம் சொல்லுவார்கள்; தேவைப்பட்டால் விஞ்ஞான ரீதியான விளக்கம் சொல்லவும் வெட்கப்படமாட்டார்கள். ஆனால் கேரளாவில் நடக்கும் கீழே கண்ட சடங்குகளுக்கு அவர்களால் எந்த விளக்கமும் சொல்லமுடியாது.

மலபார் கடற்கரையில் உள்ள குரும்பா கோவிலில் பரணி விழா வருடா வருடம் நடக்கிறது. கோவில் தெய்வமான தேவியின் காதில் (?) விழும்படி ஆபாசப் பாடல்கள், கோஷங்கள் போட்டுக் கொண்டு, விசேஷமாக தண்ணி அடித்துவிட்டு ஆபாச சேட்டைகள் காட்டி 'பக்தர்கள்' ஆட்டம் போட்டு வருவார்கள்.

இதுபற்றி மக்களிடம் உள்ள கருத்து - தேவி, மதுரையை எரித்த கண்ணகியின் மறு அவதாரம்; தாரிகன் என்ற அசுரனை அழித்துவிட்டு அவள் இங்கு வந்து வெற்றிக்களிப்பில் வீற்றிருக்கிறாள்; அவளுக்குப் பிடித்த விதத்தில் விழா கொண்டாடுகிறோம், இது ஆபாசம் அல்ல.

இதன் பின்னால் உள்ள வரலாற்றுப் பூர்வமான உண்மையையே நாம் ஏற்றுக்கொள்ளமுடியும். இதே காளிகோவில் முன்பு புத்த மடாலயமாக இருந்தது; உள்ளே இருக்கும் புத்தமத சிற்பங்களே இதற்கு ஆதாரங்கள். பார்ப்பன சனாதனிகள் இந்த மடாலயத்தைக் கைப்பற்றி புத்தத் துறவிகளை மிரட்டி வெளியேற்ற முயற்சித்தார்கள்; அவர்கள் வெளியேற மறுத்தார்கள். அப்போது ஒழுக்கத்துக்குப் பெயர் பெற்றதாக பீற்றிக் கொள்ளும் பார்ப்பனர்கள் வக்கிரமான ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள். வடக்குக் கேரளத்திலிருந்து கீழ்ச் சாதி ஆட்களை வலியத் திரட்டிவந்து அவர்களுக்கு மூக்கு முட்ட சாராயத்தை ஊற்றி, மடாலயத்தின் முன்னாள் ஆபாசமாகக் கோஷம் போடச் சொன்னார்கள். கடைசியில், பொறுக்கமுடியாமல் புத்தத் துறவிகள் ஓடிவிட்டார்கள்.

இந்து மதத்தின் மிகச் சிறந்த அம்சமாகச் சொல்லப்படும் சகிப்புத் தன்மையின் கதை இதுதான். தமிழகம், மற்றும் இந்தியாவின் பல்வேறு இடங்களிலம் புத்த, ஜைன மதங்களை எதிர்க்க முடியாமல் அவர்களைச் சித்திரவதை செய்து தூக்கிலேற்றிக் கொன்ற கதைகள் ஏராளம் உள்ளன. ஒரு குரும்பா கோவிலின் பின்னே இத்தனைப் பெரிய கதை இருக்குமானால், அஜந்தா - சித்தன்னவாசல் போன்ற இடங்களை ஆராய்ந்தால் இன்னமும் இந்து மதத்தின் விகார முகங்கள் அத்தனையும் வெளியே வரக்கூடும்.

குரும்பா கோவில் அசிங்கத்திற்கு ஒரு வேளை இப்படி ஒரு விளக்கம் தருவார்களோ, என்னவோ?

குசேலனுக்கு நண்பனாக, ஆண்டாள் - மீராவுக்கு காதலனாக (அதாவது, கள்ளக் காதலனாக), சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் பரவை நாச்சியார்க்கும் இடையே மாமாவாக (அதாவது, தரகனாக) கடவுள் அவதாரம் எடுக்க இடம் கொடுத்த இந்து மதம், அப்பேர்ப்பட்ட கடவுள் தெருவிலே திரியும் பொறுக்கிகளுக்குத் திட்டுவதற்காக புனித வசவுகளுக்கும் இடங்கொடுத்தார் என்று விளக்கம் தரக்கூடும்.

ஒன்றுமே இல்லாததற்கே 'பிரும்மம்' என்ற விளக்கத்தைக் கண்டுபிடித்தவர்கள் இதையா செய்யமாட்டார்கள்?

---

# மதவெறியர்களுக்கு மட்டையால் ஓர் அடி!

அண்மையில் கிரிக்கெட உலகக் கோப்பைக்கான போட்டியின்போது இறுதிச் சுற்றில் இங்கிலாந்தும், பாகிஸ்தானும் மோதியபோது இங்கிலாந்து ஜெயிக்க வேண்டும், பாகிஸ்தான் தோற்கவேண்டும் என்ற கருத்து பரவலாக மக்களிடம் இருந்தது. நீண்ட காலமாகவே ஆர்.எஸ்.எஸ். பரப்பி வந்த பாகிஸ்தான் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் விளைவாகவே இது இருந்தது.

பாகிஸ்தான் மூன்றாம் உலக ஏழை நாடு, அதை ஜெயிக்கவேண்டும், இங்கிலாந்து ஏகாதிபத்தியும் தோற்கவேண்டும் என்று பொதுவான கருத்து (ஆட்டத்தை வைத்துப் பார்க்காமல் பேசப்பட்டாலும்) இருந்தாலும் விளங்கிக் கொள்ளமுடியும். அவ்வாறில்லாமல் இங்கிலாந்து ஜெயிக்க வேண்டும் என்று பொதுக் கருத்து நிலவியதை வேறு எப்படிப் புரிந்துக் கொள்வது?

கிரிக்கெட்டே ஏகாதிபத்திய ஆட்டம் தானே, நமக்கென்ன என்று கேட்கலாம். மிகச் சரி. ஆனால் அதுவே தற்போது அரசியல் பரிமாணங்களையும் தொட்டு, அரசியல் பிரச்சாரங்களைத் தூண்டிவிடுவதால் (எ-டு: வெள்ளை X நீக்ரோ; இந்து X முஸ்லீம்) அதையும் கவனிக்கவேண்டியுள்ளது.

இதே நேரத்தில் 'ஸ்போர்ட்ஸ் சானலு'க்காக பாகிஸ்தான் அணித் தலைவர் இம்ரான்கான் அளித்த பேட்டி சுவையானது. ஒரு படித்த மிதவாதியின் நிலையிலிருந்து இஸ்லாத்துக்கு மறுவிளக்கம் தரும் இம்ரான் "இஸ்லாம் வெற்றுச் சடங்குகளல்ல, ஏழைகளுக்கும் நலிவுற்றோர்க்கும் கல்வியும், வாழ்க்கையும் தரும் ஓர் நெறி" என்று கூறுகிறார். அதிபயங்கர இஸ்லாம் அடிப்படை வாதத்திற்கு எதிராக துணிந்து பேசுவதோடு நில்லாமல், சமூக - அரசியல் விஷயங்களிலும் ஜனநாயகபூர்வமான கருத்துக்களை அவர் முன்வைக்கிறார்; "ஒரு நாட்டில் எந்தவொரு பிராந்தியமும் சுதந்திரத்தைப் பெற விரும்பினால் அது பெற்ற தீர வேண்டும். காஷ்மீரிகள் விரும்பினால் தன்னாட்சி பெறட்டுமே. பாகிஸ்தான்வசம் உள்ள காஷ்மீர் பகுதி தனியாகப் போவேன் என்றாலும், இந்தியா அல்லது பாகிஸ்தானோடு போவேன் என்றாலும் அதன் விருப்பப்படி தீர்மானிக்க அனுமதிக்கப்பட வேண்டும். பாகிஸ்தானிலுள்ள பலுசிஸ்தான், சிந்து பகுதியும் தன்னாட்சி பெற வேண்டுமா, சுதந்திரம் பெறவேண்டுமா என்பதை அவர்களே தீர்மானிக்க அனுமதிக்கப்பட வேண்டும்"

இந்தப் பேட்டியில் வெறும் இந்திய காஷ்மீர் பகுதி பற்றி மட்டும் இம்ரான் சொல்லி மற்றதை விட்டிருந்தால் இந்தியப் பத்திரிகைகளில் முதல் பக்கத்திலேயே போட்டுச் சாடியிருப்பார்கள். அவ்வாறில்லாமல் எல்லாவற்றைப் பற்றியும் அவர் விமர்சிக்கவே பேட்டியையே பிரசுரிக்காமல் இந்தியப் பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்துவிட்டன.

அதிபயங்கர அடக்குமுறை உள்ள பிற்போக்கு இஸ்லாமிய மதவாதம் ஆட்சியிலுள்ள பாகிஸ்தானிலேயே இம்ரான்கான் துணிச்சலாக அரசியல் கருத்துக்களைப் பேசமுடிகிறது; ஆனால் இந்திய அணியினர் - சமூக அரசியல் விஷயங்கள் இருக்கட்டும் - இந்தியா ஏன் தோற்றது என்பதற்குக் கூட சொந்தக் கருத்தைப் பேச முடியாது. கிரிக்கெட் போர்டு கிழட்டு நரிகளின் சர்வ வல்லமையின் கீழ் இவர்கள் சுண்டுவிரலைக் கூட அசைக்கமுடியாது.

இம்ரானின் இந்த பேட்டி மட்டுமல்ல; வெற்றியையொட்டி, "இது நமது நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தத் துணைக்கண்டத்திற்கே கிடைத்த வெற்றி" என்று சொன்னதும், இந்திய ஆட்டக்காரர்களைப் புகழ்ந்து பேசியதும் இந்துமத வெறியர்களுக்கு ஒரு செருப்படி!

படிப்பகம்

www.padippakam.com

கொலம்பஸ் கண்டுபிடிப்பு: 500-வது ஆண்டுவிழா

# கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடிக்கவில்லை!

*கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கவில்லை; ஆக்கிரமித்தான். அவன் 'புதிய உலகம்' தேடிப் புறப்பட்ட மாலுமி அல்ல; நிறவெறியும், ஆதிக்க வெறியும், பணவெறியும் பிடித்து அலைந்த ஒரு கடல் கொள்ளைக்காரன். கொலம்பஸ் கண்டுபிடிப்பின் 500-வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை அம்பலப்படுத்தும் கட்டுரை இது.*

'கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கவில்லை' என்று கூறினால் வாசகர்கள் அதிர்ச்சியடையக்கூடும்; அல்லது சுப்பிரமண்யசாமி வெளியிடும் 'பரபரப்பு அறிக்கை'யுடன் ஒப்பிட்டு ஒதுக்கிவிடவும் கூடும். புதிதாக யோசனை சொல்பவர்களை ''இவரு பெரிய கொலம்பஸ் - கண்டு பிடிச்சிட்டாரு'' என்று கேலி செய்ததை இன்றோடு நிறுத்திவிடுங்கள் ஏனென்றால் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கவில்லை. (கொலம்பஸ் வரலாறு - பார்க்க பெட்டிச் செய்தி)

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் என்று நீங்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால், யுவான் சுவாங், வாஸ்கோடகாமா, ஆரியர்கள் ஆகிய பலரும் தனித்தனியே இந்தியாவைக் கண்டுபிடித்ததாக ஒப்புக் கொள்ளவேண்டும். வாஸ்கோடகாமா இந்தியாவுக்கு கடல் வழியைக் கண்டுபிடித்தார். இந்தியாவை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், திட்டத்துடன் அவர் பயணம் செய்தார். கொலம்பஸும் இந்தியாவுக்கு கடல்வழி தேடிப் புறப்பட்டவன்தான். அமெரிக்கக் கண்டத்தையே அவன் இந்தியாவாக நினைத்தான், பெயரிட்டான். துதிக்கையைத் தடவிப் பார்த்து விட்டு ''யானை தூண் போல இருக்கிறது'' என்று குருடன் சொன்னால் அது நகைப்புக்குரியது; அந்தக் குருடன் வெள்ளைத்தோல் ஐரோப்பியனாக இருந்த காரணத்தால், துதிக்கைக்கு யானை என்று பெயர் வைத்ததை உலகமே 'ஏற்றுக் கொண்டது' கொலம்பஸ் கரையொதுங்கிய இடத்துக்கு 'மேற்கு இந்தியத் தீவுகள்' என்று பெயரும் சூட்டப்பட்டது.

சரி. அமெரிக்கா கண்டம் என்று ஒன்று பூமியில் இருப்பதையே முதன்முதலில் கொலம்பஸ்தான் கண்டுபிடித்தாரா? அதுவும் இல்லை. நார்வே, கிரீன்லாந்து போன்ற இடங்களிலிருந்து 10-ம் நூற்றாண்டிலேயே சென்ற மாலுமிகள் வட அமெரிக்கா சென்று அங்கே குடியேறியுமிருக்கிறார்கள்; 1440 இல் ரைன்லாந்து பகுதியில் புழக்கத்திலிருந்த உலக வரைபடத்திலும் அமெரிக்கா இடம் பெற்றிருக்கிறது; இது பல ஐரோப்பியர்களுக்கும் தெரிந்திருக்கிறது. கொலம்பஸ் அமெரிக்காவைக் 'கண்டுபிடித்த'தோ 1492 இல்தான். மேற்கூறிய விவரங்கள் சிதம்பர ரகசியங்களல்ல; ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகள்தான். அப்படியிருக்க கொலம்பஸ்தான் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் என்று உலகம் முழுவதும் வரலாற்றுப் பாடம் போதிக்கப்படுவது ஏன்?

அமெரிக்கா யாருடைய நாடு? கொலம்பஸ் கரையிறங்கும்போது அங்கு வெறும் காடும் மலையும்தான் இருந்ததா, மனிதர்களும் இருந்தார்களா? இலட்சக்கணக்கான பழங்குடி மக்கள் இருந்தார்கள். ''வாஸ்கோடகாமாவின் புண்ணியத்தில்தான் இந்தியாவை அடிமைப்படுத்தினோம்'' என்று வாஸ்கோடகாமா கோழிக்கோட்டில் இறங்கிய ஆண்டை இந்தியா 'கண்டுபிடிக்கப்பட்ட' ஆண்டாக பிரிட்டிஷார் கொண்டாடியிருந்தால் நாம் சகித்துக் கொள்ள முடியுமா? நமக்கு வாஸ்கோடகாமாவின் வரவு, ஆதிக்கத்தின் வரவு, அடக்குமுறையின் துவக்கம். அமெரிக்கப் பழங்குடியினரைப் பொறுத்தவரை கொலம்பஸும் அவ்வாறே போர்த்துகீசியர்களைவிடப் பன்மடங்கு கொடூரமான அடக்குமுறையை இனக் கொலையை முன்நின்று நடத்தியவன் கொலம்பஸ். நிறவெறியை, பண்டங்கள் போல அடிமைகள் விற்கப்படுவதை, இனப் படுகொலையை, கொள்ளையை முன்நின்று நடத்திய மண் வெறியும், பொன் வெறியும் ஆதிக்க வெறியும் கொண்ட ஒரு மாலுமிதான் கொலம்பஸ்.

இந்த உண்மைகளை நிறுவுவதுடன் இக் கட்டுரையை முடித்துக் கொள்ளலாம் - அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கொலம்பஸின் கண்டுபிடிப்பிற்கு 500-வது ஆண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாட முனையாமல் இருந்தால்! 15-ஆம் நூற்றாண்டின் கொலம்பஸை இருபதாம் நூற்றாண்டின் கொலம்பஸ்கள் உயிர்ப்பிக்கும்போது நாம் வாளாயிருக்க முடியாது

● ○ ●

''1492: கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். 1992: அமெரிக்கா கொலம்பஸைக் கண்டுபிடிக்கிறது! அமெரிக்க அரசு கொண்டாடவிருக்கும் ஐநூறாவது ஆண்டு விழாவின் முழக்கம் இது. ''கொலம்பஸின் வீரத்தைக் கவுரவிக்கும் வகையில் நமது கொண்டாட்டங்கள் அமையவேண்டும்'' என்று அறைகூவல் விடுத்திருக்கிறார் புஷ். கொண்டாட்டச் செலவுகளுக்கு முதல் தவணையாக 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஸ்பெயினிலிருந்து மூன்று கப்பல்களில் புறப்பட்டு வந்து அமெரிக்காவில் கரையேறிய கொலம்பஸின் 'சாகசச் செயல்' மீண்டும் நிகழ்த்திக் காட்டப்பட உள்ளது. ஸ்பெயினில் உள்ள கொலம்பஸின் சிலைக்கும் அமெரிக்க சுதந்திர தேவியின் சிலைக்கும் திருமணமும் செய்து பார்க்கப் போகிறார்



பஹாமா தீவுகளில் இறங்குகிறான் கொலம்பஸ். பொன்னும், நகையும் கொடுத்து வரவேற்கும் பழங்குடி மக்கள் - 15-ம் நூற்றாண்டு ஓவியம்.



படிப்பகம்

www.padippakam.com

# கொலம்பஸ் ஆக்கிரமிப்பின் வரலாறு!

இந்தியா உலக நாடுகளைக் கவர்ந்த மோகினி. பொன் விளையும் பூமி. பல ஆக்கிரமிப்புகளுக்கும், வணிகத் தொடர்புக்கும் இதுவே காரணம், ஐரோப்பியர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. கி.பி. 1453 இல் துருக்கியர்கள் கான்ஸ்டான்டி நோபிலைக் கைப்பற்றியதால் ஐரோப்பிய நாடுகளின் இந்திய வர்த்தகத்திற்கான தரைவழி துண்டிக்கப்பட்டது. இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. ஸ்பெயினிலிருந்து மேற்கு நோக்கிப் பயணம் செய்த கொலம்பஸ் 1492 இல் அமெரிக்காவில் இறங்கினார். போர்த்துகலில் இருந்து கிளம்பிய வாஸ்கோடகாமா கிழக்கு முகமாக பயணம் செய்து நன்னம்பிக்கை முனையைச் சுற்றி கோழிக்கோட்டில் வந்து இறங்கினார். இனி கொலம்பஸின் வரலாறு சுருக்கமாக:

ஜெனோவா நாட்டில், நெசவாளி ஒருவரின் மகனாகப் பிறந்த கொலம்பஸ் தனது இருபது வயதிலிருந்து இரண்டாண்டுகள் கடற்கொள்ளைக்காரனாக இருந்தான். பின்னர் போர்த்துகீசிய கப்பல் படையில் சேர்ந்து ஜெனோவாவிற்கு எதிரான யுத்தத்திலும் ஈடுபட்டான். பல்வேறு வர்த்தகப் பயணங்களில் ஈடுபட்ட கொலம்பஸுக்கு மேற்கு முகமாகப் பயணம் செய்து இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடிக்கும் ஆசை ஏற்பட்டது. சரியாகச் சொன்னால் இந்தியாவுக்கு வழி கண்டுபிடிப்பது என்ற தெளிவான லட்சியமும் கொலம்பஸுக்கு கிடையாது. 'பொன் விளையும் பூமி' ஏதாவது ஒன்றை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்ற வெறிதான் எஞ்சியிருந்தது.

மேற்கு முகமாகச் சென்று இந்தியாவுக்கு குறுக்கு வழி கண்டுபிடிக்கும் தனது திட்டத்திற்கு போர்த்துகல் மன்னன் நிதியுதவி செய்ய மறுக்கவே ஸ்பெயின் மன்னன் பெர்டினான்டையும் இசபெல்லாவையும் அணுகினான். ஸ்பெயினிலிருந்து மேற்கே 3900 மைல் தூரத்தில் இந்தியா இருப்பதாக (உண்மையில் விண்வெளித் தூரமே 10,600 மைல்கள்) கொலம்பஸ் முன்வைத்த 'கண்டுபிடிப்பை' ஸ்பெயின் மன்னன் அமைத்த நிபுணர் குழு 5 ஆண்டுகள் ஆய்வு செய்து இறுதியாக ஏற்றுக் கொண்டது. கொலம்பஸ் கண்டுபிடிக்கவிருக்கும் இடங்கள் ஸ்பெயினுக்கு சொந்தம் என்றும் அதற்குப் பதிலாக கொலம்பஸுக்குத் தர வேண்டிய சன்மானங்களும் பேரம் பேசி முடிக்கப்பட்டன. கடற்பயணத்திற்கான செலவுகளுக்கு ராணி இசபெல்லா தனது நகைகளை அடகு வைத்து பணம் கொடுத்ததாக ஒரு கட்டுக்கதை உண்டு; அது பொய். யூதர்களிடமிருந்தும், முஸ்லீம்களிடமிருந்தும் பிடுங்கப்பட்ட சொத்துக்கள்தான் கொலம்பஸிற்குத் தரப்பட்டது.

**கொலம்பஸின் முதற்பயணம்:**

ஆகஸ்டு -3' 1492 அன்று சந்தா மரியா, பின்டா, நினா ஆகிய மூன்று சிறு கப்பல்களில் கொலம்பஸின் தலைமையில் 90 மாலுமிகள் புறப்பட்டனர். அவநம்பிக்கையும், சோர்வும் அளிக்கும் நீண்ட பயணத்துக்குப் பின் அக்டோபர் 12-ம் தேதி நள்ளிரவில் நிலம் தென்படுவதாக 'ரோட்ரிகோ டி டிரியானா' என்ற மாலுமி ஆனந்தக் கூச்சலிட்டான். முதலில் நிலத்தைப் பார்ப்பவர்களுக்குரிய வெகுமதியையும், பெருமையையும் பறித்துக்கொள்ள விரும்பிய கொலம்பஸ் தான் அவனுக்கு முன்னரே பார்த்துவிட்டதாகக் கூறி அவனை அடக்கிவிட்டான். இது கொலம்பஸின் 'நேர்மைக்கு' ஒரு உதாரணம்.

கொலம்பஸ் சென்று இறங்கிய இடம் பஹமா தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த குவானாஹனி என்ற தீவு. தீவில் இறங்கிய கொலம்பஸ் அங்கே ஸ்பானிய கொடியை நட்டு ஸ்பெயின் மன்னனின் கட்டுப்பாட்டில் அத்தீவைக் கொண்டுவருவதாக அறிவித்து அத்தீவுக்கு சான் சூல்வடார்' என்று பெயரும் சூட்டினான். டெய்னோ பழங்குடி



**கொலம்பஸ்**

இனததைச் சேர்ந்த அத்தீவின் விவசாயிகளின் மூக்கிலும் காதிலும் தங்கத்தைப் பார்த்தவுடனே அவர்களை இந்தியர்கள் என்று நம்பினான்.

''கடவுள் தங்கத்தின் பிறப்பிடத்தை எனக்குக் காட்டுவார்'' என்று பிதற்றியவாறே 15 நாட்கள் அந்தத் தீவுக்கூட்டத்தில் அங்குமிங்கும் தேடி அலைந்தான். தான் ஆசியா கண்டத்தின் கிழக்கு பகுதிக்கு வந்துவிட்டதாக நம்பிய கொலம்பஸ் அடுத்து ஜப்பானைத் தேடத் தொடங்கினான். அந்தப் பழங்குடி மக்கள் அவ்னை கியூபாவுக்கு அழைத்துச் சென்றனர்; 20-ம் நூற்றாண்டில் வெள்ளையர்களுக்குத் தங்கத்தை வாரிக் கொடுக்க இருக்கும் புகையிலையை அறிமுகப்படுத்தினர். மோசடி பண்டமாற்றுக்குத் தங்கள் நகைகளையும் வாரிக்கொடுத்தனர். தங்கத்தைக் கொடுப்பதன் மூலம் தங்கள் எதிர்காலத்திற்குத் தாங்களே சவக்குழி தோண்டிக் கொள்கிறோம் என்பதை அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

பழங்குடியினரின் அன்புக்கு கைம்மாறாக அவர்களில் 7 பேரை சிறைப்பிடித்து கப்பலில் ஏற்றினான் கொலம்பஸ். மனிதர்களை தின்னும் கூட்டமிராண்டிக் கூட்டம் தான் இது என்று ஆத்திரமுற்ற பழங்குடியினர் எதிர்க்கத் தொடங்கினர்.

உடனே அங்கிருந்து புறப்பட்ட கொலம்பஸ் இன்று ஹெய்தி, டொமினிகன் குடியரசுகள் என்றழைக்கப்படும் தீவுக்கூட்டங்களை அடைந்தான். அதன் புவியியல் அமைப்பும், வாழ்ந்த மக்களின் தோற்றமும் ஸ்பானியர்களை ஒத்திருக்கவே அதற்கு 'இஸ்பானோலா' என்று பெயரிட்டான். தன்னுடன் வந்த மாலுமிகளில் 38 பேரை அங்கே குடியமர்த்தி அவர்களுக்கு ஒரு ஆண்டுக்குத் தேவையான உணவும், ஆயுதங்களையும் ('உள்ளூர் பழங்குடியினர்க்கு நம்மிடம் அச்சம் கலந்த அன்பு இருக்க வேண்டும்' - கொலம்பஸ்) அளித்தான்.

தான் கண்டுபிடித்த 'இந்தியா'வை வேறு யாரும் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காகத் தூரம் பயண நேரம், பாதை ஆகியவற்றை மிகவும் ரகசியமாக வைத்துக் கொண்டான் கொலம்பஸ்.

கோலாகலகத்திற்கிடையே, தாங்கள் ''கண்டுபிடித்த இந்தியாவை'' எங்கே போர்த்துகீசியர்கள் ஆக்கிரமித்துக் கொள்வார்களோ என்று அஞ்சி அதைத் தடுக்கும் பொருட்டு போப்பை அணுகினான் ஸ்பெயின் மன்னன். ஐரோப்பிய மன்னர்களுக்கிடையே தோன்றும் முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரம் அன்று வாடிகனுக்கு இருந்தது. கொலம்பஸ் 'கண்டி பிடித்த' இந்தியாவையும், இனி கண்டு பிடிக்க இருக்கின்ற இந்தியாவில் பாதியையும் ஸ்பெயினுக்கு 'பட்டா' போட்டுக் கொடுத்தார் அன்றைய போப் நான்காவது அலெக்சாண்டர்.

**கொலம்பஸின் இரண்டாவது பயணம்:** போர்த்துகீசியர் குறித்த அச்சம், பொன்னையும் அடிமைகளையும் கண்டத்தில் தோன்றிய வெறி ஆகியவை காரணமாக கொலம்பஸின் இரண்டாவது பயணத்துக்கு அவசர அவசரமாக ஏற்பாடு செய்தான் ஸ்பெயின் மன்னன். முதல் பயணத்தின்போது சிலுவையைச் சுமந்து கிறித்துவத்தைப் பரப்பச் செல்வதாக வேடமிட்ட கொலம்பஸ் இப்போது அப்பட்டமான ஆக்கிரமிப்பாளனாகப் புறப்பட்டான். சிப்பாய்கள், பெண்கள், பாதிரிகள், மருத்துவர்கள், விவசாயிகள் ஆகியோரடங்கிய 1500 பேர் கொண்ட பெரும்படை 17 கப்பல்களில் செப்.1493 இல் புறப்பட்டது.

இஸ்பானோலாவுக்குக் கொலம்பஸின் பட்டாளம் போய்ச் சேர்ந்தபோது அங்கே அவன் விட்டு வந்திருந்த 38 பேரும் உள்ளூர் மக்களால் கொல்லப்பட்டதை அறிந்தான்; உடனே அவர்கள் ஒருவேளை தங்கத்தை எங்காவது ஒளித்து வைத்திருக்கக்கூடும் என்று தேடத் தொடங்கினான். பயனின்றிப் போகவே அந்தத்

படிப்பகம்

www.padippakam.com

தீவுக் கூட்டங்களிலேயே வேறொரு தீவைத் தெரிவு செய்து, அதற்கு இச பெல்லா என்று பெயர் சூட்டி அனைவரையும் அங்கே குடியேற்றினான்.

காலனியவாதிகளை எதிர்த்துப் போராடத் தொடங்கிய உள்ளூர் மக்களைக் கூட்டம் கூட்டமாகப் பிடித்து அடிமைகளாக ஸ்பெயினுக்கு அனுப்பினான். உள்ளூர் மக்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு இவ்வளவு தங்கம் வரியாகச் செலுத்த வேண்டும் என்று சட்டமியற்றினான். இயலாதவர்கள் பட்டினி போடப்பட்டனர்; ஆயிரக்கணக்கில் பச்சைப் படுகொலை செய்யப்பட்டனர்; பெண்கள் கற்பழிக்கப் பட்டனர். மற்ற தீவுகளை ஆக்கிரமிக்க ஸ்பெயின் சிறைகளிலிருந்த கிரிமினல்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தனது கொடூரமான வழிமுறைகளை எதிர்த்த ஸ்பானியர்களையும் நூற்றுக்கணக்கில் தூக்கிலிட்டுக் கொல்ல கொலம்பஸ் சிறிதும் தயங்கவில்லை. தனது சகோதரன் தாமஸை அரசாங்க நிர்வாகியாக நியமித்து விட்டு இந்தியாவின் நிலப்பகுதியையும் சீனத்தையும் கண்டுபிடிக்கப் புறப்பட்டான். சுமார் 240 கிலோ மீட்டர்கள் மேற்கு நோக்கிச் சென்றுவிட்டு, வந்த வழியிலேயே திரும்பி கியூபாவை வந்தடைந்தான். இது தான் இந்திய நிலப்பகுதி என்று அவன் நம்பியதுடன் மற்ற மாலுமிகளும் அவ்வாறே கூறவேண்டும் என்றும் சத்தியம் செய்யச் சொன்னான் இது இந்தியா இல்லை என்று சந்தேகம் தெரிவித்தாலோ, கியூபாவை ஒரு தீவு என்று கூறினாலோ அவர்களது நாக்கை அறுத்துவிடுவேன் என அறிவித்தான். மீண்டும் இசபெல்லாவுக்குத் திரும்பியபோது உள்ளூர் மக்களின் பெரும் எழுச்சியை ஒடுக்க வேண்டியிருந்தது. ஆயிரக்கணக்கானோரைக் கொன்று, 500 பேரை அடிமைகளாக ஸ்பெயினுக்கு அனுப்பினான். சொந்த நாட்டினரையே மிகக் குரூரமாக நடத்தியதால் தோன்றிய அதிருப்தி மன்னன் காதுக்கு எட்டவே, மன்னனை சமாதானம் செய்ய ஸ்பெயினுக்குத் திரும்பினான்.

**கொலம்பஸின் மூன்றாவது பயணம்**

மே'1498 இல் கிளம்பி தென் மேற்காகப் பயணம் செய்து தென் அமெரிக்கக் கண்டத்தின் வட பகுதியிலுள்ள டிரினிடாடுக்கு வந்து சேர்ந்தான். பரியா தீபகற்பத்தில் வாழும் பழங்குடி மக்களின் கழுத்தில் முத்து மாலைகளைக் கண்ட மாலுமிகள் இதுதான் இந்தியா என்று ஆர்ப்பரித்தனர்; ஓரனோகோ நதியின் முகத்துவாரத்தில் கடலில் வந்து கலக்கும் நல்ல நீரைப் பார்த்தவுடன் இந்தியாவை மறந்துவிட்டு சொர்க்கம் பற்றிய நம்பிக்கையில் மூழ்கிப்போனான். கூம்பு வடிவிலான உலகத்தின் உச்சியில் சுவர்க்கம் இருப்பதாகவும் அங்கிருந்து பாயும் நான்கு நதிகளில் ஒன்றின் முகத்துவாரத்தில் தான் இருப்பதாகவும் நம்பினான். சொர்க்கம் ஒருபுறமிருக்க கியூபா தான் இந்தியா என்ற நம்பிக்கையை கொலம்பஸ் கைவிடவில்லை.

**கொலம்பஸின் நான்காவது பயணம்:**

புவியியல், விஞ்ஞானத்தையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு புவியியல் குறித்த பைபிளின் கூற்றுகள் அடிப்படையில் இந்தியா, மலேயா, சீனாவைக் கண்டுபிடிப்பதுடன் ஜெருசலேமையும் 'விடுதலை' செய்யத் திட்டம் தயாரித்து 1502 இல் புறப்பட்டான். இந்தமுறை அவன் போய்ச் சேர்ந்த இடம் ஹொண்டுராஸ். அங்கிருந்த மக்களின் உயர்ந்த பண்பாடும், அவர்களிடமிருந்த தங்கமும் கொலம்பஸை கொள்ளைக்கும் கொலைக்கும்தான் தூண்டியது. ஹொண்டுராஸ் சூறையாடப்பட்டது. 'இந்தியர்கள்' படுகொலை செய்யப்பட்டனர். ''இங்கிருந்து பத்தே நாட்களில் கங்கையை அடைந்து விடுவேன்'' என்று மன்னனுக்கு கடிதம் அனுப்பினான் கொலம்பஸ். ஆனால் பல தீவுகளில் பழங்குடிகளைக் கொலை செய்யவும் தங்கத்தை சூறையாடவும் மட்டுமே அவனால் முடிந்தது. 1504 இல் ஸ்பெயினுக்குத் திரும்பிய கொலம்பஸ் தான் கண்டுபிடித்த இந்தியத் தீவுகள் முழுவதையும் மன்னன் தனக்கே சொந்தமாக்குவான் என்று கனவு கண்டு ஏமாந்து 1506 இல் இறந்தான்.

---

கள். இன்னும் பல வடிவங்களில் கொண்டாட்டங்கள் நடக்கவுள்ளன.

பிற வடிவங்களைக் காட்டிலும் ஓரளவு பொருத்தமானது இந்தத் திருமணம் தான். அமெரிக்க ஜனநாயகப் புரட்சியின் சின்னம் சுதந்திர தேவியின் சிலை; ஆக்கிரமிப்பு, நிற வெறி, பகற்கொள்ளை, இனப் படுகொலை, பொருள் வெறி, நம்பிக்கை மோசடி - ஆகியவற்றின் சின்னம் கொலம்பஸ். அமெரிக்காவின் இரட்டை வேடத்தை சூசகமாகத் தெரிவிக்கவல்லது இந்தத் திருமணம்தான். சுதந்திர தேவியின் சிலையை அகற்றி அங்கே கொலம்பஸின் சிலையை நிறுவுவது மேலும் பொருத்தமாயிருக்கும்.

'அமெரிக்கா கொலம்பஸைக் கண்டு பிடிக்கிறது'- 250 கோடி ரூபாய் செலவு செய்து! விரயம்!! ராட்னி கிங் எனும் கறுப்பினத் தொழிலாளியின் மண்டையைப் பிளந்த 'வெள்ளை' காவலர்களை, நிரபராதிகள் என்று விடுதலை செய்த 'வெள்ளை' நீதிபதிகளில் அமெரிக்கா கொலம்பஸைக் கண்டுபிடிக்கவில்லையா? கரீபியப் பழங்குடி மக்களை நரவேட்டையாடிய தனது வெள்ளை மாலுமிகளுக்கு கொலம்பஸ் வழங்கியிருக்கக் கூடிய தீர்ப்புதானே அது!

கொலம்பஸின் 'வரம்புமீறிய' நரவேட்டையால் கவலை கொண்ட ஸ்பெயின் மன்னன் பெர்டினாண்டைப் போல புஷ் பதறுகிறார்: ''நமது முகத்தையே விகாரமாகத் திரித்துக் காட்டும் கண்ணாடியைப் பார்த்து அதிர்ச்சியடைவது போல லாஸ் ஏஞ்செல்ஸ் கலவரத்தால் கவலையுற்றதாக'' கூறுகிறார். கண்ணாடியில் பிரசன்னமானது அவரது கொள்ளுப்பாட்டன் கொலம்பஸ்தான் என்பதை யார் அவருக்குப் புரிய வைப்பது? கறுப்பின மக்கள்தான் - புரிய வைக்க வேண்டும்.

''இந்த நாட்டை வெறுக்கிறோம்; இதன் கொடியை வெறுக்கிறோம்; இந்தத் தீர்ப்பை மன்னிக்கும் எல்லா வெள்ளையர்களையும் வெறுக்கிறோம்'' என்கிறார் நியூயார்க் கறுப்பின சேரி நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் பௌவெல். மகிழ்ச்சியின் 500-வது ஆண்டு விழாவை, வெறுப்பின் 500-வது ஆண்டு விழா முந்திக் கொண்டு விட்டது. லாஸ் ஏஞ்செல்ஸில் பற்றியெரியும் தீயின் வெளிச்சத்தில் கொலம்பஸின் குற்றங்கள் விகாரமாகத் தெரிகின்றன.

இன்றைய அமெரிக்காவின் கறுப்பின இளைஞர்களில் நான்கில் ஒருவர் சிறையில் இருக்கிறார். வேறு விதமாகச் சொல்வதென்றால் கல்லூரியில் படிக்கும் கறுப்பின இளைஞர்களைவிட சிறையில் இருப்பவர்களே அதிகம். தமது சொந்த மண்ணான ஆப்பிரிக்காவிலிருந்து அவர்களைப் பிடுங்கிக் கொண்டுவந்து சீரழித்தது யார்? கறுப்பன் என்றாலே அடிமை என்ற நிலையை உருவாக்கியது யார்?

> **அமெரிக்காவின் இருட்டடிப்பு வேலை!**
>
> அமெரிக்க இந்தியர்களின் மாயா, இன்கா நாகரிகங்கள் மிகப் புராதனமானவை. அமெரிக்காவை ஆக்கிரமித்த வெள்ளையர்கள் இந்தியர்களைக் கொன்றொழித்தது மட்டுமின்றி இந்தப் புராதன நாகரிகங்களை வரலாற்றிலிருந்து இருட்டடிப்பும் செய்துவிட்டார்கள். தொடர்ந்த போராட்டங்களுக்குப் பின் 1924 இல்தான் மண்ணின் மைந்தர்களான செவ்விந்தியர்களுக்கு அமெரிக்கப் பாராளுமன்றம் குடியுரிமையையே வழங்கியது. அமெரிக்க கண்டங்களின் 15 நாடுகளைச் சேர்ந்த பழங்குடி மக்கள் 1977 இல் நடத்திய மாநாட்டில் தங்களுக்குத் தனி நாடு வேண்டுமென கோரியுள்ளனர்.

**நிறவெறியின் தந்தை!**

கொலம்பஸ், ஆம்! அமெரிக்க அடிமை வர்த்தகத்தின் தந்தை கொலம்பஸ்; வெள்ளையர் அல்லாதவர்களை மட்டுமே அடிமையாக்கியதன் மூலம், அடிமை வியாபாரத்துடன் நிறவெறியையும் இணைத்தவன் கொலம்பஸ்.

கொலம்பஸிற்கு முந்தைய காலத்திலும் அடிமை வர்த்தகம் இருந்தது. ஆப்பிரிக்காவிலிருந்து போர்த்துகீசியர்களால் கொண்டுவரப்பட்ட கறுப்பின அடிமைகள் வீட்டு வேலைக்காரர்களாக, கணக்கர்களாக, வர்த்தக முகவர்களாகக்கூட பணியாற்றியிருக்கிறார்கள். 1440 இல் போர்த்துகலில் ஆப்பிரிக்க அடிமைகள் ஏலம் விடப்பட்டபோது அவர்களை குடும்பங்களிலிருந்து பிரித்துக் கொண்டுவந்ததை சாதாரண போர்த்துகீசிய குடிமக்களே எதிர்த்திருக்கிறார்கள். காரணம் நிறம் அல்லது இனம் காரணமாக இயற்கையிலேயே தங்களைவிடத் தாழ்ந்த மனிதர்களாக அடிமை

படிப்பகம்

www.padippakam.com

களை அவர்கள் கருதவில்லை.

ஆனால் அடுத்த 60 ஆண்டுகளில் கி.பி. 1500 இல் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. மத்திய அமெரிக்கத் தீவுகளின் பழங்குடி மக்களை இரண்டு வகையாகப் பிரித்தான் கொலம்பஸ். ''அரவாக் இனத்தவர்கள் ஆயுதமேந்த லாயக்கற்றவர்கள், ஆனால் சொல்வதை எளிதில் புரிந்து கொள்ளக்கூடியவர்கள் - எனவே அவர்களை வேலைக்காரர்களாகப் பயன்படுத்தலாம்; கரீபிய இனப் பழங்குடிகள் மூர்க்கமானவர்கள் - எனவே அவர்களை அடிமைச் சந்தையில் விற்றுவிடலாம்'' என்று ஸ்பெயின் மன்னனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டான்.

தன்னை அன்புடன் வரவேற்று பொன்னை அள்ளித்தந்த சான் சால்வடார் பழங்குடிகளை விலங்கிட்டு அடிமையாக இழுத்து வந்தான்; ஹெய்தி மக்களைப் பார்த்து ''உலகத்திலேயே இவர்களைப் போல இனிமையானவர்கள் கிடையாது'' என்று சொல்லிவிட்டு அடுத்த வரியிலேயே ''இவர்களை நல்ல வேலையாட்களாகப் பயன்படுத்தலாம்'' என்று சிபாரிசு செய்தான். ஆயிரக்கணக்கான அமெரிக்கப் பழங்குடிகளைப் பிடித்து ஸ்பெயினுக்கு ஏற்றுமதி செய்ததுடன் மற்றவர்களை சொந்த மண்ணிலேயே அடிமையாக்கினான். நிறவெறியின் அடிப்படையிலான அடிமை முறையை கொலம்பஸின் பாதையில் அமெரிக்காவை ஆக்கிரமித்த ஐரோப்பியர்கள் அனைவரும் தொடர்ந்தனர். 1622 இல் ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்த பௌஹாட்டன் பழங்குடி மக்களை ''மிருகங்கள்... மிருகங்களைவிட மிருகத்தனமான மிருகங்கள்'' என்று சாடினான் ஆங்கிலேய காப்டன் ஸ்மித்.

இருபதாம் நூற்றாண்டுக்கு வருவோம். 'ஆரிய இனம் இயற்கையிலேயே உயர்ந்தது' என்றான் ஹிட்லர்; ''ஆங்கிலேயர்கள் இயற்கையிலேயே தனிச் சிறப்பான குணாம்சங்களைக் கொண்டவர்கள்'' என்றார் மார்கரெட் தாட்சர்; 'அமெரிக்க மாண்பு, அமெரிக்க சிந்தனை' என்று பலவாறாகப் பேசுகிறார் புஷ். வெள்ளையர்களைத் தவிர பிறர் இயற்கையிலேயே தாழ்ந்தவர்கள் என்ற கொலம்பஸின் கருத்து எப்படியெல்லாம் அவதாரம் எடுக்கிறது!



13 அப்போஸ்தலர்களுக்காக வெள்ளையர்களால் நரபலியிடப்படும் செவ்விந்தியர்கள்: இறந்தவர்களின் குழந்தைகள் வாளால் குத்தி சுழற்றி எறியப்பட்டனர் - **'லாஸ் கஸாஸ் எனும் பாதிரியின் வாக்கு மூலத்திலிருந்து'**

### அடிமை விற்பனை - கொலம்பஸின் கண்டுபிடிப்பு!

நிறவெறி மட்டுமல்ல; அடிமைகளை பண்டங்கள் போலவும், ஆடுமாடுகள் போலவும் விற்பனை செய்யும் முறையை அறிமுகப்படுத்தியவன் கொலம்பஸ். அவனுக்கு முந்தைய காலத்தில் ஒரு அடிமையை விலைகொடுத்து வாங்கிய ஆண்டை, விதிவிலக்கான சமயங்கள் தவிர மற்றெப்போதும் ஆடுகளைப்போல விற்றதில்லை. ஆதிக்கமும் சுரண்டலும் இருந்த போதும் அடிமைகள் தங்கள் ஆண்டையுடன் பல பரம்பரைகளுக்குக்கூட பிணைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் நோயுற்றவர்கள், குறிப்பிட்ட திறமையில்லாதவர்கள், முதியவர்கள், பெண்கள் ஆகியோரை அடிமாடுகளைப் போல விற்கும் முறையை அறிமுகப்படுத்தியவன் கொலம்பஸ்.

அமெரிக்க முதலாளித்துவத்தின் வளர்ச்சி கொலம்பஸின் இந்தக் 'கண்டுபிடிப்பை' அதன் எல்லைக்கே கொண்டு சென்றது. அமெரிக்காவின் புகையிலை, ரப்பர், காப்பித் தோட்டங்களுக்காக ஆப்பிரிக்க மக்கள் விரட்டி, வேட்டையாடி, கூண்டிலடைத்து ஏலமிடப்பட்டனர்.

அமெரிக்காவின் நவீன முதலாளித்துவம் கொலம்பஸின் கோட்பாட்டை காலத்திற்கேற்பப் பிரயோகிக்கிறது. Hire and Fire (வேண்டுமென்றால் வைத்துக்கொள்; வேண்டாமென்றால் துரத்திவிடு) என்ற மூன்றே சொற்களுக்குள் தனது தொழிலாளர் 'நல' சட்டத்தை அமெரிக்கா அமல்படுத்துகிறது; நம்மையும் அமல்படுத்த நிர்ப்பந்திக்கிறது. இளமையை முதலாளிக்குத் தந்துவிட்டு முதுமையில் விரட்டப்பட்டு நிர்க்கதியாய்த் தெருவில் நிற்கும் அமெரிக்க அநாதைகளை உருவாக்கிய பிதாமகன் கொலம்பஸ்.

''பொறுமை, வீரம் போன்ற நற்குணங்களை கொலம்பஸிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டும்'' என்கிறது ஒரு அமெரிக்க பாடநூல்; ''கரீபிய மக்களிடம் கொலம்பஸ் பெரும் ஆர்வம் காட்டினார்; இருந்த போதும் கொலம்பஸ் அவர்கள் மத்தியில் நிம்மதியாக வாழமுடியவில்லை'' என்கிறது இன்னொரு அமெரிக்கப் பாடநூல்.

இதைப் படிக்கின்ற யாரும் கொலம்பஸை புத்தனாகவும், அமெரிக்கப் பழங்குடிகளை காட்டுமிராண்டிகளாகவும் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும். பழங்குடிகளிடம் கொலம்பஸ் காட்டிய ''ஆர்வத்திற்கு'' சான்று?

### கொலைகாரன் கொலம்பஸ்!

தூக்கு மேடையைப் பார்த்திராத அமெரிக்கத் தீவுகளில் 340 தூக்கு மேடைகளை நிறுவினான் கொலம்பஸ். இஸ்பானோலாவில் மட்டும் 50,000 பழங்குடிகளைப் படுகொலை செய்தான். எப்படி என்பதை எழுதுகிறார் கொலம்பஸின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய கிர்க் பாட்ரிக் சேல்:

''இந்தியர்களின் (பழங்குடிகளின்) கைகால்களையும் குடலையும் நாய்களைக் கொண்டு குதற வைத்தனர்; தப்பியோடிய இந்தியர்களை புதர்களில் தள்ளி ஈட்டிகளாலும் வாள்களாலும் கிடுக்கிப் பிடிபோட்டுக் கொன்றனர்; தப்பி ஓடியவர்களையும் தேடிப் பிடித்துக் கொன்று 'கடவுள் அருளால்' விரைவில் முழுவெற்றி அடைந்தனர்

விரட்டிப் பிடித்த பழங்குடிப் பெண்களைத் தன் மாலுமிகளுக்கு பரிசாகத் தந்தான் கொலம்பஸ். அந்தப் பெண்களைத் தாங்கள் பலாத்காரம் செய்ய முனைந்த போது அவர்கள் காட்டிய எதிர்ப்பை ஆத்திரத்துடன் தனது குறிப்புகளில் எழுதுகிறான் மாலுமி. காமவெறியால் கொலம்பஸின் மாலுமிகளுக்குள்ளேயே தோன்றிய கலவரங்களை எழுதுகிறான் இன்னொரு மாலுமி.

புஷ்ஷின் அமெரிக்கா தனது குழந்தைகளுக்குக் கற்றுத்தர விரும்பும் கொலம்பஸின் வீரத்திற்கும் பொறுமைக்கும் இவை சில சான்றுகள். கொலம்பஸ் காட்டிய பாதையை அமெரிக்காவை ஆக்கிரமித்த ஐரோப்பியர்கள் அனைவருமே தவறாமல் பின்பற்றினார்கள்.

25,000 ஆண்டுகளாக வாழ்ந்து வளர்ந்த அந்த மக்களின் மண்ணை அவர்களது ரத்தத்தைக் கொண்டே கழுவிவிட்டு,

படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்கா எனப் பெயர் சூட்டி குடியேறி னார்கள்.

கொலம்பஸ் முதன் முதலில் ஆக்கிர மித்த ஹெய்தி மற்றும் டொமினிகன் தீவுக ளின் அன்றைய - 1492 இல் - 'மக்கள் தொகை 30 லட்சம். அடுத்த 40 ஆண்டுக ளில் அதாவது 1532 இல் அங்கே எஞ்சியி ருந்தவர்கள் வெறும் 300 பேர். கொலை செய்யப்பட்டவர்கள் வெறும் பழங்குடி மக் கள் அல்ல; கொலம்பஸின் வார்த்தைகளில் சொன்னால் ''உலகத்திலேயே மிக இனி மையான மக்கள்!''

அமெரிக்கா என இன்று அழைக்கப்ப டும் நிலப்பகுதியில் வாழ்ந்திருந்த பழங்குடி கள் 2 கோடி. வன விலங்குகளைப் போல மாதிரிக்காக இன்று விட்டு வைக்கப்பட்டி ருப்பவர்கள் 16 லட்சம்.

மெக்சிகோவில் ஐரோப்பியர்களின் 'நாகரீக'க் காலடிகள் பதியும்போது அங்கி



**கொலம்பஸ் 500-வது ஆண்டுவிழா எதிர்ப்பு ஊர்வலம் மண் ணின் மைந்தர்களான செவ்விந்தியர்கள், உரிமை கோரி மனாகுவா விலிருந்து வாஷிங்டனுக்கு (4800 மைல்) ஊர்வலம் சென்று கொண் டிருக்கிறார்கள்.**

ருந்த மக்கள் 2 1/2 கோடி. இன்று எஞ்சியி ருப்பவர்களோ 20 லட்சம்.

ரத்தத்தை உறைய வைக்கும் இந்த இன ஒழிப்பை சாதிக்க நேரடியான கொலைகளைக் காட்டிலும் வக்கிரமான முறைகளையெல்லாம் கையாண்டார்கள் கொலம்பஸின் ஐரோப்பிய வாரிசுகள்.

அழிந்தது போக 4000 பேர் மட்டுமே எஞ்சியிருந்த 'சேயன்' எனும் பழங்குடி மக் களை ஆடுமாடுகளைப் போலக் காயடித் தார்கள்; வர்ஜீனிய பழங்குடி மக்களின் குழந்தைகளை அவர்களிடமிருந்து கட்டா யமாகப் பறித்துக் கொண்டு சென்றது வர்ஜி னியா புகையிலைக் கம்பெனி.

போர்வையைக் கொடுத்து பழங்குடிக ளின் நிலத்தை எழுதி வாங்கிக் கொண்டார் கள். அந்த அப்பாவி மக்கள் அதைப் பயன் படுத்திய போது அப்போர்வையே அவர்க ளது இறுதிப் பயணத்திற்கான கோடித்துணி யானது. ஆம்! வெள்ளையர்கள், பழங்குடி களுக்குக் கொடுத்த போர்வை அம்மை நோயாளிகள் பயன்படுத்திய போர்வை.

வெள்ளையர்களின் நயவஞ்சகம் குறித்து இன்று மனம் வெதும்பிக் கூறுகிறார் ஒரு செவ்விந்தியத் தலைவர்: ''பல்வேறு செவ்விந்திய இனக்குழுக்களுடன் மொத் தம் 371 ஒப்பந்தங்கள் போட்டார்கள் வெள் ளையர்கள். எங்களால் நினைவு வைத்துக் கொள்ளக்கூட முடியாத அளவு பல உறுதி மொழிகளைக் கொடுத்தார்கள். ஆனால் ஒன்றை மட்டும்தான் நிறைவேற்றினார்கள் - எங்கள் நிலத்தை எடுத்துக் கொள்கிறோம் என்றார்கள். எடுத்துக் கொண்டார்கள்''

மனித நாகரிகத்தின் இருண்ட பக்கங்க ளைச் சித்தரிக்க செங்கிஸ்கானையும், இடி அமீனையும் உதாரணம் காட்டுகிறார்கள் ஐரோப்பிய, அமெரிக்க வரலாற்றாசிரியர் கள். இந்த வக்கிரமான இன ஒழிப்பு நடவ டிக்கையை ஒப்பிடும்போது அவர்கள் எம் மாத்திரம்? இந்த குரூரத்தை நடத்தி முடிக்க கொலம்பஸின் வாரிசுகளுக்கு எப்படி மனம் வந்தது? இதை நிறைவேற்றுவதற் கான 'தார்மீக பலத்தை' எப்படிப் பெற்றார் கள்? 'தார்மீக நியாயத்தை' எப்படிக் கற்பித் தார்கள்? இந்தக் கேள்விக்கான விடை அவர்கள் நடத்தி முடித்த படுகொலையை விட பயங்கரமானது.

**வெள்ளையனை எதிர்ப்போர் மனிதர்களல்ல!**

ஒரு நாகரிகம் அல்லது இனம் இன் னொன்றுடன் மோதும்போது போர்களும் கொலைகளும் வரலாற்றில் தவிர்க்கவிய லாதவைதான். அதிலும் முன்னேறிய நாகரீ கத்தின்மீது பின்தங்கிய நாகரீகம் படையெ டுக்கும்போது அழிவு அதிகமாக இருக்கும். சிந்து சமவெளியின் திராவிட நாகரிகத்தின் மீது நாடோடி ஆரியர்கள் நடத்திய தாக்குத லையும், செங்கிஸ்கானின் போர்களையும் இன்ன பலவற்றையும் இதற்கு உதாரணம் காட்டலாம். ஆனால் பின்தங்கிய பழங்குடி மக்கள்மீது முன்னேறிய 'வெள்ளை நாகரீ கம் தொடுத்த தாக்குதலுக்கும்' இனக் கொலைக்கும் கிறித்துவப் பாதிரிகளும், வெள்ளை ஆதிக்கவாத வரலாற்றாசிரியர்க ளும் கற்பிக்கும் நியாயத்தின் சாரம் இது தான்.

முறியடிக்க வேண்டிய எதிரிகளை - பழங்குடி மக்களை - கொலம்பஸும் அவர் களது வாரிசுகளும் உயிருள்ள மனிதர்க ளாகக் கருதவில்லை; அகற்றப்பட வேண் டிய உயிரற்ற சடப் பொருளாகவே கருதி னார்கள்; சித்தரித்தார்கள்.

''அவர்களிடம் பண்பாடு இல்லை, எழுத்துத் தெரியவில்லை, வரலாற்றை எழுதி வைப்பதில்லை, எழுதப்பட்ட சட்ட மில்லை, ஒருவருக்கொருவர் மோதிக் கொள்கிறார்கள், நம்மைக் கண்டால் பெண் களைப் போல (!) ஓடி ஒளிகிறார்கள்'' - பழங்குடிகளை அடிமையாக்கி விற்க 1550 இல் ஸ்பானிய அரசுப் பிரதிநிதி கூறிய நியாயம் இது. தமது கொலைகளும், அடி மையாக்குவதும் சட்டப்படி செல்லும் என்ப தற்கு 16-ம் நூற்றாண்டின் ஸ்பானிய நீதிபதி கூறிய நியாயம் ''அவர்கள் பண்பாடற்ற காட்டுமிராண்டிகள்'' என்பதுதான். ''அவர் கள் மாற வேண்டும்; இல்லையேல் அவர் கள் ஒழித்துக்கட்டப்படுவார்கள்'' 'என்று 1930 இல் பேசினான் அமெரிக்க செனட்டர் பேண்டல்டன். ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்த ஐரிஷ் இன மக்களை (அவர்களும் கிறித்துவர்களாக இருந்தபோதும்) 'கடவு ளுக்கு பலியிடுவதில் தவறில்லை' எனக்கூ றிய கத்தோலிக்கப் பாதிரிகள், அமெரிக்கப் பழங்குடிகளைக் கொலை செய்ய தேவ னின் அங்கீகாரத்தை வழங்கியதில் வியப் பில்லை.

கொலம்பஸின் ஆக்கிரமிப்பை மிகக்க டுமையாக எதிர்த்துப் போராடியவர்கள் கரீ பிய மக்கள். 'கரீப்' என்றால் அவர்களது மொழியில் 'வீரம் செறிந்த' என்று பொருள் அவர்களை நரவேட்டையாடவும் அடிமை யாக்கவும் கொலம்பஸ் கற்பித்த நியாயம் நயவஞ்சகமானது. கரீப் - கனீப் - கானிபல் என்று அந்தச் சொல்லின் மூலத்திற்கு விளக் கம் தந்தான் கொலம்பஸ். கனிபல் என்றால் நரமாமிசம் தின்னும் காட்டுமிராண்டிகள் என்று பொருள். உண்மையில் அவர்களி டம் அத்தகைய பண்பாடு இல்லாதபோதும் கொலம்பஸின் இந்த ஆய்வு மட்டுமே அவர்களை கொல்லப் போதுமானதாக இருந்தது.

தொகுத்துக் கூறினால் வெள்ளை நாக ரீகத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள், எதிர்ப் பவர்கள் காட்டுமிராண்டிகள். காட்டுமி ராண்டிகள் என்றால் அவர்கள் மனிதர்களே அல்ல; எனவே அவர்களைக் கொல்வதில் தவறில்லை. ஏனென்றால் அவர்கள் தடைக் கற்கள். ஆம்! வெறும் தடைக்கற்கள் மட் டுமே.

இதே கருத்தை அமெரிக்க குழந்தைக ளுக்கு வெகு எளிமையாக, பூடகமாக சொல்லித்தருகிறது அவர்களது பாடநூல்:

படிப்பகம்

www.padippakam.com

''அமெரிக்காவை கண்டுபிடித்த கொலம்பஸ் ஸ்பெயினுக்குத் திரும்பி வரும்போது தன்னுடன் சில மீன்கள், பறவைகள் மற்றும் விநோதமான செம்புநிறமுள்ள பழங்குடிகளையும் கொண்டு வந்தார்''.

### அமெரிக்க ஆதிக்கத்தின் சின்னம் கொலம்பஸ்!

வரலாற்று ஆதாரங்களை எடுத்து வைத்து கொலம்பஸும், வெள்ளை ஆக்கிரமிப்பாளர்களும் பழங்குடிகளுக்கு இழைத்த அநீதிகளுக்கு விளக்கம் கேட்டால் இன்றைய அமெரிக்க, ஐரோப்பிய அறிஞர்கள் சொல்கிறார்கள்: ''கொடுமைதான். ஆனால் இது தவிர்க்க முடியாதது''. ஈராக்கிய மக்கள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு மழை பொழிந்தபோதும் இவர்கள் அளித்த விளக்கம் இதுதான்,

ஏன் தவிர்க்க முடியாது? ஏனென்றால் அமெரிக்கா சொல்வதுதான் ஜனநாயகம்; வெள்ளையர்கள் கூறுவதுதான் பண்பாடு; ஐரோப்பியர்கள் கூறுவதுதான் அரசியல் நியாயம். இவற்றை மறுப்பவர்களோ, எதிர்ப்பவர்களோ, தடுப்பவர்களோ கொடுமைக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது.

ஏனென்றால் ''தங்கம்தான் செல்வம். அதை வைத்திருப்பவன்தான் உலகத்தில் தான் நினைத்ததைச் சாதிக்கிறான்; ஆன்மாக்களை சொர்க்கத்துக்குக்கூட அனுப்புகிறான்... புனித ஜானுக்கு இறைவன் கூறிய புதிய உலகம், புதிய சொர்க்கம் ஆகியவற்றுக்கு என்னையே தூதனாக்கியிருக்கிறார். அதைக் கண்டுபிடிக்கவும் அவரே எனக்கு வழிகாட்டினார்'' — கொலம்பஸ்

'புதிய உலக ஒழுங்கை' புஷ் இறைவனின் பெயரால் அறிவிக்கவில்லையே தவிர அவர் கொலம்பஸ் பேசியதையே தான் பேசுகிறார். 500 ஆண்டுகளுக்குப் பின்னும் அந்த ஆணவமும், திமிரும், பொருள் வெறியும் எள்ளளவும் குறையவில்லையே!

கரீபியர்கள், அரவாக்குகள், செவ்விந்தியர்கள், பௌஹாட்டன்கள் ஆகியோர் அமெரிக்கா கண்டத்தை - தங்கள் மண்ணை - இழந்திருக்கலாம். ஆனால் தங்கள் வரலாற்றை இழக்க அவர்கள் சம்மதிக்கவில்லை. ஏனெனில் வரலாற்றை இழந்தவனுக்கு வருங்காலமுமில்லை. கொலம்பஸ் விழாவுக்கு எதிரான சிறு பொறியாக தங்கள் போராட்டத்தை அவர்கள் துவங்கியிருக்கிறார்கள். பாம்புப் பிடாரர்களின் நாட்டைச் சேர்ந்த நாமும் அவர்களுடன் இணைந்து கொள்வோம். சீக்கிரம்! லாஸ் ஏஞ்செல்ஸ் மட்டும்தான் எரிந்திருக்கிறது; அமெரிக்கா மிகப் பெரிய வல்லரசு; கொலம்பஸ் மிகப் பெரிய எதிரி.

☆ சூரியன்

இக்கட்டுரை எழுத உதவிய நூல்கள்:

1. என்சைக்ளோபேடியா பிரித்தானிகா
2. என்சைக்ளோபேடியா அமெரிக்கானா
3. கிராலியர்ஸ் என்சைக்ளோபேடியா
4. 'ரேஸ் அண்டு கிளாஸ்' - அமெரிக்க இதழ்



# மஞ்சூரில் மர்மத் தீ முத்து காமாட்சிக்கு ஆரத்தி!

இராமநாதபுர மாவட்டம் பரமக்குடி அருகிலுள்ள மஞ்சூர் கிராமத்தில் சென்ற மாதம் 26.3.92 வியாழன் முதல் திடீர் திடீரென குடிசைகள் தீப்பிடித்து எரிந்து குடிசைகள் சாம்பலானதாகவும் சாமியார் ஒருவர் விட்ட சாபத்தினால்தான் தீ தொடர்ந்து எரிந்தது என்றும், தாசில்தார், கலெக்டர் முன்னாலேயே தீயனைக்கும் படையினர் தீயை அணைக்கும் போதே வேறொரு குடிசை தீப்பற்றி எரிந்ததாகவும், தீயனைக்கும் படையினர் தீயை அனைக்க முடியாதபோது கலெக்டரே விழிபிதுங்கி விரக்தியடைந்தபோது அருள்மிகு முத்துக் காமாட்சி சாமிகள் வந்து நின்று மந்திரித்து குங்குமம், விபூதி, வேல் எல்லாம் வரவழைத்துக் கொடுத்த பின்னர்தான் தீ அனைந்ததாகவும் ஒரு செய்தி.

பத்திரிகைகள் பாராட்டின; கலெக்டர் மெய்சிலிர்த்தார்; மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். முத்துக் காமாட்சியைப்பற்றி நமக்கு நன்கு தெரியுமாதலால் சிரிப்புதான் வந்தது. சந்தேகமும் ஏற்பட்டது.

சிவகங்கையில் 28.12.90-ல் மக்கள் கலை இலக்கியக் கழகம் சார்பில் ''மந்திரமா தந்திரமா'' நிகழ்ச்சி நடத்தி சாமியை சந்தி சிரிக்க வைத்தோம். மானம் இழந்த சாமிக்கு மரியாதை தேவைப்பட்டதால் ஏழை எளிய மக்கள் சாமியை வாழ்த்தி வணங்குவதாக தானே போஸ்டர் அடித்து நகரெங்கும் ஒட்டிக் கொண்டார்.

மஞ்சூர் கிராமத்தில் மீண்டும் 9-ந் தேதி முதல் தீப்பிடிக்க ஆரம்பித்துவிட்டது தொடர்ந்து மூன்று நாள் எரிந்து அனைந்தது. தீயனைக்கும் படை தாசில்தார், கலெக்டர், முத்துக் காமாட்சியின் அருள் அத்தனைக்கும் 'தண்ணி' காட்டிவிட்டு தீ எரிகின்றதென்றால் மக்கள் பீதியடைவது நியாயம் தானே! இதுவரை தீ எப்படி பிடிக்கிறது என்று யாரும் கண்டு பிடிக்கமுடியவில்லை.

கூரையிலும் கடலைச் செடியிலும், வைக்கோலிலும் தீ பிடிப்பது ஆச்சரியமோ அதிசயமோ அல்ல; கருங்கல்லிலும் சிமென்ட் தரையிலும் மண்ணிலும் தீப்பிடித்து எரிந்தால்தான் அதிசயம்! பாஸ்பரத்தை ஈரச்சாணத்தில் வைத்து கூரையில் எறிந்தால் சாணம் காய்ந்தவுடன் தீ தானாய் பற்றும். சாமியார்களும் பண்ணைகளும் தமக்கு எதிரானவர்களை அடக்க நீண்ட காலமாகச் செய்துவரும் சித்து வேலை இது.

இந்த மர்மத் தீ விசயத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, மஞ்சூர் கிராமத்திற்கு 23.4.92-ல் சென்றேன். மதுரையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் வழியில் பொட்டி தட்டி மடம் என்ற ஊருக்கருகில் மஞ்சூர் விலக்கு. அதிலிருந்து நேராக தெற்கே ஒரு கிலோ மீட்டரில்தான் அவ்வூர் உள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்பில் நுழைந்ததும் எரிந்துபோய் குட்டிச் சுவராய் நிற்கக் கூடிய மண் வீடுகளை பார்க்க முடிந்தது. ''அமைதி காத்த வள்ளலே முத்துக் காமாட்சி சாமியே வாழ்க'' என்ற போஸ்டரில் முத்துக் காமாட்சி சிரித்த வண்ணம் குட்டிச் சுவர்களில் ஒட்டிக்கொண்டிருந்தார்.

சீமைக் கருவேல விறகு வெட்டிக் கொண்டிருந்தவர்களிடம் விசாரித்தேன். 26.3.92 வியாழக் கிழமை மீனாள், கருப்பாயி இவர்கள் இரண்டு வீட்டிலும் தீப் பிடித்ததாகவும் தீயணைக்கும் படைக்கு போன் செய்து அவர்கள் வந்து தீயை அணைத்ததாகவும், அணைத்துவிட்டு அவர்கள் சென்ற பின் மறுநாள் குப்பமுத்து, முருகேசன் வீடுகள் திடீரென்று எரிந்ததாகவும் மக்களே தண்ணீர் ஊற்றி தீயை அணைத்ததாகவும் கூறினர். அதன்பின் வந்த தீயணைக்கும் படையினர் அரசாங்கம் புது வீடு கட்டித் தருவதற்காக நீங்களே தீ வைத்துக்கொள்கிறீகளா? என்று திமிராக கேட்டிருக்கின்றார்.

பின்பு தீயணைக்கும் படை இருக்கும் போதே தீ பிடித்து எரிந்திருக்கிறது. தொடர்ந்து தீ மர்மமான முறையில் எரிந்ததால் முத்துக் காமாட்சி வரவழைக்கப்பட்டும் அவர் குங்குமம், திருநீர் வரவழைத்துக் கொடுத்தும் இனி தீ பிடிக்காது என்று சொல்லிவிட்டு சென்றிருக்கிறார். ஒரு வாரம் கழித்து மீண்டும் தீ பிடித்திருக்கிறது. மீண்டும் பயம், பரபரப்பு. முத்துக் காமாட்சிக்கு விசயம் போயிருக்கிறது. யாரோ பெரிய சாமியாரின் சாபம். என்னால் முடியாது. ஆனால் சூலாயுதத்தை மந்திரித்து தருகிறேன் வைத்துப் பாருங்கள் என்று ஒரு சூலாயுதத்தை கொடுத்திருக்கிறார். யாரையாவது சந்தேகப்படுகிறீர்களா என்று கேட்டபோது அப்படி யாரையும் நாங்கள் சந்தேகப்படவில்லை என்றனர். வேறு யாரும் மன நோய் பிடித்தவர்கள் இருக்கிறார்களா? என்றதற்கு, அப்படி யாரும் இல்லை என்றனர். யாரேனும் தீப்பிடித்த வீட்டுக்காரரை கேட்டு விசாரிக்க வேண்டும் என்று ஊருக்குள் நுழைந்தேன். தீ பிடித்த ஒரு வீட்டிற்கு முன் சிகப்பி 55 என்ற வயதான தாயாரைக் கண்டு விசாரித்தேன்.

படிப்பகம்

www.padippakam.com

வியாழக் கிழமை ஒரு சாமியார் வந்ததாகவும் வீட்டிற்குள்ளேயே அடாவடியாய் வந்து நெல், அரிசி கேட்டதாகவும் பயந்து அவர் கேட்டதையெல்லாம் கொடுத்ததாகவும் அப்படியே எல்லோர் வீட்டிலேயும் பிச்சை கேட்டதாகவும் ஆனால் யாரும் அவரை திட்டவும் இல்லை வையவும் இல்லை என்றார். அவர் வந்துபோன அன்றே மாலை 5.30 மணிக்கு திடீரென்று தீப்பிடித்ததாகச் சொன்னார். அவருடைய ஏவலாக இருக்கும் என்றார். வேறு யாரும் படிச்சவங்க உங்கள் வீட்டில் இல்லையா? என்றவுடன் அவரது அக்கா மகன் சாத்தையாவை அழைத்து வந்தார்கள். அவரிடம் விபரத்தை கேட்டேன். அவரும் ஏதோ சாமியார்கள் செய்த சதி வேலைதான் என்றார்.

சாதிப் பிரச்சினைகள் ஏதும் உண்டா? என்று கேட்டபோது; பொதுவாக இங்கு எல்லா சாதிக்காரர்களும் சகோதரர்களாக பழகுகிறோம் அவர்களை எங்களால் சந்தேகிக்க முடியாது என்றார். மூன்றாவது முறையாய் ஒரு சாமியார் வந்துதான் நெருப்பை அணைச்சாரு அதிலிருந்து தீ பிடிக்கவே இல்லை என்றார். அந்த சாமியாரை பிடித்து வைத்து விசாரித்தால் உண்மை தெரியுமல்லவா? என்றேன். அன்று வேலைக்கு சென்றுவிட்டதால் பார்க்க முடியவில்லை என்றார்

அவர் மகள் சாந்தகுமாரி குறுக்கிட்டு நான் சாமியாரை பார்த்தேன். ஒட்டுத்தாடி வச்சிருந்தாரு. இடுப்பில பெரிய இடைவாரு கட்டியிருந்தாரு. நல்ல கணமா ஜம்னு இருந்தாரு. வந்தவுடனே முதல் நாள் எரிஞ்ச வைக்கோள் படப்பிற்கு போயி நின்று ஏதோ மந்திரம் சொன்னாரு. அப்புறம் ஊர் பக்கமாய் கையை காட்டி ''எரியாமல் நின்னுக்கோ'' என்றார். அதற்கு முன்னால் ஊது பத்தி வாங்கிவரச் சொல்லி அவரே காசு கொடுத்தாரு. எரிந்த சாம்பளை, தோள் பையில் அள்ளி போட்டுக் கொண்டார். ''இனிமேல் தீ எரியாது. இது ஈஸ்வரன் செய்த வேலை'' என்றார். தன் கையை காண்பித்து ''இதில் என்ன இருக்கிறது பாருங்கள்'' என்றார். முழங்கையில் வெள்ளை கோடுகள் இருந்தன. ''இதுதான் சிவம். ஊரில் அதர்மம் பெருகிப் போச்சு, அதை அழிக்கத்தான் ஈஸ்வரன் வந்தான். ரெண்டு வழியிலேதான் மக்களை அடக்க முடியும். ஒன்னு அம்மை மற்றொன்று நெருப்பு, அம்மையை ஏவியிருந்தால் நோய் நிறைய பரவி அழிவேற்படும் தீயால் அவ்வளவு அழிவில்லை. அதனால்தான் தீயை ஏவினேன். இனிமேல் திருந்திக் கொள்ளுங்கள் ஈசுவரனுக்கு பொங்கல் வைத்து பலி கொடுத்து விழா எடுங்கள்'' என்றார். சாந்தகுமாரி சின்னப் பெண்ணாய் இருந்தாலும் நிறைய விசயங்களைச் சொன்னாள்.

டீ குடித்துக் கொண்டிருக்கும் போது குப்பமுத்துவும் இராமமூர்த்தி என்பவரும் அங்கு வந்தனர். இராமமூர்த்தி சென்னையில் இருக்கிறாராம்; சமீபத்தில் ஊர் வந்தாராம்; அவரிடம் விவரம் கேட்கும் போது, ''இங்கே ஒருத்தருக்கு திடீரென்று சாமி வந்தது. அவர்தான் ஏவல் வைத்த சாமியார் இருக்குமிடத்தைச் சொன்னார். அவர் சொன்னபடி இராமநாதபுரம் அருகிலிருக்கும் குளத்தூர் சென்று பார்த்தோம். ஆனால் அந்த மர்மச்சாமி அங்கு இல்லை அதற்கு முன் மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்திருக்கிறார். அவருடைய சொந்த ஊர் அதுவல்லவாம் எங்களுக்கு குழப்பம் ஏற்பட்டபோது, எங்கு போய் தேடுவது? உடனே, சாமியாடியை இங்கு அழைத்து வந்தவர் ''நாம் ஊருக்குப் போவோம், நாளை மாலை சாமியார் நம் ஊருக்கு வருவார்'' என்று மீண்டும் ஊருக்கே அழைத்து வந்தார். அவர் சொன்னபடியே அந்த மர்மச் சாமி சனிக்கிழமை மாலை எங்கள் ஊர் வந்தார்'' என்றார்.

மேலும் 'அவர் கூறும்போது உள்ளூரில் உள்ள ஈசுவரன் கோயிலுக்கு இன்னும் ஒரு வாரத்திற்குள் பொங்கல் வைத்து விழா எடுக்கவில்லையென்றால் எல்லா வீடுகளும் தீப்பற்றி எரியும் என்று எச்சரிக்கை விட்டுச் சென்றிருக்கிறார்.



**நமது விசாரணையில் எழும் சந்தேகங்கள் !**

**சாமியின் சாபம் என்றால்...**

1. சாமியாரை யாரோ அவமதித்ததாக வைத்துக் கொள்வோம். அவரை அவமதித்தவர் வீடுதானே எரிய வேண்டும். அப்பாவி மக்களின் 29 வீடுகள் ஏன் எரிய வேண்டும்?

2. ஏவலாய் இருந்தால் இரவு பகல் பாக்காமல் எந்நேரமும் எரிய வேண்டும். பகலில் மட்டும் எரியக்காரணம் என்ன?

3. நாம் ஏவலை நம்பவில்லை மற்றவர்கள் நம்பட்டும், பரவாயில்லை, தண்ணீர் ஊற்றினாலும் அனையக்கூடாதல்லவா? தண்ணீரை ஊற்றியதும் தீ அனையக் காரணம் என்ன?

4. வீடுகளில் தீப்பிடிக்கும்போது வீட்டிற்கு பின்புறம் மட்டும் தீப்பிடிக்கக் காரணம் என்ன?

சரி 'தெய்வக் குறை' காரணமென்றாலும்!...

1. பல சாதியினர் வாழும் ஊரில் பள்ளர் சமூகத்தினரின் வீடுகள் மட்டும் தீப்பிப்பது ஏன்? ஈஸ்வரனுக்கு பள்ளர் சமூகத்தின் மீது மட்டும் கோபமா? அதிலும் ஓட்டு வீட்டு பள்ளர்களை விட்டுவிட்டு, ஓலை வீட்டு பள்ளர்கள் மீது கடவுள் கடும் கோபம் கொள்வதேன்?

2. பள்ளர் சமூகத்திலும் பல சாமியாடிகள் இருக்கின்றனர். அப்படியிருக்க இதுவரை சாமியே ஆடாத நாகரெத்தினம் சேர்வை உடம்பில் ஈஸ்வரன் புகுந்து சாமியாடக் காரணம் என்ன?

3. நாகரெத்தினம் சேர்வைக்கு அருள் வந்து இறங்கி மர்மச்சாமி இருக்குமிடத்தை கண்டுபிடித்துச் சொன்னார். மர்மச்சாமி குளத்தூரில் இல்லாதது அறிந்து சாமியே ஆடாமல் சாதாரணமான நிலையில், ''நாளை மாலை அந்த சாமியார் நம்ம ஊர் வருவார்'' என்று சொன்னது போல் சாமியார் வந்தாரென்றால்; அப்படி ஞானக் கண்ணால் பார்க்கும் நாகரெத்தினம் சேர்வை அன்றைய தினம் குளத்தூரில் இல்லாத சாமி வேறு எங்கு இருக்கிறார் என்று கண்டு பிடித்திருக்கலாம் அல்லவா?

4. பழைய உப்பு வியாபாரியான அந்த சாமியார், மாறுவேடத்தில் வரக் காரணம் என்ன? எரிந்த சாம்பளை எடுத்துக் கொண்டு இராமேஸ்வரம் செல்லக் காரணம் என்ன? நாகரெத்தினம் சேர்வையின் மகனை திட்டக்குடியில் பார்க்கவா? சாம்பளைக் கடலில் கரைக்கவா?

மஞ்சூரில் இப்போது அமைதி நிலவுகிறது என்றாலும் நாசக்காரர்கள் செய்த சதியால் சித்திரை வெயிலிலும் வீடிழந்து மக்கள் கட்டாந்தரையில் வெம்புகின்றனர் அரசு கொடுத்த 500 ரூபாயை வைத்து புது வீடு கட்டமுடியுமா?


பசும்பொன் மாவட்ட கலெக்டரும், இராமநாதபுரம் கலெக்டரும் முத்துக் காமாட்சி காலிலும், இந்த நாட்டின் முதல் குடிமகன் வெங்கட்ராமன் மோடி மஸ்தான் சாய்பாபா காலிலும் விழுந்து கிடக்கும் போது, இவர்களால் நடத்தப்படுகின்ற அரசு மக்களின் அறியாமையைப் போக்குமா?

-வேம்பன்-

ம.க.இ.க.-மதுரை.

படிப்பகம்

www.padippakam.com



# சிந்தனையில் இருக்கிறது கூண்டு!

ஜெயலலிதாவிற்கும் ஜனநாயகத்திற்கும் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்பது பச்சை குத்திகள் உள்ளிட்ட அனைவரும் அறிந்த உண்மை. வெளியில் சொல்வதற்குத்தான் பலர் தயாராக இல்லை. மாலைமுரசு, முரசொலி நிருபர்கள், பத்திரிகையாளர் கே.பி.சுனில் ஆகியோர் மீதான நடவடிக்கையும், நக்கீரன் மீதான அ.தி.மு.க குண்டர்களின் தாக்குதலும் தவிர்க்க இயலாமல் பலரை வாய்திறக்க வைத்துவிட்டன.

'கருத்துரிமைப் பாதுகாப்பு இயக்கம்' என்ற பெயரில் சென்னையின் பிரபல பத்திரிகையாளர்கள் ஏப்ரல் 23-ம் தேதி நடத்திய கூட்டம் இந்த வகையைச் சேர்ந்தது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையாளர் டி.என். கோபாலன், இந்தியா டுடே தமிழ்ப் பதிப்பின் ஆசிரியர் மாலன், பிரண்ட்லைன் ஆசிரியர் (இந்து) என் ராம், ஜூனியர் போஸ்ட் இதழைச் சேர்ந்த ஞாநி, சுபமங்களா ஆசிரியர் கோமல் சாமிநாதன், பத்திரிகையாளர் பன்னீர்செல்வம் ஆகியோருடன் துக்ளக் சோவும் கலந்து கொண்ட இந்தக்கூட்டம் கருத்துரிமை, பத்திரிகைச் சுதந்திரம் போன்ற சொற்றொடர்களின் பூடகத்தைப் பிளந்து காட்டவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிவில் உரிமை, கருத்துரிமை பாதுகாப்பு இயக்கங்களில் முன்னணியில் இருந்து செயல்படும் பிற மாநில பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்களை ஒப்பிடும்போது தமிழகம் அவமானகரமான அளவிற்கு பின்தங்கியிருக்கிறது. பத்திரிகையாளர்களுக்கு எதிராக எம்.ஜி.ஆர் கறுப்புச் சட்டமொன்றைக் கொண்டு வந்தபோதும் அடையாள எதிர்ப்புக்கு மேல் இங்கே வேறெதுவும் நடக்கவில்லை. எம்.ஜி. ஆரை அடியொற்றி பீகாரில் எல்.என். மிஸ்ரா கொண்டு வந்த சட்டத்திற்கு அம்மாநிலத்தின் பத்திரிகையாளர்கள் காட்டிய கடும் எதிர்ப்பு எல்.என்.மிஸ்ராவையும், அவரைத் தொடர்ந்து எம்.ஜி.ஆரையும் பின்வாங்க வைத்ததேயொழிய தமிழகப் பத்திரிகையாளர்கள் உரிமை அது இதுவென்று அநாவசியமாக எம்ஜியாரைப் பகைத்துக் கொள்ளவில்லை.

அப்பேர்ப்பட்ட 'அமைதிப் பூங்கா' வான தமிழகத்தில் இப்படியொரு கூட்டம் நடந்தது நிலைமையின் தீவிரத்தைத்தான் உணர்த்துகிறது. கூட்டத்தில் பேசிய பத்திரிகையாளர்கள் தனிப்பட்ட முறையில்தான் கலந்து கொண்டனரேயன்றி தத்தம் பத்திரிகையின் சார்பாக அல்ல; எனவே விளம்பரம், தொழில் நெளிவு சுளிவுகள், பார்ப்பன சாதிய ஆதரவு போன்ற பல காரணங்களால் 'ஜெ' ஆட்சிக்குத் தம்பூரா வாசிக்கும் தத்தம் பத்திரிகை முதலாளிகளின் சுருதியிலிருந்து விலகி தங்கள் 'கோபத்தை' உரத்த குரலில் முழங்குவதற்கு இவர்களுக்குத் தடையேதும் இருக்கவில்லை என்பதையும் குறிப்பிடவேண்டும்.

கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசிய டி.என்.கோபாலன் "இலங்கைப் பிரச்சினையைப் பற்றிப் பேசுபவர்களையெல்லாம் தடாவில் வைப்பேன் என்று ஜெயலலிதா கூறினார்; அதன் உச்சகட்டமாகத்தான் இன்று பத்திரிகையாளர்கள் மீதும் அடக்குமுறை ஏவப்பட்டிருக்கிறது" என்றார். அடுத்துப் பேசிய சோ உடனே அதை வன்மையாக மறுத்ததுடன் தடா துஷ்பிரயோகம் செய்யப்படவில்லையென்றும், புலிகளை ஒடுக்கிய விஷயத்தில் தமிழகமே ஜெயலலிதாவுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்றும் உருகினார்.

பழைய விவகாரங்களைக் கிளற முடியாதென்றும், இலங்கைப் பிரச்சினையில் எவ்வளவோ விசயங்கள் நடந்துவிட்டன என்றும், ராஜீவ் பற்றிய நமது மதிப்பீட்டில் பல கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும் ராஜீவின் கொலையைக் கண்டிக்காமல் இருக்கமுடியாது என்றும், புலிகள்தான் இதைச் செய்தார்கள் என்று அநேகமாக நிருபணமாகிவிட்டது என்றும் மிகச் சாதுர்யமாக பிரச்சினையைத் திசை திருப்பினார் ராம். "இங்கே புலிகளை யாரும் ஆதரிக்கவில்லை என்று தற்காப்பு நிலைக்கு ஒதுங்கினார் கோபாலன். வேறு யாரும் இந்தப் பிரச்சினைக்குள் தலை நுழைக்கவே இல்லை.

இதிலிருந்து பெறப்படுவது என்ன? ராஜீவைக் கொன்றது புலிகள்தான். எனவே, புலிகளுக்கும் புலிகளின் அரசியல் ரீதியான ஆதரவாளர்களுக்கும் எதிராகத் தடாவைப் பயன்படுத்தலாம்; தமிழகத்தில் தடா துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை.

ராஜீவ் கொலை குறித்த அரசியல் அணுகுமுறை ஒருபுறமிருக்கட்டும்; சட்டம் மற்றும் மரபுகளின் அடிப்படையில் பார்த்தாலும் ராஜீவைக் கொன்றது புலிகள்தான் என்று நீதி மன்றம் முடிவு செய்வதற்குமுன் ராம் பேசுகிறாரே எப்படி? சி.பி.ஐ. கொடுக்கும் குற்றவாளிகள் பட்டியல் நீதி மன்றத்தால் முடிவு செய்யப்படும் வரை சந்தேகத்துக்கு உரியதுதான் என்று தமிழக அரசு (காவல் துறை) சார்பாக வாதாடும் வழக்கறிஞர், வர்மா கமிசனில் பேசுகிறார்; அதே நேரத்தில் புலிகள்தான் கொன்றார்கள் என்று 'மரபு'களை மீறி ஜெயலலிதா, வாழப்பாடி கும்பல் பேசுவதைப் போலவே ராமும் பேசுகிறாரே எப்படி?

தடா என்ற கறுப்புச் சட்டம் அரசியல் இயக்கங்களை மட்டுமின்றி 'பயங்கரவாதி களைப் பேட்டி கண்டதற்காக பல பத்திரிகையாளர்களைப் பதம் பார்த்திருக்கிறதே அதைப் பற்றி கூட்டத்தில் பேசிய யாருமே வாய்திறக்காதது ஏன்? இலங்கை சென்று வந்து புலிகள் பற்றி கட்டுரை எழுதியதற்காக தினமணி கார்மேகத்தையும், பன்னீர் செல்வத்தையும் கூட 'தேவைப்பட்டால்' ஜெ அரசு கைது செய்ய தடாவில் இடமிருக்

படிப்பகம்

www.padippakam.com

கிறதே! தமிழகத்தில் புலிகளுடன் தொடர்பற்ற பலர் தடாவில் சிறைவைக்கப் பட்டுள்ளனரே! இதை மறுத்துப் பேசவோ, உண்மை நிலையை விளக்கவோ யாருமே முயலாததற்குக் காரணம் என்ன? ஒற்றுமை? ராம் அவர்களின் மொழியில் கூறினால் பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட பரந்த ஒற்றுமை!

''பத்திரிகைச் சுதந்திரம் என்று சொல்லும்போது நாம் மஞ்சள் பத்திரிகைகளின் சுதந்திரத்தை ஆதரிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்திவிடவேண்டும்'' என்றார் சோ. ''நக்கீரன் பாணியிலான இதழியத்தை நான் ஆதரிக்கவில்லை என்றாலும் அதன் மீதான தாக்குதலைக் கண்டிக்கிறேன்'' என்றார் ராம். ''ஆங்கிலத்தில் எழுதினால் நாகரீகமாகத் தெரிவது தமிழில் எழுதும்போது சில நேரங்களில் அதிர்ச்சியளிக்கிறது; எப்படி இருந்தாலும் எழுதப்படும் கட்டுரைகள் மஞ்சள்தனமாக இருப்பதை நாம் ஆதரிக்கவில்லை; சினிமா கிசு கிசுக்கள் அரசியலுக்கும் வந்ததற்குக் காரணம் சினிமாக்காரர்கள் அரசியலுக்கு வந்ததுதான்'' என்றார் ஞாநி. இறுதியில் சோவின் வேண்டுகோளுக்கு ஏற்ப 'மஞ்சள் பத்திரிகைகளை நாம் ஆதரிக்கவில்லை' என்பது தீர்மான வாசகத்திலும் சேர்க்கப்பட்டது.

மஞ்சள் பத்திரிகைகள் வாசகர்களின் அரசியலறிவு மட்டத்தைத் தரம் தாழச் செய்கின்றன என்ற வகையில் கண்டிக்கப்படவேண்டியவை. ஆனால் சோ கூறியதைப் போல 'இதுவரை இல்லாத அளவு ஜெயலலிதாவைப் பற்றி அவதூறாக எழுதப்படுகிறது' என்பதற்காக அல்ல; பத்திரிகை சுதந்திரம் பற்றிப் பேசவந்த இடத்தில் இந்த திடீர் அக்கறை 'ஜெ'யை சாந்தப்படுத்தும் முயற்சியே அன்றி வேறல்ல.

கிசுகிசு பத்திரிகைகளை தொடர்ந்து சாடிவருகின்றது ''புதிய ஜனநாயகம்'' ஆனால் அனைத்து பிரபல மையநீரோட்டப் (Mainstream) பத்திரிகைகளும் அரசியல் கிசுகிசு செய்திகளுக்காகத் தனியே பக்கம் ஒதுக்குகின்றன என்பதே உண்மை. பிரபல கட்டுரையாளர்கள் இத்தகைய தினசரிகளில் எழுதும் கட்டுரைகளில் (Columns) சரிபாதி கிசுகிசு செய்திகளால்தான் நிரம்பி வழிகின்றன. கழுகு, ஆந்தை தோஸ்த், டில்லிராஜா, டெல்லிச் செய்திகள், துக்ளக் சீனிவாசனின் அரசியல் 'ஆய்வுகள்' எல்லாம் நூறு சதவீதம் இந்த வகையைச் சேர்ந்தவைதான்.

ஜன்ரஞ்சகமாக அரசியல் கிசுகிசு'க்களை எழுதி வாசகர்களைத் தரம் தாழ்த்தியதில் முதல் குற்றவாளி மைய நீரோட்ட பத்திரிகையான ஜூனியர் விகடன்; கலப்படமற்ற பார்ப்பன மஞ்சள் ஏடு தினமலர். மற்ற இதழ்கள் அதன் வாரிசுகள் மட்டுமே.

கோயபல்சை விஞ்சும் அளவு பொய்ப் பிரச்சாரத்தின் மூலம் - அதாவது மஞ்சள் அரசியல் மூலம் - ஆட்சியைப் பிடித்த ஜெயலலிதாவிற்கு இதைப்பற்றிப் பேச எவ்வித அருகதையும் கிடையாது. கழிசடை அரசியலின் நாயகி மஞ்சள் இதழியம் பற்றிக் கவலைப்படுவதும் உடனே பத்திரிகையாளர்கள் வரிந்து கட்டிக் கொண்டு அதைக் கண்டிப்பதும் நல்ல வேடிக்கை!

கே.பி.சுனில் மீதான உரிமைப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசிய ராம், சுனிலுக்குத் தெரியாமலேயே ஜெயலலிதாவிடம் சமரசம் பேசச் சென்ற சில பத்திரிகையாளர்களைப் பெயர் குறிப்பிடாமல் சாடினார். பெயர் குறிப்பிடாமலிருப்பது ஒற்றுமையைப் பாதுகாக்கும் முயற்சி போலும்! போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் கருங்காலிகளைவிட இழிவான இந்தத் தரகர்களை கறுப்புப் பட்டியலிட்டு அம்பலமாக்கித் தாக்குவதொன்றுதான் பத்திரிகையாளர்களின் உரிமையைப் பாதுகாக்க உதவும். ஐந்தாம் படையினரை அரவணைத்துச் செல்லும் போராட்டத்தின் முடிவு அவலம்தான்.

தமிழக பத்திரிகையாளர்களிடையே உள்ள ஒற்றுமையின்மை குறித்து ராம் பெரிதும் கவலைப்பட்டார். பத்திரிகையாளர்கள் 'நடுநிலை' தவறுவதால்தான் இந்த நிலை ஏற்படுவதாக விளக்கம் தந்தார் சோ. ''எந்தக் கருத்தாக இருந்தாலும் அதை வெளியிடுவதற்கு சுதந்திரம் வேண்டும்'' என்ற அடிப்படையில்தான் பல அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கிடையேயும் தாங்கள் ஒன்றிணைந்திருப்பதாகக் கூறினார் ராம்.

பல்வேறு பொய்கள், கிசுகிசு செய்திகள், வதந்திகள் மூலம் வேண்டுமென்றே தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும் ஜெயலலிதாவை 'அரசியல் தலைவராக' உருவாக்குவதற்கும் வரிந்து கட்டிக் கொண்டு செயல்பட்ட தினமணி, இந்து, எக்ஸ்பிரஸ், ஜூ.வி, துக்ளக், தினமலர் வகையறாக்கள் இப்போது நடுநிலை பற்றிப் பேசுவது நல்ல நகைச்சுவை!

கூட்டத்தில் ஜெ அரசைச் சாடியவர்கள் எல்லோரும் ''துதிபாடும் கலாச்சாரம்'' பரவிவிட்டதாகவும், பத்திரிகை உலகமும் தனது எம்.எல்.ஏ-க்களைப் போல காலில் விழவேண்டுமென ஜெயலலிதா விரும்புவதாகவும் குறிப்பிட்டனர். 'ஜெ அரசின் தத்துவத் தந்தையான 'சோ' கூட இதைக் கண்டித்து கைதட்டலும் வாங்கிவிட்டார்.

பிரச்சினையின் மையத்திற்குச் செல்வதை திட்டமிட்டுத் தவிர்க்கவும், திசை திருப்பவுமான முயற்சி இது. தமிழகமும் இந்தியாவும் இதுவரை கண்டிராத அளவு இழிந்த நபர்களும், பிழைப்புவாதிகளும், அரசியல் வாசனையற்ற அநாமதேயங்களும், தன்மானமற்ற பொறுக்கித் தின்னும் கூட்டமும் ஒரு கட்சியாக உருவாகியுள்ளது. ஜனநாயக உணர்வின் வாசனையைக் கூட உணராத இந்தக் கும்பல் பார்ப்பன மேட்டுக்குடித் திமிரின் வடிவமான 'ஜெ' தலைமையில் திரண்டிருக்கிறது. மக்கள் நலம், அரசியல் மரபுகள், மக்கள் உரிமைகள் குறித்து எவ்வித சிந்தனையுமற்ற குறைந்தபட்சம் வாயளவில் இவை பற்றிப் பேசுவதற்குக் கூடத் தெரியாத பாசிசக் கும்பல் இது.

இந்த உண்மையை மறைத்து 'துதிபாடிகள்' 'சர்வாதிகார அரசு' என்றெல்லாம் பொதுவாகப் பேசுவதற்கும் 'எல்லா அரசும் இப்படித்தான் இருக்கிறது என்று சோ பேசுவதற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

ஒருவேளை கே.பி.சுனில் மீது நடவடிக்கை எடுக்கப்படாமலிருந்திருந்தால் நக்கீரன், மாலைமுரசு, முரசொலி மீதான தாக்குதலை தி.மு.க - அ.தி.மு.க மோதலாக சித்தரித்துவிட்டு 'நடுநிலை' பத்திரிகையாளர்கள் மவுனம் சாதித்திருப்பார்கள் என்பதுதான் கசப்பான உண்மை.

கூட்டம் முழுவதும் கே.பி.சுனில் விஷயமே அதிகமாகப் பேசப்பட்டதனால் இதைத் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம் என்றும், கருத்துரிமை மீதான தாக்குதல் அனைத்தையும் இக்கூட்டம் கண்டிப்பதாகவும் இந்தியா டுடே ஆசிரியர் மாலன் இடையில் நம்பிக்கையூட்டினார். ஆனால் கடந்த செப்டம்பர் முதல் தமிழகம் முழுவதும் நடக்கின்ற அடக்குமுறைகள் பற்றித் தவறிக்கூட யாரும் பேசவில்லை. பேசியிருந்தால் 'சோ' போன்ற நடுநிலையாளர்களையும், அரசையும் 'அநாவசியமாக' பகைத்துக் கொள்ள வேண்டியிருக்குமே!

பொதுவான ஜனநாயக உரிமைகளை விட்டுத்தள்ளுங்கள்! கடந்த செப்டம்பர் முதல் ''புதிய ஜனநாயகம்'' இதழ் மீதும் அதன் அச்சகத்தார் மற்றும் முகவர்கள் மீதும் நான்கு ராஜத்துரோக வழக்குகள் போடப்பட்டுள்ளன. முகவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்; அச்சகத்தினரும் அலுவலகத்தின் கட்டிட உரிமையாளர்களும் போலீசால் தொடர்ந்து மிரட்டப்பட்டதால் அவர்களை மாற்ற நேர்ந்தது. இடையில் சி.பி.ஐ-யின் மிரட்டல் வேறு - இது குறித்து பத்திரிகைக் கவுன்சில் விசாரணை நடக்கிறது. தவறிப் போய்க்கூட இது பற்றி ஒரு வார்த்தைகூட இக்கூட்டத்தில் குறிப்பிடாததை 'மறதி' என்று கொள்ளலாமா?

ஜெயலலிதாவின் மீது சில மஞ்சள்' பத்திரிகைகள் எழுதும் அவதூறுகள் காரணமாக பத்திரிகை உலகத்தின் நற்பெயருக்கே களங்கம் நேர்ந்துவிடுவதை, பேசிய அனைவரும் குறிப்பிடத் தவறவில்லை. ஆனால் 'ஜெ' ஆட்சிக்கு வந்தது முதல் புலிகள், புலிகளின் ஆத்ரவாளர்கள், ஈழ ஆதரவாளர்கள், நக்சல்பாரிகள், தமிழின உணர்வு கொண்டோர் ஆகியோர் மீது போலீசு பரப்பிய அவதூறுகளுக்கு மசாலா சேர்த்து மஞ்சள்தனமாக எழுதாத பத்திரிகை எது? மறுப்பு அறிக்கைகளைக் குப்பையில் வீசாத பத்திரிகை எது? இதை யார் கண்டிப்பது?

ஒருவேளை சமூக உணர்வுள்ள நபர்கள் மற்றும் அமைப்புகளின் கவுரவத்தைவிட தமிழக சட்டசபையின் 'கவுரவமும்' முதல்வரின் 'மாண்பும்' மதிப்புமிக்கவை என பத்திரிகையாளர்கள் கருதலாம். உளமாற அவ்வாறு நினைக்காவிட்டாலும் சிறைக் கம்பிகளும், தடிக்கம்பும் அவ்வாறு சிந்திக்கத் தூண்டலாம். காஷ்மீர், அஸ்ஸாம் போராளிகளும், காலிஸ்தானிகளும் இந்த அனுபவத்திலிருந்துதான் பத்திரிகைகளை எப்படிக் கையாள்வது என புரிந்து கொண்டிருக்கிறார்கள் போலும்! ●



படிப்பகம்

www.padippakam.com

கடந்த ஏப்ரல் மாத மத்தியில் டெல்லியிலுள்ள ஈராக்கிய தூதரகத்தில் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் குவியத் தொடங்கின. இவை வேலைக்கான விண்ணப்பங்கள் அல்ல. வளைகுடாப் போரில் விதவையாகிவிட்ட ஈராக்கிய பெண்களை இரண்டாவது திருமணம் செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள். டெல்லியிலுள்ள ஈராக்கிய தூதரகம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகக் கூறி, விண்ணப்பப் படிவங்கள் ரூ.50 முதல் ரூ.200 வரை விற்கப்பட்டன. ஏற்கனவே திருமணமாகிவிட்ட இந்தியப் பெண்பித்தர்கள் பலர் ரூ.25,000 முதல் ரூ.2லட்சம் வரை ஈராக்கிய விதவைகள் வரதட்சணையாக கொடுக்க முன்வருவதாக விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தனர். இதிலே கொடுமை என்னவென்றால் ஈராக்கிய தூதரகம் இப்படியொரு அறிவிப்பையோ, விண்ணப்பத்தையோ வெளியிடவில்லை. ''எமது நாட்டையும் மக்களையும் அவமானப்படுத்தும் கீழ்த்தரமான செயல் இது. ஈராக்கிய அதிபர் சதாம் உசேனைப் பதவியிலிருந்து விரட்ட அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ செய்துவரும் அயோக்கியத்தனமான சதிகளில் இதுவும் ஒன்று'' என்கிறார் ஈராக்கிய தூதரக அதிகாரி. ஏகாதிபத்திவாதிகள் பீற்றிக் கொள்ளும் புஷ் மாமாவின் ஜனநாயக யோக்கியதை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா!

### ஒரே கூரையின் கீழ் அதிகபட்ச கிரிமினல்கள்: கின்னஸ் சாதனை!

எந்தக் கட்சி கிரிமினல் கட்சி என்கிற சூடேறிய விவாதம் இன்று பாரதீய ஜனதா ஆளும் உ.பி. மாநிலத்தைக் கலக்கிக் கொண்டிருக்கிறது. அரசியலை கிரிமினல் மயமாக்குவதைத் தடுக்கப்போவதாகக் கூறி டி.பி.யாதவ், பைய்யா எனும் இரு மாஃபியா குண்டர் படைத் தலைவர்களை பாரதீய ஜனதா அரசு அண்மையில் கைது செய்தது. இவர்கள் இருவரும் சமஜ்வாடி ஜனதா கட்சியினர்; முன்னாள் முதல்வர் முலாயம்சிங் யாதவின் கூட்டாளிகள். இதனால் ஆத்திரமடைந்த முலாயம்சிங் பாரதீய ஜனதா கட்சியின் 22 முக்கிய பிரமுகர்கள் கிரிமினல் பேர்வழிகள் என்று ஆதாரங்களுடன் பட்டியலை வெளியிட்டு அம்பலப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, 33 ஜனதா எம்.எல்.ஏ-க்களில் 25 பேர் கிரிமினல்கள் என்று பாரதிய ஜனதா கட்சித் தலைவர் பட்டியல் போட்டு நாறடித்தார். அதன் பிறகு எந்தெந்த பாரதீய ஜனதா மந்திரிகள் எவ்வளவு கொள்ளையடித்தார்கள், கொலை செய்துள்ளார்கள் என்று புதிய பட்டியலை முலாயம்சிங் வெளியிட்டுள்ளார். இவர்களது நாய்ச் சண்டையிலிருந்து நாட்டு மக்களுக்கு ஓர் உண்மை தெளிவாகியுள்ளது. சமஜ்வாடி ஜனதாவும் பாரதிய ஜனதாவும் கிரிமினல் கட்சிகள் என்பது மட்டுமல்ல; 76% கிரிமினல்களை உறுப்பினர்களாகக் கொண்ட உ.பி. சட்டமன்றம் உலகிலேயே மிகப் பெரிய கிரிமினல் கூடாரம் என்பதுதான் அது.



இந்து வெறி பாரதீய ஜனதா ஆளும் ம.பி.யிலுள்ள ராய்கார் மாவட்டத்தில் கடந்த மார்ச் 24-ந் தேதியன்று மதம் மாறும் விழா கோலாகலமாக நடத்தப்பட்டது. மாநில பாரதீய ஜனதாவின் துணைத் தலைவரும், ஆர்.எஸ்.எஸ். தலைவர்களும் முன்நின்று நடத்திய இந்த விழாவில் 4000 கிறித்துவர்கள் இந்து மதத்துக்கு மாறிவிட்டதாகவும், கும்பிசுகா என்ற கிராமம் முழுவதுமே இந்து மதத்துக்குத் திரும்பிவிட்டதாகவும் இந்து வெறியர்கள் தம்பட்டமடித்தனர். உண்மையில் 4000 பேர் மதம் மாறிவிட்டதாக கூறப்பட்ட இந்த விழாவில் 1300 பேர் தான் கலந்து கொண்டனர். அவர்களும்கூட இந்துக்களோ கிறித்துவர்களோ அல்ல; ஆதிவாசிகள். சர்னா எனப்படும் குல தெய்வ வழிபாட்டைக் கொண்டவர்கள். இப்பகுதியில் கிறித்துவ மதம் பரவி வருவதைக் கண்டு பீதியடைந்த இந்து வெறியர்கள், ஆதிவாசிகளை துப்பாக்கி முனையில் மிரட்டி இழுத்து வந்து அவர்களுக்கு கட்டாயமாக பூணூலை மாட்டி மதமாற்ற விழாவை நடத்தியுள்ளனர். இந்து வெறியர்கள் எப்பேர்பட்ட பித்தலாட்டக்காரர்கள் என்பது இப்போது புரிகிறதல்லவா?

### அமெரிக்காவின் அழகு இதுதான்!

''நாகரீக சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் சமமானவர்கள்; ஆண்களுக்கு இணையான ஊதியம் பெண்களுக்கும் தரப்பட வேண்டும் என்கிற சட்டமெல்லாம் ஏட்டுச் சுரைக்காயாகிவிட்டது. எங்கள் உரிமைகளை நசுக்குவதை ஒருபோதும் அனுமதியோம்!'' என்று ஆயிரக்கணக்கான பெண்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் முழங்கினார்கள். இது ஏதோ இந்தியா போன்ற ஏழைநாடுகளில் நடந்த போராட்டமல்ல. நாகரீகத்தை உலகுக்கே கற்றுத்தருபவர்களாக கூறிக் கொள்ளும் அமெரிக்காவில்தான இப்போராட்டம் நடந்துள்ளது. 1979-ம் ஆண்டிலிருந்து ஒரு இன்சூரன்சு நிறுவனத்திலிருந்து 800 பெண்கள் படிப்படியாக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள் காரணம், அவர்கள் இளமையும் கவர்ச்சியும் குறைந்துவிட்ட பெண்கள் என்பது தான். இதை எதிர்த்து அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த அவர்கள் வெற்றிபெற்றுள்ளதோடு, 15 லட்சம் டாலர் அளவுக்கு நட்ட ஈடும் பெற்றுள்ளனர். ஜனநாயகம், மனித உரிமை பற்றி வாய்கிழிய பேசும் ஏகாதிபத்திய உலகில் பெண்கள் இன்றும் கூட இரண்டாந்தர குடிக்களாகத் தான் இருக்கிறார்கள் என்பதை இச்சம்பவம் மீண்டும் நிரூபித்துள்ளது.

### பா.ஜனதாவுடன் இணைகிறார்கள் வலது கம்யூனிஸ்டுகள்!

கடந்த ஏப்ரல் மத்தியில் ஐதாராபாத் நகரில் 15-வது அகில இந்திய மாநாட்டை நடத்திய வலதுகள், மார்க்சியத்தை இந்திய மண்ணுக்கேற்ப வளர்க்கப் போவதாக அறிவித்துள்ளனர். இதன்படி, அரசியல் பொருளாதார விடுதலைக்கு மாக்சியத்தைப் போலவே இந்து மதமும் ஒரு கருவியாக உள்ளது என்று அங்கீகரித்துள்ளனர். ''விவேகானந்தரும் காந்தியும் சமூக மாற்றத்துக்கு இந்து மதத்தின் முற்போக்கு அம்சங்களைப் பயன்படுத்தியுள்ளனர். வேதங்களிலும் கீதையிலும் மனிதநேயக் கருத்துக்கள் மண்டிக்கிடக்கின்றன. மதவெறி சக்திகளுக்கு எதிராக நாம் இவற்றைப் பிரச்சாரம் செய்யவேண்டும். சமுதாய விடுதலைக்கு மதம் முக்கிய பங்காற்றுவதால் முன்னாள் சோவியத் அதிபர் கோர்பச்சேவ் மத நிறுவனங்களை அங்கீகரித்தார்'' என்று இந்து கம்யூனிஸ்டுகளாக சீரழிந்துவிட்ட வலதுகள் தமது செயலுக்கு சித்தாந்த விளக்கமும் அளித்துள்ளனர். இதிலே வெட்கக்கேடு என்னவென்றால், தம்மை நக்சல்பாரி புரட்சியாளர்கள் என்று கூறிக் கொள்ளும் ஓடுகாலிகளான இ.பொ.க.(மா-லெ) லிபரேஷன் குழுவினர் வலதுகளின் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இதற்கு அங்கீகாரம் அளித்துள்ளனர்.

படிப்பகம்

ஆசிரியர், வெளியிடுபவர்: வி.வல்லபேசன், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை-49. அச்சிடுபவர்:
பிரேம் பிரஸ், 107-ஏ, ...

www.padippakam.com





பஞ்சாப்:

# உயர் நீதிமன்ற நீதிபதிக்கும் 'தடா'

இந்த நாட்டில் ஒவ்வொரு நாளும் குடியுரிமை, ஜனநாயக உரிமைகள் பறிக்கப் படுகின்றன; எல்லாம் 'ஜனநாயகம்' என்ற பெயராலேயே செய்யப்படுகின்றன. பஞ்சாபில் அரசு பயங்கரவாத ஆட்சி இப்படித் தான் நடக்கிறது. பஞ்சாப் மக்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக இழிவுபடுத்தப்படு கிறார்கள்.

கடந்த மாதம் ஏப்ரல் 3 அன்று ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அஜித்சிங் பெயின்ஸ் கைது செய்யப்பட்டு, கையில் விலங்கிட்டுக் கொண்டு செல்லப்பட்டார். அனந்தபூர் சாகிபில் அவர் ஆற்றிய உரைக் காக தடாவின் கீழ் வழக்கு போடப்பட்டது. ராஜத்துரோகக் குற்றம் - அரசுக்கு எதிராகச் சதி - இதுதான் குற்றச்சாட்டு. அவரது வார்த்தைகளிலேயே சொன்னால், - "முட்டாள்தனம். சதி என்று சொல்லுமளவுக்கு நான் ஏதும் பேசவில்லை. ஆறு சீக்கிய மத அமைப்புக்கள் தேர்தலைப்புறக்கணித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றின. அதற்காக ஒரு கூட்டுக் கூட்டம் நடந்தது. அதில் நான் பஞ்சாபில் மனித உரிமைகள் பறிக்கப்படு வதைப் பற்றிப் பேசினேன். ஜனநாயகத்தில் தேர்தலைப் புறக்கணிப்பதும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உள்ள உரிமை. 21 சதவீதம் ஓட்டுப் போட்டுள்ளதால் பியாந்த்சிங் பதவி ஏற்றிருக்கவே கூடாது. 79 சதவீதம் மக்கள் புறக்கணித்திருப்பது டெல்லிக்கெதி ரான மக்கள் கருத்து"

அவரது கைதுக்கு முக்கிய காரணம் - மனித உரிமைகள் நசுக்கப்படுவதற்கெதி ராக ஓயாமல் அவர் நடத்திவரும் போராட்டம். அவர் பஞ்சாப் மனித உரிமைகள் அமைப்பின் தலைவர். பல வருஷங்கள் தொடர்ந்து ஜனாதிபதி ஆட்சியில் நடந்த கிரிமினல் குற்றங்கள் போலீஸ் கொட்டடிக் கொலைகளை அவர் அம்பலமாக்கி வருகி றார். மனித உயிர்களைக் காலில் போட்டு மிதித்துச் சாகடிக்கும் அளவு அரசாங்கத் தின் அதிகார வரம்புகள் அதிகரிக்கப்படு வதை அவர் சாடினார். அரசாங்கம் அவற்றை மறுத்தது. "என்ன நடவடிக்கை? அவர்கள் ஒன்றுமே எடுக்கவில்லை. போலீசு செய்த முறைகேடுகளுக்காகப் பரி சுகள் தந்தார்கள். சில வருடங்களுக்கு முன் னால் இன்ஸ்பெக்டர்கள், இப்போது மாவட்டத் தலைவர்கள். வீர பராக்கிரமச் செயல்களுக்காக அவர்களுக்கு ஜனாதிபதி யின் பதக்கங்கள், பரிசுகள் கிடைத்தன"

குற்றவாளிகள் வெளியே. நிரபராதி கள் கூண்டுக்குள்ளே, சிறைக் கொட்டடி யிலே. நீதிபதியிடமே சட்டங்கள் செல்லாது என்று நடைமுறைப்படுத்திக் காட்டியது போலீஸ். அஜித்சிங் பெயின்ஸ் பிழைப்புக் காக வாழ்ந்த நீதிபதி அல்ல; தன்னைச் சுற்றி சட்டம் போலீஸ் துறை நாறிக்கொண்டி ருப்பதைப் பார்த்து கண்ணையும், மூக்கை யும், வாயையும் பொத்திக் கொண்டு சும்மா போய்விடாத நீதிபதி. அவர் நேர்மையான நீதிபதி என்று பஞ்சாப் உயர் நீதிமன்றத்தில் பெயர் எடுத்தவர்; அதிகாரங்களுக்குச் சோரம் போகாதவர் பெயின்ஸ். அதனால் தான் ஒரு சாதாரன பஞ்சாபிய உழைப்பா ளிமீது எவ்வளவு போலீஸ் சித்திரவதை நடத்தப்படுகிறதோ அத்தனையும் இவர் மீதும் நடத்தப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் 3 காலை 9 மணிக்கு கைது செய்யப்பட்டார் பெயின்ஸ்; மறுநாள் இரவு 7.30-க்குச் கைது செய்ததாக போலீஸ் நாட் குறிப்பில் பொய்யை எழுதினார்கள்; கைது செய்ததிலிருந்து தொடர்ந்து கைவிலங்கு மாட்டியிருந்தார்கள். கிரிமினலுக்குக்கூட கைவிலங்கு போடக் கூடாது என்று சட்டத் தில் உள்ளது. கைது செய்ததும் அவரை கண்மண் தெரியாமல் இழுத்துப்போய் போலீஸ் வேனில் தள்ளினார்கள்; காவல் நிலையத்தில் நிற்கவைத்தே பேசினார்கள்; அன்றிரவு முழுவதும் தூங்குவதற்கு அனும திக்கவில்லை. அடுத்த நாள் ரோபார் உள வுத்துறை அலுவலகத்துக்கு கூட்டிச் சென்று வெயிலில் 2 மணி நேரம் நிற்கவைத்தபிறகு அடையாளம் தெரியாத இடத்துக்கு விசா ரிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கே ஓர் இருட்டறையில் இளை ஞன் ஒருவன் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டு அம்மணமாகப் போடப்பட் டிருந்தார். 'உன்னையும் இப்படித்தான் செய்வோம். உன் குடும்பத்தையே பூண் டோடு அழித்துவிடுவோம்' என்று பெயின்ஸை மிரட்டினான் இன்ஸ்பெக்டர் ஜஸ்பால்சிங். இந்த மிரட்டலுக்கெல்லாம் பணியவில்லை பெயின்ஸ். வயது 70 இரு தய நோய் உள்ளவர். கைது செய்யப்பட்ட திலிருந்து மிருகத்தனமாக நடத்தப்பட்டா லும் உறுதி குலையாமல் இருக்கிறார்.

அவர் முன்பு வேலை செய்த சட்டத்து றையும் அவரை மிக மோசமாகவே நடத்தி யது. என்ன அதிகாரத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார் என்பதை நீதிபதி பி.டி. கார்க் உறுதி செய்யவில்லை. எஃப் ஐ ஆரில் (எண் 41, 31.3.91) அவர் பெயர் ஒரு முறைகூட இல்லை. இதைப் பற்றி கார்க் கவலையேபடவில்லை.

ஆள்பவர்கள் துப்பாக்கிகள் அரசு வன்முறை துணைகொண்டு காஷ்மீர், பஞ் சாப், ஜார்கண்டில் தனிநபர் வன்முறையை அடக்குவதாகச் சொல்கிறார்; பெயின்ஸ் முழங்குவது போல 'அரசு பயங்கரவா தத்தை முடிவுக்குக் கொண்டுவராமல் தனிந பர் வன்முறையைத் தடுக்கமுடியாது. முத லில் நெருப்பை அணைக்காமல் கொதிக் கும் தண்ணீரைக் குளிர வைக்கமுடியுமா?'.

நீதிபதியின் கைதையும் அவருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் எதிர்த் தும், உடனே விடுவிக்கக் கோரியும் பஞ் சாப் மாநில வழக்கறிஞர்கள் நீதிமன்றங்க ளைப் புறக்கணித்து வருகின்றனர். உலக அளவில் கண்டனங்கள் எழுந்துள்ளன. இந் திய நீதிமன்றத்தின் வாயிலில் நீதிக்காகக் காத்துநிற்கிறார் ஒரு நீதிபதி!





மக்கள் கலை இலக்கியக் கழக வெளியீடு

- பார்ப்பன ஆதிக்கத்திற்கெதிராக எச்சரிக்கை!
- துதிபாடும் மந்திரிகளுக்கு ஒரு சூடு!
- இந்து மதவெறிக்கு ஒரு சாட்டையடி!
- 'தடா'வின் கோர நடனத்திற்கு எதிராகப் போர்முழக்கம்!
- காவிரியின் துயரம்

அனைத்தும் பாடல்களாக... கேலியும், சோகமும், கோபமும் கொப்பளிக்கும் பாடல்களைக் கொண்ட ஒலிப்பேழையாக...

பேழை விலை: ரூ.30/-
பதிவுத் தபால் செலவு: ரூ.10/-

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:
ஆர்.சீனிவாசன், 45, செங்குன்றம் ...
வில்லிவாக்கம், சென்னை - 600 04...


படிப்பகம்